# சமுதாய வளர்ச்சி

தமிழக முதலமைச்சர்

**திரு. எம். பக்தவத்சலம்**

தொகுப்பு :

**மு. நமசிவாயம்**

வள்ளுவர் பண்ணை

பிராட்வே - சென்னை.1

V2ı,Alg7M97
N64

வெளியீடு : 148
முதற் பதிப்பு ஆகஸ்டு '64
பதிப்புரிமை பெற்றது.

**விலை ரூபாய் மூன்று**

அச்சிட்டோர் :
ஜீவன் பிரஸ், சென்னை-5.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 11045l
EGMORE, MADRAS

## முன்னுரை

நமது பிரச்னைகள் ஒன்றிரண்டல்ல. அனேகம். நம்முடைய சமுதாய வளர்ச்சிக் கேற்ப, அரசியல் பொருளாதார அபிவிருத் திக்கேற்ப இந்தப் பிரச்னைகளும் விரிவடைந்து கொண்டு போகின்றன. சில சமயங்களில் மிகச் சிக்கலகாவும் ஆகிவிடுகின்றன.

இவைகளை நம்மால் நிரந்தரமாகத் தீர்க்க முடியுமா—முடியாதா என்பது வேறு விஷயம். ஆனால் இவற்றைப் பற்றி நமக்கு ஒரு தெளி வான கண்ணோட்டம் இருக்க வேண்டும். அது மிகவும் முக்கியம்.

அறநிலையப் பாதுகாப்பிலிருந்து, நமது அன்றாட வாழ்க்கை நிலை வரையில் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நிரம்ப இருக்கின்றன. அவைகளைப் பற்றி நான் அங்கங்கே பேசுகையில் எனது கருத்துக் களைக் கூறி வந்திருக்கிறேன்.

துடிப்பும்—ஆர்வமும் மிகுந்த எழுத்தாளர் திரு. மு. நமசிவாயம் எனது பேச்சுக்களை சேகரித்து, புத்தக வடிவில் கொண்டு வந்திருக்கிறார். அந்த முயற்சியில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதே என் எண்ணம்.

அழகிய முறையில் இதை அச்சிட்டு வெளிக்கொணரும் வள்ளுவர் பண்ணையைச் சேர்ந்த அன்பர்களுக்கு என் நன்றி.

சென்னை,
*11—8—64.*

**எம். பக்தவத்சலம்**

## பதிப்புரை

தமிழக முதலமைச்சர் திரு. **எம். பக்தவத்சலம்** அவர்களது 'சமுதாய வளர்ச்சி' என்னும் இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இதனை அழகுறத் தொகுத்துத் தந்த திரு. மு. நமசிவாயம் அவர்கட்கும், வெளியிட அனுமதி தந்த முதலமைச்சருக்கும் எமது நன்றி.

சென்னை,
*12—8—64.*

**ந. பழனியப்பன்**
**வள்ளுவர் பண்ணை**

# தொகுப்புரை

நாற்பதாண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்தின் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பாடுபட்டு வருபவர், பழம்பெரும் தேசபக்தர்—முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம். அவர் தம் பேச்சுக்களைத் தொகுத்து நூல்வடிவில் வெளியிட விரும்பிக் கேட்டேன். அன்புடன் அனுமதி தந்தார்.

'சமுதாய வளர்ச்சி' என்ற இத்தொகுப்பில் அறநிலையங்கள், தொழிலாளர் பிரச்சினை, பஞ்சாயத்து அமைப்பு, மாதர் நலன், குற்றமும் சீர்திருத்தமும் முதலிய பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளைக் குறித்து முதலமைச்சர் ஆங்காங்கே தெரிவித்த கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

எனது முயற்சிக்கு ஆதரவு தந்து ஊக்குவிக்கும் முதலமைச்சருக்கும், நூலை வெளியிடும் எனது நண்பர் திரு. ந. பழநியப்பனுக்கும் எனது நன்றி.

சென்னை,
15—8—64.

மு. நமசிவாயம்
தொகுப்பாளர்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அற நிலையப் பாதுகாப்பு | ... 9 |
| 2. | பல்கலை வளர்ச்சி | ... 16 |
| 3. | அவசியமான மேற்பார்வை | ... 21 |
| 4. | யாருக்குத் திருப்பணி! | ... 30 |
| 5. | சுவரும் சித்திரமும் | ... 37 |
| 6. | அறம் சிறக்க | ... 45 |
| 7. | தொழில் தகராறு | ... 52 |
| 8. | வேலை வாய்ப்பு | ... 63 |
| 9. | உரிமைக்கு உறுதி | ... 68 |
| 10. | குறைந்தபட்ச ஊதியம் | ... 75 |
| 11. | விடுமுறை வசதி | ... 81 |
| 12. | நல்ல சூழ்நிலை | ... 87 |
| 13. | கைத்தொழில் இயக்கம் | ... 90 |
| 14. | கொள்கை உணர்வு | ... 97 |
| 15. | கதர் உற்பத்தி | ... 103 |
| 16. | இணைந்த செயல் | ... 109 |
| 17. | கதர்ப்பணி | ... 113 |
| 18. | மகத்தான பொறுப்பு | ... 118 |
| 19. | பஞ்சாயத்து அமைப்பு | ... 122 |
| 20. | நிர்வாக நடைமுறை | .. 133 |
| 21. | மாதர் நலன் | ... 143 |
| 22. | குற்றமும் தண்டனையும் | .. 148 |
| 23. | இளமையில் குற்றம் | .. 159 |

## முதலமைச்சரின் பிற நூல்கள்

பாரதப் பண்பு
தேசிய கவுரவம்
வளரும் தமிழகம்
அறிவுக் கோயில்
குடியரசும் மக்களும்
தமிழை வளர்ப்போம் வாரீர்
ஜனநாயகமும் மந்திரிசபையும்

★

# சமுதாய வளர்ச்சி

## 1. அற நிலையப் பாதுகாப்பு

மக்களிடையே ஒழுக்க நெறியை வளர்ப்பதற்காக, மக்கள் சீரிய வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக ஆலயங்களையும், அற நிலையங்களையும் நம் முன்னோர்கள் அமைத்தார்கள்.

### முன்னோர் நோக்கம்

ஏதோ மனிதர்களுக்கு வீடு இல்லையென்றால் எங்கேயாவது போய் தங்க வேண்டியிருக்குமே, அதைப் போன்று பரமசிவனுக்கு வீடு இல்லையென்றால் சுடுகாட்டில் போய் இருக்கவேண்டி வரும் என்றோ, அல்லது மகாவிஷ்ணுவுக்கு இடம் இல்லையென்றால் திருப்பாற்கடலை நோக்கிப் போக வேண்டியிருக்குமே என்று நினைத்தோ இந்த ஆலயங்களை எல்லாம் நமது முன்னோர்கள் கட்டவில்லை. மக்களுடைய நல்வாழ்க்கைக்காகத்தான் இதையெல்லாம் அமைத்திருக்கிறார்கள். அதற்குரிய அமைப்பில் இந்த ஆலயங்கள் எல்லாம் அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

இம்மாதிரி முன்னோர்களால் விடப்பட்டிருக்கிற, அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தர்ம ஸ்தாபனங்

களுடைய நடவடிக்கைகள் எல்லாம் சரியான முறை யில் நடக்கும்படியான வழியில் நாம் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### கலையும் வாழ்வும்

பழைய கோயில்களையெல்லாம் எடுத்துக் கொண் டால் எத்தனையோ சிறப்புகள் இருக்கின்றன. ஒப்புயர் வற்ற கலைகள் எல்லாம் இருக்கின்றன. அதோடு பல இலக்கியங்களும் வளர்ந்திருக்கின்றன. இதன் மூல மாகவே பல பாமாலைகளும் நமக்குக் கிடைத்திருக் கின்றன. இவ்விதம் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய பல தமிழ் இலக்கியங்கள் நமக்குக் கிடைத்திருக் கின்றன. சமஸ்கிருதத்தை எடுத்துக் கொண்டாலும் கூட பல இலக்கியங்கள் இந்த முறையிலே கிடைத் திருக்கின்றன என்று சொல்லலாம்.

வெறும் இலக்கியங்கள் மட்டுமல்ல. சிறந்த கலைகள் எல்லாம் வளர்ந்து வந்திருக்கின்றன. கலைகள் இல்லாமல் மக்கள் நல்வாழ்க்கை நடத்த முடியாது. மற்றொன்றையும் நாம் பார்க்க வேண்டும். இசைக்கலை, நாட்டியக்கலை, நாடகக்கலை முதலிய கலைகள் எல்லாம் இன்றைக்கு அழிந்து கொண்டு போகின்றன. அதே போன்றுதான் ஓவியக் கலைகளும் அழிந்து கொண்டே போகின்றன. தஞ்சை அரசரால் அமைக்கப்பட்ட ஓவி யங்கள் எல்லாம் இன்றைக்கு அழிந்து கொண்டே போகின்றன. அவைகளைப் புதுப்பிப்பதற்குக் கூட முடியவில்லை. இந்தக் கலைகளை எல்லாம் நாம் பாது காக்க வேண்டியிருக்கிறது.

அதே போன்றுதான் நல் வாழ்க்கைக்குப் பலன் தரக்கூடிய தேவாரம், திருவாசகம் இவைகளை எல்லாம் நல்ல முறையில், அர்த்தம் விளங்கக்கூடிய முறையில் எல்லோரும் படிக்க வேண்டும். படிப்பதோடு மட்டு



மல்ல, அதைத் தானும் அனுபவித்து மற்றவர்களும் அனுபவிக்கும்படியான நிலையில் அவைகளைப் பாரா யணம் செய்ய வேண்டும். இவைகளை எல்லாம் நடை முறையில் சீராகப் பயன் தரத்தக்க முறையில் கொண்டு வரவேண்டும்.

### சரியான பரிபாலனம்

அற நிலையங்கள், கோயில்கள், மடங்கள் எல்லாம் சீரான முறையில் நடைபெற வேண்டும். சீராகப் பாதுகாக்கப் படவேண்டும். அந்த வகையில் அதி லுள்ள நிதிகளைத் தவறுதலாகப் பயன் படுத்து வதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அந்த ஸ்தபா னங்கள் சரியான அளவில் பாதுகாக்கப்பட வேண் டும். சரியான அளவில் பரிபாலனம் செய்யப்பட வேண்டும்; இன்னும் அந்த ஸ்தாபனங்களில் கிடைக் கக் கூடிய நிதிகள் மக்களுடைய வளர்ச்சிக்கும் பயன் பட வேண்டும் என்ற அறநிலையங்களின் உயர்ந்த கொள்கைகளுக்குக் குந்தகம் இல்லாத வகையில் இருக்க வேண்டும்.

ஆக, இந்த தர்ம ஸ்தாபனங்கள் சரியாக நடை பெறுவதற்கு, அதில் பற்று உள்ளவர்களுக்கு, நம்பிக்கை உள்ளவர்களுக்கு மனது புண்படாமல், உயர்ந்த இலட்சியங்களுக்கு முரண்பாடு இல்லாமல் அவை எந்த நோக்கத்தோடு நிறுவப்பட்டனவோ அந்த நோக்கத்திற்குக் குந்தகம் இல்லாமல் செயல் படுவதற்கு வேண்டிய மேற்பார்வை செய்வது அவ சியம்.

### சட்டரீதியான நடவடிக்கை

அறநிலையப் பாதுகாப்பிற்குத் தகுந்தபடி, சட்ட ரீதியான நடவடிக்கையை அரசாங்கம் எடுப்பது அவசியமாயிற்று.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் 1927 வது ஆண்டில், முதன் முதலில் கொண்டுவரப் பட்டது. அதற்கு முன்புகூட ஓரளவுக்குக் கட்டுப்பாடு இல்லாமல் இல்லை. அதற்கு முன்பு ஏதாவது ஒரு தேவஸ்தானம் சரிவர நடைபெறவில்லை என்று சொன்னால், சிவில் ப்ரொஸீஜர் கோடின்கீழ் பொதுமக்கள் சார்பாக அட்வகேட் ஜெனரல் கோர்ட்டில் வழக்குப் போட்டு, வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது உண்டு. அதற்குப் பிறகு இந்த தேவஸ்தானங்களின் நிர்வாகத்தைச் சீராகக் கவனிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடுதான் சட்டம் ஏற்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

கடைசியாக 1951 ல் அறநிலையப் பாதுகாப்பு இலாகாவே சர்க்காரின் ஒரு இலாகாவாக மாற்றி அமைக்கப்பட்டு, பின்னால் 1954ல் இந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு இப்பொழுது நிர்வாகம் நடந்து கொண்டு வருகிறது. பின்னால் மடங்கள் வேறு, கோயில்கள் வேறு என்பதாக, உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பு கூறியதால் மடங்களின் நிர்வாகத்தையும் சட்டரீதியான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர, அறநிலைய பாதுகாப்புச் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது.

இது மதச்சார்பற்ற அரசாங்கந்தான். ஆனால், இந்த அரசாங்கம் மக்களுடைய நன்மை தீமைகளில் அக்கறை கொண்டிருக்கிறது. ஒரு சில மக்கள் தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த தர்ம ஸ்தாபனங்கள் சீராக நடைபெறவில்லை யென்றால், சம்பந்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பரிகாரம் காண்பது இந்த மதச்சார்பற்ற அரசாங்கத்தின் கடமை, பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.



## அரசாங்கப் பொறுப்பு

மதச்சார்பற்ற அரசாங்கம் என்றால் எல்லா மதங்களுக்கும் பாதகம் ஏற்படாமல் அதனதன் கொள்கைகளைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதுதான்; அவைகளைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதைச் செய்வதுதான்; எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அதை நம்பி இருக்கக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான். அதுதான் மதச்சார்பற்ற அரசாங்கத்தின் கடமை, பொறுப்பு.

எல்லோரும் இந்நாட்டுப் பிரஜைகள். அவர்களைப் பாதுகாக்க அரசாங்கத்திற்கு உரிமையும் பொறுப்பும் இருக்கிறது. தொன்றுதொட்டு உள்ள ஒரு ஸ்தாபனம் சீராக நடைபெறவில்லையென்றால் அரசாங்கம் தலையிடுகிறது. இதற்கு முன்பு அந்நிய ஆட்சி நடந்த காலத்தில் ஒரு சில ஆண்டுகள் இந்த ஆலயங்கள் செம்மையாக நடைபெற வேண்டும் என்கிற நோக்கத்தோடு தனியாக அதற்கொரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார்கள். அப்போது அரசியல் சட்டம் அமுலில் இல்லை. அரசியல் சட்டத்தை நாம் ஏற்படுத்திக் கொண்ட பிறகு அதை மனத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒரு ஆலயம் என்றால் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே வழிபடுகிறார்கள். அவர்களுக்குச் சில உரிமைகள் உண்டு. சில நன்மைகளை அவ்வாலயத்தின் மூலமாகவோ, மடாலயத்தின் மூலமாகவோ அவர்கள் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆனால் அங்கே இருந்து அவற்றை பரிபாலிக்கின்றவர்கள் தவறாக நடந்து கொள்வார்களேயானால் இந்தப் பெரும்பாலான மக்கள் அதனால் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது இந்த அரசாங்கத்தின் கடமை

யாகும். அது அரசியல் சட்டத்திற்கும் விரோதமான செய்கை அல்ல.

## இந்துக்களுக்கு மட்டுமா ?

இதெல்லாம் இந்துக்களுக்கு மட்டும்தானா ? இந்து மத ஸ்தாபனங்களுக்குத்தானா இந்தப் பாதுகாப்பு, மேற்பார்வை, தலையீடு என்று சிலர் கேட்கிறார்கள்.

இப்படித் தலையிடுவது என்றால், மற்ற மதத்தினர்
கள் என்ன ஆவது என்று குறிப்பாகக் கேட்கப்படு
கிறது. இத்தகைய சட்டங்கள், இத்தகைய நடவடிக்
கைகள், இத்தகைய தலையீடுகள் இவைகளினால் இந்து
மதத்தைச் சார்ந்தவர்களுக்கு ஒரு பாதகம் வரும்.
இப்படி எங்களுக்கு மாத்திரம் கஷ்டம் எதற்கு, மற்ற
வர்களுக்கு மட்டும் இல்லாமல், இது பாரபட்சம்
இல்லையா என்று சொல்லலாம். ஆனால், அப்படி
யில்லை. அந்த தர்ம ஸ்தாபனங்கள் சீராக நடைபெற
வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இத்தகைய
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதுதான்
இலட்சியம், அடிப்படை நோக்கம். இதை நாம் புரிந்து
கொள்ள வேண்டும்.

மற்ற மதத்தினர்களுக்கு இம்மாதிரி சட்டம் வரவில்லையே ! மற்ற மதத்தினர்கள் நன்மையை அடைய வேண்டாமா என்ற கவலையைத் தெரிவித்தால், அது வரவேற்கக் கூடியதுதான். அவர்களுக்கு நான் சொல்லுகிறேன், முஸ்லிம் மதத்தைச் சார்ந்த ஸ்தாபனங்களைப் பொறுத்தமட்டில் மத்திய அரசாங்கம் பார்லிமெண்டில் "வக்ப் ஆக்ட்" என்ற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்த சட்டம் நம்முடைய ராஜ்யத்திலும் அமுலுக்கு வந்திருக்கிறது. அந்த சட்டத்தின் கீழ் ஒரு போர்டும் அமைக்கப்பட்டிருக்கிறது.



ஆகவே, இந்துக்களுக்குப் பாதகமான வகையில் தான் இதை ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று யாரும் நினைக்க வேண்டாம். நம்முடைய முக்கியமான குறிக்கோள், தர்ம ஸ்தாபனங்கள் எல்லாம் சரியாக, சீராக நடைபெற வேண்டும். அந்த ஸ்தாபனங்களில் எல்லாம் தவறுகள் நடைபெறாமல், எந்த நோக்கத்திற்காக அந்த ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் எல்லாம், அந்த இலட்சியங்கள் எல்லாம் நிறைவேற வேண்டும். அதுதான் முக்கிய நோக்கம்.

## சட்டம் எதற்கு ?

இந்தச் சட்டம் எதற்கு, இப்போது நடப்பது போலவே இதை விட்டுவிடலாம் என்றும், ஊழல்கள் இருந்து கொண்டிருக்கிறது என்றால், எல்லாவற்றிலும் இம்மாதிரிதான் ஊழல்கள் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தால் எந்த விதமான பிரயோசனமும் ஏற்பட்டுவிடப் போவதில்லையென்றும் கூறப்படுகிறது. ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் அதை அகற்றுவதற்காகத்தான் நாம் எல்லோரும் பாடுபடுகின்றோம்.

## 2. பல்கலை வளர்ச்சி

பழைய கால முறையிலேயே கோயில்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும் என்ற எண்ணத்துடன் அரசாங்கம் சும்மா இருக்க முடியாது. நல்ல முறையில் கோயில் நிர்வாகங்கள் நடத்தப்பட வேண்டும். இதன் மூலமாகப் பழைய கலைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

### கலை வளர்ச்சி

ஆலயங்கள், அறநிலையங்கள் உயர்வதன் மூலமாக நம்முடைய கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் இவையெல்லாம் வளருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஓவியக் கலை நாளுக்கு நாள் மறைந்து கொண்டே போகிறது. அந்த அற்புதமான கலை மறைந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். பழைய ஓவியத்தைப் புதுப்பிக்கக் கூடியவர்கள் இன்று கிடைப்பதில்லை. அவர்களைத் தேடிப்பார்த்தால்கூட அவர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்படிப்பட்ட உயர்ந்த கலைகள் மறைந்து போகாமல் அவைகளை வளர்ப்பதுதான் முக்கிய நோக்கம். அதற்கென்று ஒன்றிரண்டு ஸ்தாபனங்களை அந்த ஆலயங்கள் சார்பாக அமைப்பது என்பதும் நோக்கம்.

முற் காலங்களில் நாதஸ்வரக்கலை கோயில்களில் வளர்ந்து வந்தது. இப்போது நாதஸ்வரக்கலை



மறைந்து கொண்டு வருகிறது. அதைக் கவனித்து இப்போது நாதஸ்வரக்கலையைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நாதஸ்வரப் பயிற்சி பழனியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக ஓவியக் கலையை வளர்க்கவேண்டும் என்றும் எண்ணமிருக்கிறது. இதற்காகப் பல நிபுணர்களை நியமித்து இந்தக் கலையை எல்லாம் வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்.

இதே போன்று டெல்லியில் பல நிபுணர்களையும், பல அறிஞர்களையும் கொண்ட லலித கலா அக்காடமி இருப்பதைப் போன்று 'மல்டி பர்பஸ் ஓரியண்டல் எடுகேஷன் இன்ஸ்டிடியூஷன்' என்ற ஒரு ஸ்தாபனத்தை பழனியில் தொடங்கியிருக்கிறோம். தஞ்சையிலும் இம் மாதிரி ஸ்தாபனத்தைத் தொடங்கலாம். இந்த ஸ்தாபனத்தின் மூலமாக இலக்கியங்கள், கலைகள் இவைகள் எல்லாம் வளருவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

### பயிற்சிப் பள்ளிகள்

இப்போது மத்திய சர்க்காரின் ஆதரவில் சிற்பக் கலைகளுக்கும், சங்கீதப் பயிற்சிக்கும் பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாகக் கலைகளில் ஆராய்ச்சி நடத்த முடியும். பண்ணில் ஆராய்ச்சி நடத்த முடியும். தேவாரம், திருவாசகம் இவைகளில் எல்லாம் ஆராய்ச்சி நடத்த முடியும்.

இதைப் பற்றி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் அவர்களிடமும் கலந்தபோது அவர்களும் சில கருத்துக்களை தெரிவித்தார்கள். அதாவது இந்தப் பயிற்சிகளை பெற்ற பிறகு அவர்கள் மேல்படிப்பு படிப்பதற்கு வழி செய்து கொடுக்கவேண்டும். இம்மாதிரிப்பட்ட படிப்பு படித்த பின்னுல் அவர்கள் யூனிவர்சிடி படிப்பு

படிப்பதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இதைப் பற்றி இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதே முறையில் எல்லாக் கலைகளையும் சிறந்த முறையில் அறிந்து கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## நல்ல நிர்வாகம்

கோயில்களில் வேலை பார்க்கின்றவர்கள் எல்லாம் பயிற்சிபெற வேண்டும். இப்போதுள்ள அமைப்பின் படி பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் பல இடங்களிலும் நல்ல முறையில் நிர்வாகம் நடந்து வருகிறது. பல முன்னேற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன என்பதைப் பலர் அறிவார்கள். என்னைச் சந்தித்த ஒரு பெரியவர், கழிந்த காலங்களை விட இப்போது சில ஆண்டுகளாக நல்ல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன, கோயில்கள் எல்லாம் சுத்தமாக இருக்கின்றன, முக்கியமாகப் பல இடங்களிலும் கலை வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று கூறினர்.

இம்மாதிரியான நல்ல சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்ற முறையில்தான் இப்போது ஆகம பயிற்சி, வைகானச பயிற்சி, பாஞ்சராத்திரைப் பயிற்சி போன்ற பயிற்சிகள் எல்லாம் இப்போது நடத்தப்படுகின்றன. இது தவிர எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர்களுக்கு எல்லாம் இப்போது எக்ஸ்டன்ஷன் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஏதோ உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்ற அளவில் மட்டுமல்லாமல் முக்கியமாகக் கோயில்களை எல்லாம் நல்ல முறையில் நிர்வாகம் செய்வதற்குத் தகுந்த வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



## பூஜை இன்றி...

அர்ச்சகர் பயிற்சி, அத்யாபகர் பயிற்சி, வேத பாராயணகார் பயிற்சி, ஓதுவார் பயிற்சி முதலியவைகள் வேண்டாம், அது அவசியம் இல்லை என்று கருதுகிறார்கள் சிலர். அவர்களுக்கு நான் சொல்லுகிறேன், சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டும். ஆகவே, ஆலயங்களைப் பொறுத்த மட்டில் பூஜைகள் நடக்க வேண்டும். பூஜை இல்லாமல் கோயில் இல்லை.

எவ்வளவோ கோயில்களில் சிற்பக்கலை அதிகமாக இருக்கின்றது. அதைக் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. பூஜை இல்லாவிட்டாலும் அங்குள்ள சிற்பக்கலையை மக்கள் அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. அதை அனுபவிக்கக் கூடியவர்களுக்குத் தான் அதைப் பற்றித் தெரியும்.

## முக்கியமான செலவு

பூஜை செய்வது என்பது நம்முடைய இஷ்டம் போல் பூஜை செய்வது இல்லை. அது ஒழுங்காக நடக்க வேண்டியதாக இருக்கிறது. அர்ச்சகர் என்றால் அர்ச்சனை மட்டும் செய்வது இல்லை. நல்ல முறையில் பூஜையும் செய்யவேண்டும். பூஜை செய்வதுதான் முக்கியமானது. அப்படிச் செய்வதற்கு தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலியவைகளில் அனுபவம் இருந்தால்தான் நல்ல முறையில் பூஜையை நடத்தலாம். இதை நன்றாகத் தெரிந்தவர்கள் இதற்கு ஆட்சேபனையே தெரிவிக்க மாட்டார்கள். தெரியாதவர்கள் தான் ஆட்சேபனை தெரிவிப்பார்கள்.

தேவாரம், திருவாசகம், பிரபந்தம், வேதபாராயணம் முதலியவைகளை அனுபவித்தவர்கள், அதைக் கேட்டு, படித்து அனுபவித்தவர்கள், இப்பயிற்சி முறை

களுக்கு ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள். அதன் அருமை அவர்களுக்குத்தான் தெரியும். இதற்குச் செலவு செய்வது ஒரு முக்கியமான செலவு என்றே அவர்கள் கருதுவார்கள். கோயிலுக்கு வரக்கூடிய வருமானம் அவ்வளவையும் இதற்கு என்று செலவு செய்யப் போவது இல்லை. கோயிலுக்குச் செய்தது போகப் பாக்கி இருக்கக் கூடியதை வைத்துக்கொண்டு தான் இதற்குச் செலவு செய்யப்படுகிறது.

# 3. அவசியமான மேற்பார்வை

**அ**றநிலையப் பாதுகாப்பு என்றால், அதற்கான ஸ்தாபனம் தனியாக இயங்கலாமா அல்லது அது ஒரு அரசாங்க இலாகாவாகவே இயங்கலாமா என்ற பிரச்சினை அவ்வப்போது எழுந்துகொண்டே இருந்தது.

## தனி இலாகா

1951ம் ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தின் பிரகாரம் அந்த ஸ்தாபனத்தை தனியான ஒரு இலாகாவாக வைத்தோம். இதற்குப் பின்பும், முன்பும் நமக்கு ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக் கொண்டு இதைப் பரிசீலனை செய்திருக்கிறோம்.

சட்டமன்றத்தில் நீண்ட காலம் காரியதரிசியாக இருந்த திரு. கிருஷ்ண அய்யர் அவர்களை ஒரு ஸ்பெஷல் ஆபீசராகப் போட்டு எவ்வாறு இந்தச் சட்டத்தை நல்ல முறையில் திருத்தலாம் என்பதை முதலில் பரிசீலனை செய்யச் சொன்னோம். அவரும் முன்பு இருந்த சட்டத்தின் பிரிவுகளை எல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அவர்கள்கூட அதில் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஸ்தாபனங்களைப் பரிபாலனம் செய்கிற இலாகா தனியாக ஒரு ‘அடானமஸ்’படியாக இருக்கிற வரைக்கும் சரியாக இயங்க முடியாது. அரசாங்கத்தின் ஒரு

இலாகாவாக இருப்பதுதான் நல்லது என்று அவர்கள் சொன்னார்கள்.

முன்பு மைசூரில் பிரதம நீதிபதியாகவும், சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியாகவும் பணி யாற்றியிருக்கிற திரு. வெங்கட்டரமணராவ் நாயுடு வைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியும் அப்புறம் நியமிக்கப்பட்டது. அவர்களும் இவ்விஷயங்களை நன்றாகப் பரிசீலனை செய்து மதஸ்தாபன பரிபாலன இலாகா அரசாங்கத்தின் ஒரு இலாகாவாக இருப்பதுதான் நல்லது. அப்போதுதான் நன்றாகக் கவனிக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மசோதாவை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஹைகோர்ட்டிடமும் அபிப்பிராயம் கோரப்பட்டது. அவர்களும் இந்த வகையில் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்கள்.

## ஓரிருவர் தவறு

இப்படி நீண்டகாலமாக ஆராய்ந்து ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் இரண்டும் இவ்விஷயமாகக் கொடுத்துள்ள முடிவுகளையும் நன்றாகப் பரிசீலனை செய்து அரசாங்கத்தின் அனுபவத்தைக் கொண்டும், சட்டசபை அங்கத்தினர்களின் ஆலோசனைப்படியும் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சிலர் சொல்கிறார்கள், ஏதோ ஒருவர் இருவர் தவறு செய்யலாம்: அதற்காக இப்படி எதற்காகச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று. சட்டம் யாருக்கோ ஒருவருக்காக, இருவருக்காக என்று எப்போதுமே நினைக்கக் கூடாது. பலருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காரியத்தை ஒருவர் செய்தாலும்கூட அதைத் தடுக்க ஒரு சட்டம் இருக்க வேண்டியதுதான்.



"இந்தியன் பீனல் கோடு" இருக்கிறது. கொலைக் குற்றம் செய்கிறவர்கள் ஒருவர் இருவர்தான் இருக்கக் கூடும். எல்லோரும் கொலைக் குற்றம் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் அதைத் தவிர்ப்பதற்குச் சட்டம் செய்கிறோம். சட்டம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி ஒரு மடாதிபதி கேவலமாக நடந்து கொண்டார் என்றாலும் கூட அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் அவசியமாகத் தான் இருக்கிறது. பாக்கி எல்லோரும் யோக்கியமாக இருக்கிறார்கள் என்றாலும் இந்த ஒருவருக்காக ஒரு சட்டம் அவசியமாகத்தான் இருக்கிறது.

## மடாதிபதிகளுக்குப் பாதுகாப்பு ?

மடங்கள் சம்பந்தமாகச் செய்யப்பட்ட திருத்தச் சட்டம் பற்றி சிலர் தவறான புகார் சொன்னார்கள்.

"இந்த சட்டம் மடாதிபதிகளை பாதுகாப்பதற்காக இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவர்களுக்காகவே ஏற்பட்டது. அவர்களுக்கு வேண்டிய சலுகையைக் கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். ஆனால் அப்படி இல்லை. மடங்களைப் பாதுகாப்பது என்று சொன்னால் தவறாக இருக்காது. மத ஸ்தாபனங்களை பாதுகாப்பது என்று சொன்னால் தவறாக இருக்காது. ஆனால் மடாதிபதிகளுக்குப் பாதுகாப்பு என்று சொன்னார்கள். அதற்கு நேர்மாறாகத்தான் இந்தச் சட்டம் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தவறுதலாக நடக்கின்ற மடாதிபதிகளை நீக்குவதற்கும் இந்தச் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

**நல்லறம் காப்பது**

ஏதோ ஒரு மடாதிபதி, எனக்கு 'நல்லறம் காவலர்' என்ற பட்டத்தை தந்திருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன். சிலர் என்னை 'மதிப்புக்குரிய அமைச்சர்' என்று பல நிகழ்ச்சிகளின்போது குறிப்பிடுகிறார்கள். அவ்விதம் குறிப்பிடுவதை உண்மையாகத்தான் எடுத்துக் கொள்கிறேன். இவ்விதம் சொல்வதை நான் தவறுதலாக ஒருக்காலும் எடுத்துக்கொள்ள மாட்டேன். அந்த முறையில்தான் இதையும் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நல்லறத்தைக் காப்பது என்பது எல்லோருடைய கடமைதான். அதிலும் குறிப்பாக இந்தச் சட்டத்தின் நோக்கமே நல்லறத்தைக் காப்பதுதான். இந்தச் சட்டத்தின் அடிப்படையான கருத்தே நல்லறத்தைக் காப்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில மடங்கள் சீராக நடைபெறுகின்றன. அதைப் பெருமையுடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ரொம்பத் தவறுதலாக நடக்கக்கூடிய மடங்களும் இருக்கின்றன. ''இதுவும் ஒரு மடமா?'' என்று சொல்லக்கூடிய அளவுக்கும் மடங்கள் இருக்கின்றன. அதற்குக் கண்டிப்பான மேற்பார்வை வேண்டியதுதான். தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அது நம்முடைய கடமையும் பொறுப்பும் ஆகும்.

**நல்ல பக்குவம்**

மடங்கள் ஒழுங்காக நடைபெறவேண்டும். பரம்பரையாகவோ, இப்பொழுது இருக்கின்றவர்கள் நியமித்துவிட்டார்கள் என்றோ யாரையாவது பிடித்துக் கொண்டு வந்து, அவருக்கு காவி வேஷ்டி கொடுத்து, அவருக்கு ஒன்றும் தெரியாமல் இருந்தால் என்ன பிரயோஜனம்? அப்படிப்பட்டவர் பின்னால் தவறுதலாக நடப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது. மடங்கள் சீராக நடைபெறுவதற்கு, அதிலே வருகின்றவர்கள் நல்ல பக்குவம் அடைந்தவராக வரவேண்டும் என்பதிலே கவனம் செலுத்தவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.



இந்த வகையிலே, மடத்தின் மேற்பார்வைக்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. இதில் கவனம் செலுத்தி எவ்வாறு திருத்த முடியுமோ அந்த வகையில் சட்டத்தைத் திருத்தியுள்ளோம்.

**சட்ட அமுல்**

இன்னும் ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் தேவஸ்தான கமிட்டிகளில் இடம் தரவேண்டும் என்பது ஒரு அபிப்பிராயம். அதுவும் கவனத்தில் இருக்கிறது. ஏரியா கமிட்டிகளை நியமிப்பதிலும், டிரஸ்டிகளை நியமிப்பதிலும் ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடம் கொடுக்கவேண்டும் என்பதோடு பெண்மணிகளுக்கும் இடம் கொடுக்கவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இப்பொழுதே, பெண் டிரஸ்டிகளைப்போட்டு வருகிறோம். ஹரிஜனங்களும் டிரஸ்டிகளாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஏரியா கமிட்டிகளிலும் அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதில் மற்றொரு கருத்தும் இருக்கிறது. இம்மாதிரிப்பட்ட அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தை எல்லாம் அமுல் நடத்துகின்றபொழுது இதில் இருக்கின்ற காரியதரிசிகள் எல்லாம் இந்துவாகத்தான் இருக்கவேண்டும். இவர்களை நியமிக்கின்ற சமயத்தில் இந்துக்களைத்தான் நியமிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது சாத்தியமான காரியமல்ல.

அரசாங்கத்தின் நிர்வாகத்தில் மதத்தைப் புகுத்த முடியாது. எத்தனையோ சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்க அதிகாரிகளாக இருக்கலாம். இந்த விஷயத்தில் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் அதிகாரியாக இருக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

நீதிமன்றங்களிலும்கூட, இந்த முறையை ஒப்புக்கொள்வதில்லை. வேறு வகையில் பார்த்தால் பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தால் பட்சபாதமில்லாமல் தீர்ப்பு கிடைக்கலாம் என்றுகூடச் சொல்லலாம். அதேமாதிரி இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருக்க வேண்டும் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. திருஷ்டாந்தமாகச் சொல்லப்போனால், 'வக்ப் ஆக்ட்' சப்பந்தமான காரியங்களை எல்லாம் நிர்வகிப்பது இப்போது ரிவினியூ காரியதரிசிதான். இதற்காக முஸ்லிம்களைச் சேர்ந்தவர்கள்தான் இதை நிர்வகிக்க வேண்டும் என்று சொல்வதும் சரியல்ல.

## கிராமத்தில் விடுவதா ?

இவ்விதம் சட்டம் இருப்பதை எடுத்துவிட்டு எந்தெந்தக் கிராமங்களில் கோயில்கள் இருக்கின்றனவோ அவற்றை அந்தந்தக் கிராமங்களிலே விட்டு விடலாம் என்ற முறையிலும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இப்போதும்கூடச் சில கிராமங்களில் கிராம தேவதைகள் என்ற முறையில் எல்லாம் சிறிய கோயில்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் கிராமங்களிலுள்ளவர்களே நிர்வகித்து வருகிறார்கள். ஆனால் சில கிராமங்களில் இருக்கின்ற கோயில்கள் பெரியகோயில்களாக இருக்கின்றன என்பதோடு மட்டுமல்ல, அகில இந்திய ரீதியில், இந்த ராஜ்யத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, வெளி ராஜ்யங்களில் இருந்தும்கூட மக்கள் இந்தக் கோயில்களுக்கு வந்து போகின்றார்கள். ஆகவே இவைகளை எல்லாம் கிராமத்தில் விட்டுவிட வேண்டும் என்று சொல்வது சரியல்ல.



இந்தச் சட்டம் இப்போது புதிதாக கொண்டு வரப்பட்டச் சட்டம் அல்ல. முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இம்மாதிரிப்பட்ட ஸ்தாபனங்கள் எல்லாம் சரியான முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதோடு அவ்வப்போது ஏற்படுகின்ற அனுபவத்தை வைத்துக்கொண்டு சட்டத்தில் பல மாறுதல்களும் செய்யப்பட்டன.

## மகிழ்ச்சியும் பரவசமும்

இந்த சட்டத்தில் கமிஷனருக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகக் குறை சொல்லப்பட்டது. அந்த அதிகாரங்களை டிரஸ்டிகளுக்கு வழங்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இதில் ஒன்றும் போட்டா போட்டி இல்லை.

டிரஸ்டிகள் எல்லோரும் சரியாக நடந்துவந்தால் இந்த இலாகாவுக்கு அவசியமில்லை. மேற்பார்வைக்கு அவசியமில்லை. ஒவ்வொரு டிரஸ்டியும் சரிவர நடந்து வருகிறார் என்பதில்லை. டிரஸ்டிகளில் ஓரிருவர் தவறுகள் செய்கின்றனர். குற்றச் சட்டங்கள் எல்லாமே ஓரிருவர் குற்றம் செய்வதால்தான் இயற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே. டிரஸ்டிகள் எல்லோருமே குற்றம் செய்கிறார்களா என்று கேட்பதில் அர்த்தமில்லை.

சில இடங்களில் தர்மகர்த்தாக்கள் சரியாக நடப்பதில்லை, கணக்குகள் சரியாக இல்லை, துஷ்பிரயோகங்கள் செய்யப்படுகின்றன, ஸ்தாபனம் சரியாக நடப்ப

தில்லை. அதன் காரணமாகத்தான் 1939ல் இந்தச் சட்டம் முதன்முதலாக வந்தது. அந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு அதில் எவ்வளவோ மாறுதல்கள் செய்யப்பட்டதன் விளைவாக இந்த ஸ்தாபனங்களில் ஊழல்கள் நீக்கப்பட்டு இவை சரியாக நடைபெற்று வருகின்றன என்பதைக் கோயில் விவகாரங்களில் பரிச்சயமுள்ளவர்கள் உணர்வார்கள்.

முக்கியமாக, கோயிலுக்குப் போய்வருபவர்கள், மதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள், அரசாங்கச் சார் பற்றவர்கள், எத்தனையோ பெரிய அந்தஸ்தில் உள்ளவர்கள், நிலைமையை முன்பும் பின்பும் கவனித்தவர்கள், என்னிடம் வந்து, இந்த ஸ்தாபனங்கள் இப்போது எவ்வளவு சீராக இருக்கின்றன, எவ்வளவு சுத்தமாக இருக்கின்றன என்பதையெல்லாம் மிக்க மகிழ்ச்சியோடும் பரவசத்தோடும் சொல்லுகிறார்கள்.

## அதிகாரிகள் அவசியம்

இந்த மாதிரியான சட்டங்களைக் கொண்டு வந்து கோயில்களையெல்லாம் பாழ்படுத்திவிடுகிறோம் என்று கூடச் சிலர் குறிப்பிடுகின்றனர். அவர்கள் எத்தனை கோயில்களைப் பார்த்திருக்கிறார்களோ தெரியவில்லை. கோயில்களில் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அவ்வளவு அக்கறை இந்த சட்டத்தைக் கொண்டு வந்தவர்களுக்கும் இருக்கிறது. எல்லாம் சரியாக நடக்கும், எல்லாவற்றையும் டிரஸ்டிகளிடம் விட்டுவிடுங்கள் என்று சொல்வது சரியல்ல. எல்லோருமே சரியாக நடக்கிறார்கள் என்பதில்லை.

கோயில் பணத்தைத் திருப்பணிகளுக்குச் செலவிடலாம், அதை ஏன் அதிகாரிகளுக்குக் கொடுப்பது என்று கூறினால், கோயில்கள் சரியாக நடப்பதற்கு



அதிகாரிகள் தேவையாகத்தான் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இது போதாது, இது குறைவு, மேற்பார்வை இன்னும் அதிகமாக இருக்கவேண்டும் என்றுகூடச் சிலர் கூறினார்கள். அவசியமான மேற்பார்வைக்கு இந்த சட்டம் வகை செய்கிறது. தவறுகள் நடக்கவொட்டாது செய்ய வேண்டும். அதற்குக் கண்காணிப்பு அதிகமாக வேண்டியிருக்கிறது. அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் அளிக்க வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் செய்யாவிட்டால் பிரயோஜனமில்லை.

ஏரியாக் கமிட்டியைப் பொறுத்தவரையில், தேர்தல் முறை வேண்டும் என்று சொல்லப்பட்டது. மத நம்பிக்கையுடையவர்களும் தகுதியுள்ளவர்களும் ஏரியாக் கமிட்டியில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். தேர்தல் முறை வந்தால் இந்த நோக்கம் நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே ஏரியாக் கமிட்டியை நியமன முறையிலேயே அமைப்பதுதான் சரி.

4.

# யாருக்குத் திருப்பணி

கோயில் வருமானத்தில் உள்ள மிச்சப் பணத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப்பற்றி பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. "அங்கே இருக்கக் கூடிய பணத்தைக் கொண்டு கோயில் திருப்பணி செய்தால் போதாதா? எதற்காக மற்றதெல்லாம் செய்வது?" என்று கேட்கிறார்கள்.

## கடவுள் ஸ்வரூபம்

திருப்பணி செய்ய வேண்டியதுதான். ஆனால் திருப்பணி செய்தால் மட்டும் போதுமா? போதாது. அங்கு இருக்கும்படியான மக்கள் நன்றாக வாழ வேண்டும். அதுதான் முக்கியம். கோயில் கட்டியிருப்பதெல்லாம் சுவாமிக்காக அல்ல. சுவாமிக்குக் கோயில் தேவையில்லை. கோயில்களெல்லாம் மக்களுக்காகத்தான். உண்மையில் கடவுள் ஸ்வரூபத்தை உணர்ந்தவர்கள் அதை ஒப்புக்கொள்வார்கள். சுவாமிக்காக அல்ல கோயில்கள்—மக்களுக்காக; மக்களுடைய சீரிய நல்வாழ்விற்காகத்தான். இந்த நோக்கத்தில்தான் பழங்கால மக்கள் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திருப்பணியே செய்துகொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால் யாருக்குத் திருப்பணி! "அப்படிச் செலவு செய்வதாக இருந்தால், சமய சம்பந்தமான



செலவாக இருக்கவேண்டும்" என்று சிலர் சொல்கிறார்கள். எது சமய சம்பந்தமான செலவு? ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவது சமய சம்பந்தமில்லையா? அவர்கள் கருத்துப்படி ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவது சமய சம்பந்தமில்லையானால், பலரைப் பட்டினிபோட்டு என்ன சமயப்பணி செய்வது ?

## சமயப் பணி

சுந்தரமூர்த்தி நாயனார் என்ன செய்தார்? அப்போது பஞ்சமாயிருந்தது. எங்கேயெல்லாமோ போய்க் கேட்டார், நெல் கிடைக்கவில்லை. உற்சவம் நடக்கும்போது அடியார்களுக்குச் சாப்பாடு போடாமல் என்ன செய்வது என்று வருந்தினார். பிறகு நெல் கிடைத்தது. எல்லோருக்கும் அதைக்கொண்டு சாப்பாடுபோட்டார். இம்மாதிரி சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றில் வருகிறது. இது சமய சம்பந்தமில்லையா ?

ஒரு சுவாமிக்கு வைத்தியநாத ஸ்வாமி என்று பெயர். அங்கு இருக்கக்கூடிய கிராமத்தில் வைத்திய வசதி இல்லாமல் ஏழைகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே நாட்டு வைத்திய ஆராய்ச்சி—சித்த வைத்திய ஆராய்ச்சி—செய்வது என்று சொன்னால் அது தவறா ? அதுவும் வைத்தியநாத ஸ்வாமி கோயிலில் சித்தவைத்திய ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சொன்னால்—இந்த ஆராய்ச்சியினால் பலர் பலனடைகிறார்கள்—இது சமய சம்பந்தமில்லையென்று சொன்னால், வேறு எது சமய சம்பந்தம் என்று கேட்கிறேன்.

## மூட பக்தி அல்ல...

படிப்பு சொல்லித் தருவதும் சமயப்பணி என்பதுதான் என் கருத்து. சமய நூல்களாகிய தேவாரம்,

திருவாசகம் முதலியவைகளை எழுத்தறிவு இல்லாமல் எப்படிப் படிப்பது? எழுத்தறிவில்லாது இருப்பவர்கள் படித்தால் அவர்களுக்கு மூட பக்திதான் ஏற்படும். நாம் கோருவது மூட பக்தி அல்ல—உண்மையான பக்தி. படிப்பு வேண்டாம், சமய நூல்களைச் சொல்லிக் கொடுத்தால் போதும் என்று சொன்னால், அதனால் மூட பக்தி ஏற்பட்டு தாறுமாறாகத்தான் போகும். படிப்பு சொல்லிக்கொடுக்கப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவது சமய சம்பந்தமில்லையென்று சொல்ல முடியுமா?

தமிழ் எழுத்தே தெய்வீகமானது என்று சொல்லுகிறார்கள். பரமசிவனே தமிழ்ச் சங்கத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் படிப்பு வேண்டாம், சாப்பாடு வேண்டாம் வைத்திய வசதிகள் வேண்டாம் என்று சொல்வது சரியல்ல.

## இறைவன் பணி

முன்பு தர்மஸ்தாபனத்தை அமைத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக அமைத்திருந்ததால் அதை வேறு வழியில் செலவழிக்கக் கூடாதென்று சொல்லப்படுகிறது. முன்பு ஒரு நோக்கத்தோடு அமைத்திருக்கலாம். அந்த இலட்சியத்தைப் பூரணமாக நிறைவேற்றிய பிறகும் மிச்சம் ஏற்படலாம். அதை எந்த வகையில் செலவு செய்ய வேண்டுமென்பதுதான் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மிச்சம் இருக்கக்கூடிய பணத்தை எப்படிச் செலவு செய்வது என்பதற்கு, என்ன என்ன காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதற்கு, சட்டத்தில் ஒரு வரிசைக் கிரமம் தரப்பட்டிருக்கிறது. எதிலே முதலில் கவனம் செலுத்தவேண்டும், எதிலே இரண்டாவதாகக்



கவனம் செலுத்தவேண்டும். எதிலே மூன்றாவதாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று வரிசைப்படுத்திப் போட்டிருக்கிறது. அதன்படித்தான் கவனம் செலுத்த வேண்டும்.

ஏதோ சில இடங்களில்தான் அதிகப்படியாகப் பணம் இருக்கிறது—எங்கும் இல்லை. பணம் இல்லாத இடங்களில்கூட குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பது போன்றவைகளிலெல்லாம் கோயில்கள் பங்கு கொள்ளவேண்டும். இதற்காக சுவாமியின் பேரால் வசூல் செய்யுங்கள். அதன் மூலம் ஏழைக் குழந்தைகள் பயனடையச் செய்யுங்கள் என்று நான் வற்புறுத்தி வருகிறேன்.

அடியார் பணியே இறைவன் பணி என்பதை அனைவரும் உணர்வார்கள். அடியார்களுக்குப் பணி செய்வது இறைவனுக்கு உகந்தது. அந்த நிலையில்தான் ஆலயங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

## அன்ன தானம்

உணவு அளிப்பது சமயத்திற்குப் புறம்பானது அல்ல. வியாதியினால் ஒருவன் பாதிக்கப்பட்டால் அவனுக்குச் சிகிச்சை கொடுப்பது என்பது சமயத்திற்குப் புறம்பானது அல்ல. அடியார்களுக்கு உணவு அளிப்பது, வியாதிக்குச் சிகிச்சை செய்வது எல்லாம் சமயத்திற்குப் புறம்பானது என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. பசி என்று வருகிறவருக்கு உணவு கொடுப்பதில் தவறு இல்லை. அப்படிப் பசி என்று வருகிறவருக்கு உணவு அளித்தால் அது கோயில் இலட்சியத்திற்குப் புறம்பானது அல்ல.

நாம் இப்பொழுது எவ்வளவோ பிச்சைக்காரர்களைக் கோயில்களில் பார்க்கிறோம். அவர்களுக்கு எவ்வளவோ பேர்கள் பக்தியோடு பிச்சை போடுகிறார்

கள். அப்படிக் கோயிலுக்கு வருகிறவர்கள் எல்லோரும் பிச்சை போடுகிறார்கள். ஆகவே, பசி என்று கேட்கிறவருக்கு உணவு அளிப்பதில் சமய விரோதம் இல்லை. அது விரோதம் என்று சொன்னால் அதை என்னால் ஒப்புக் கொள்ளமுடியாது. அது கோயில் இலட்சியத்திற்கும் புறம்பானது அல்ல.

## பாரதியார் நோக்கம்

கோயில் வேண்டாம் என்பதற்கு ஆதாரமாகப் பாரதியாரையும் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள். பாரதியார் கோயில் வேண்டாம் என்றும் சத்திரம் வேண்டாம் என்றும் சொல்லவில்லை. பாரதியாருக்குப் பக்தி இல்லாமல் இல்லை. பக்திரசம் ததும்ப அருமையான பாடல்களைப் பாடியிருக்கிறார். அவர் கோயில் வேண்டாம்என்று சொல்லவில்லை. பள்ளிக்கூடங்களைக் கட்டி அறிவை வளர்க்கத்தான் சொன்னார். அதற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். மூடபக்தியோடு அவர் சொல்லவில்லை. கோயில் வேண்டாம் என்றும், சத்திரம் வேண்டாம் என்றும் அவர் சொல்லவில்லை; கோயில் இருக்கலாம், சத்திரமும் இருக்கலாம். ஆனால், பள்ளிக்கூடங்கள் கட்டுவதை மறக்கக்கூடாது என்றுதான் சொன்னார்.

பாரதியாரின் நோக்கம் புதிய கோயில்களைக் கட்ட வேண்டுமென்பது இல்லை. இருக்கிற கோயில்களை இடித்துத் தள்ளிவிட்டு பள்ளிக்கூடங்களைக் கட்டச் சொல்லவுமில்லை. புதிய கோயில்கள் கட்டவேண்டாம் என்றும் அதற்கு பதிலாகப் பள்ளிக்கூடங்களைக் கட்ட வேண்டும்என்றுதான் சொன்னார். புதியதாகக் கோயில்களைக் கட்டுவதற்குப் பதிலாகப் பள்ளிக்கூடங்களைக் கட்டி அறிவை வளர்க்கச் சொன்னார். அவர் சொன்னதில் தவறு இல்லை.



## உயர்வுக்கு உகந்ததா?

குஷ்டரோக வியாதி, இதற்கெல்லாம் நிவாரணம் கொடுக்கத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தால், ஹிந்துவாக இருந்தால்தான் செலவு செய்யவேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். ஒரு குஷ்டரோகி வந்தால், விபூதி, நாமம் போடவில்லையா, ஹிந்து இல்லையா என்று பார்த்து, ஹிந்து இல்லையானால் தள்ளிவிட்டுவிட வேண்டுமா?

ஒருவன் வியாதியால் பீடிக்கப்பட்டவன். அவனுக்கு வைத்திய உதவி அளிப்பதில், இறைவனுக்கு இவன் நம்முடைய மதத்தைச் சேராதவன், இவனுக்கு ஒன்றும் செய்யக்கூடாது என்று ஒன்றும் கிடையாது.

இறைவனுடைய ஸ்வரூபத்தை உணராதவர்கள்தான் இப்படிச் சொல்வார்கள். அதிலும் கோர வியாதியாக இருக்கும்போது ஹிந்துவாகப் பார்த்துக்கொடு என்று சொல்வது சரியல்ல. மேலும் எப்படி இதிலே ஹிந்து, ஹிந்து அல்லாதவன் என்று பார்ப்பது என்று தெரியவில்லை.

ஆஸ்பத்திரி என்று ஏற்படுத்தி சிகிச்சை அளிப்பதாக இருந்தாலும், அனாதை இல்லம் என்று ஏற்படுத்தி அங்கே அனாதைக் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்வது என்று சொன்னாலும், ஹிந்துக்களைத்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்வது சரியல்ல.

அங்கே சேரவேண்டும் என்று வருகிறவர்கள் மிகவும் துன்பப்பட்டு, கஷ்ட நிலையில் வருகிறார்கள். அப்படித் துன்ப நிலையில் வருகிறவர்களிடத்தில் நீங்கள் ஹிந்துவாக இருந்தால்தான் சேர்த்துக் கொள்வோம் என்று சொல்வது சரியா? இது நியாயமான முறையா? இப்படிச் செய்வது நம்முடைய உயர்ந்த மதத்திற்கே

உகந்ததா என்பதை நன்ருகச் சிந்தித்துக் கவனிக்க வேண்டும்.

**கிறிஸ்தவர்களிடமிருந்து...**

ஹிந்துக்களுக்குத்தான் கோயில், தர்மஸ்தாபனங்களின் செலவு இருக்கவேண்டும், ஹிந்துக்கள் அல்லாதவர்களுக்கு ஏன் செய்யவேண்டும் என்று கேட்கிருர்கள் என்ருல், அதே நேரத்தில் கிறிஸ்துவப் பாதிரிகள் எவ்வளவோ காரியங்களைச் செய்வதை நாம் கவனிக்க வேண்டும். அவர்களால் எவ்வளவோ வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

கிறிஸ்துவமிஷனரிகள் நடத்தக்கூடிய எவ்வளவோ உயர்ந்த கல்வி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் சென்னையில் இருக்கின்றன. திருச்சியிலும் இருக்கின்றன. கணிசமான மத மாற்றம் இருந்தால்தான் அவர்கள் கல்வி ஸ்தாபனங்களை நடத்துவோம் என்று சொல்லுகிருர்களா? கல்வி ஸ்தாபனங்களுடன் அவர்கள் ஆஸ்பத்திரிகளையும் நடத்தி வருகிருர்கள்.

சென்ற ஆண்டில் எவ்வளவு பேர்கள் கிருஸ்தவ மதத்திற்கு மாறினுர்களோ அந்த அளவில்தான் அவர்கள் ஆஸ்பத்திரிகளையும் கல்வி ஸ்தாபனங்களையும் நடத்துகிருர்களா? மதமாற்றம் இல்லையென்ருல் அவர்கள் நிறுத்திவிடுவதும் இல்லை. இந்தநிலையில், நாம் ஹிந்துக்கள் மட்டும் ஏன் மாறுபட்ட கருத்துடன் இருக்கவேண்டும், கிறிஸ்தவர்களிடமிருந்து, ஏன் நாம் பாடம் கற்றுக்கொள்ளக்கூடாது !

# 5. சுவரும் சித்திரமும்

மக்களிடையே நல்ல எண்ணம், நல்ல உணர்வு, நல்ல ஒழுக்கம் இவைகள் எல்லாம் ஏற்பட வேண்டும் என்ற முறையில் எல்லா தேவஸ்தானங்களும் பாடுபட வேண்டும். அது மட்டுமல்ல, ஏழைக் குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் பால் கொடுப்பது போன்ற உபகாரகாரியங்களும் செய்யப்பட்டு வர வேண்டும்.

**பகவான் பிரசாதம்**

இவைகள் எல்லாம் பகவானுடைய பிரசாதம் என்ற முறையில் ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுக்கப் படுகிறது. வருமானம் அதிகமில்லாத தேவஸ்தானங்களில்கூட இதற்காகச் செலவாகும் தொகையை அந்தந்த இடங்களிலுள்ள மக்களிடமிருந்து வசூல் செய்தாவது கொடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி வருகிறேன்.

இந்த முறையில் பகவானுக்கு அர்ப்பணம் செய்து பின்னுல் மக்களுக்குக் கொடுக்கின்ற முறையில் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு, பால் முதலியவை கொடுப்பது பல இடங்களில் இன்று நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் நூல் நிலையம் வைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறேன்.

வைக்கப்பட்டும் வருகிறது. அதேமாதிரி பசுமடம். அது பேருக்குத்தான் இருக்கிறது. அங்கே ஒன்றும் இருக்காது. இப்பொழுது அங்கு பசுக்களை வைத்து, அதிலே கிடைக்கும் பாலை பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, ஏழைக் குழந்தைகளுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வகையிலேதான் இப்போதே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால், இப்போதுள்ள அனுபவத்தைக் கொண்டு இதை இன்னும் சீரிய வகையிலே செய்வது எவ்வாறு என்பதும் கவனிக்கப்பட்டு வருகிறது.

## கோயில் வருமானம்

கோயில், மடம் இவைகளிலே இருக்கும் சொத்துக் களையெல்லாம் ராஜ்யத்திற்குச் சொந்தமான சொத்து என்று கருத வேண்டுமென்றும், இதுமாதிரி என்ன பணம் மிச்சம் இருக்கிறதோ, அதை அப்படியே பறி முதல் பண்ண வேண்டுமென்றும் ஒரு தீவிரமான கருத்து தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்ய முடியாது. செய்வது சரியல்ல. ஆனால் நான் முன்பு சொன்னதுபோல், இம்மாதிரி மிச்சம் சில கோயில் களில்தான் இருக்கிறது.

பொதுவாகப் பார்த்தால், ஆலயங்களையெல்லாம் சரியாக நடத்துவதற்கே போதுமான வருமானம் இல்லை. நான் வற்புறுத்தி வருகிறேன், "ஆலயங்களைக் கவனிப்பதற்காக இன்னும் வருமானத்தை அதிகப் படுத்தப் பாருங்கள், அதற்கு ஏற்றவாறு மக்களுக்குச் சேவை அதிகமாகச் செய்யலாம். வருகின்ற யாத்திரிகர்களுடைய வசதியைப் பெருக்குங்கள், யாத்திரிகர்களுக்கு வசதியைப் பெருக்கினால் கோயில் வருமானம் உயரும்; கோயில் வருமானம் உயர்ந்தால், அங்கேயுள்ள மக்களுக்குச் செய்யும் சேவையை விரிவுபடுத்தலாம்" என்று.



சிறிய கோயில்களுக்கு இந்த
விலக்கு அளிக்கலாம் என்றும் ஒரு ...றில் ஒரு பங்கு,
கப்படுகிறது. சிறிய கோயில்கள், ...றது என்று
ரூபாய்க்கு வருமானம் உள்ள கோயில்க... சில இடங்
பார்வை கூடாது என்று சொல்ல முடியாது ...டங்களி
கோயில்களிலேதான் அதிக வியாஜ்யம் இருக்... ...ாது.
சுப்ரீம் கோர்ட் வரையில் போகும் அளவுக்கு விய...
யம் இருக்கிறது. சிறிய கோயில்களையெல்லாம் சட்டத்திலிருந்து நீக்குவது சரியல்ல.

## கோயிலின் அருமை

நான் ஏற்கெனவே சொன்னேன், சுவரை வைத் துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும் என்று. கோயிலின் அருமையை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். பக்தியை வளர்த்து மனிதன் உயர்ந்த வாழ்க்கையை நடத்தவேண்டும். அதனால்தான் மனித னுடைய வாழ்க்கை கோயிலுடன் இணைக்கப்பட்டிருக் கிறது.

பழுதான கோயில்களைப் பழுது பார்க்காமல் கோயில்களை எப்படிப் பாதுகாக்க முடியும்? ஆகவே முதலில் கோயில்கள் பழுது பார்க்கப்படவேண்டும், மராமத்து செய்யப்படவேண்டும்.

பாழடைந்த கோயில்களை மராமத்து செய்து நல்ல முறையில் வைத்துக்கொண்டால்தான் மற்ற வேலை களைச் செய்யலாம். கோயில்களை மராமத்து செய்ய வில்லையானால் கொஞ்ச நாளில் அவை விழுந்து' பாய் விடும். அப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே கட்டடங்களைப் பழுது பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அதற்குத்தான் கோயில் வருமானத்தில் கால் பங்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்று சட்டத் தில் போடப்பட்டிருக்கிறது.

வைக்கப்பட்டும் வருகி
அது பேருக்குத்தான்
இருக்காது. இப்ரிப் பழுது பார்ப்பதற்கு அதிகப்
அதிலே கிடைக்டும். இது போதாது என்றால், பணம்
குழந்தைகளுர்கள் முன்வரவேண்டும். எல்லாவற்றையும்
கொடுக்க.க்ளிலிருந்தே செய்யவேண்டுமென்றால் எங்கி
வகையிற்து பணம்? மக்களுக்கு இப்போதும்கூட அக்
வருற இருக்கிறது. எங்கு பார்த்தாலும் திருப்பணிகள்
நடந்து வருகின்றன. பக்தி பெருகி வருகிறது. கோயில்களுக்கு உதவியளிக்க எத்தனையோ பேர்கள் முன் வருகிறார்கள். பணக்காரர்கள் மட்டுமல்ல, நடுத்தர வகுப்பினரும்கூடத் தாராளமாக உதவி அளிக்கிறார்கள்.

"ஏன் கோயில்களின் ரிப்பேருக்காக மத்திய சர்க்காரை உதவி கேட்கக்கூடாது" என்றும் கேட்கப்படுகிறது. அது உண்மைதான். சிற்பக்கலை சம்பந்தப்பட்ட சில கோயில்களுக்கு மத்திய சர்க்கார் உதவி செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு ஆண்டுதோறும் மத்திய சர்க்கார் ஆர்க்கியாலாஜிகல் இலாகா (புராதனப் பொருள் பாதுகாப்பு இலாகா) மூலமாகச் செலவு செய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான ரூபாய் ஆண்டு தோறும் அப்படிச் செலவு செய்யப்பட்டு வருகிறது. ராமேஸ்வரம் கோயில் இருக்கிறது. அதற்கும் செலவு செய்து வருகிறார்கள். இத்துடன் இன்னும் சில கோயில்களுக்கும் செலவு செய்து கொண்டுதான் வருகிறார்கள். திருவரம்பூர் கோயில் இருக்கிறது, அதற்கும் செலவு செய்து கொண்டு வருகிறார்கள். ஆர்க்கியாலாஜிகல் சம்பந்தப்பட்ட எந்தக் கோயிலுக்கும் மத்திய சர்க்கார் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



## கோயில் நிலம்

ராஜ்யத்திலுள்ள நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு, கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள். அது சரியல்ல. சிற்சில இடங்களில் அப்படியிருக்கலாமேயொழிய எல்லா இடங்களிலும் அப்படி இருக்கிறது என்று சொல்ல முடியாது. சில மாவட்டங்களில் அப்படி இருக்கலாம்.

தேவஸ்தானங்களுக்கு நிலம் இருந்தால் அவை நியாய வாரச் சட்டத்தின்கீழ்தான் சாகுபடி செய்யப்படுகிறது. அவைகளுக்கு 60—40 என்றுதான் வாரம் வைக்கப்பட்டிருக்கிறது. நியாய வாரச் சட்டம் அமுலுக்கு வந்தது முதற்கொண்டு கோயில் நிலங்களுக்கும், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கும் அது வந்திருக்கிறது, அதற்கு என்று விதிவிலக்குக் கிடையாது.

பெரிய முதலாளிகள் சில இடங்களில் கோயில் நிலங்களை ஏலத்தில் எடுத்துக்கொண்டு குத்தகைக்கு விடுகிறார்கள். அந்த இடங்களில் சில சமயங்களில் இது அமுல் நடத்தப்படாமல் இருக்கலாம். பல இடங்களில் நியாய வாரச்சட்டத்தின் பிரகாரம்தான் வாரம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். 60—40 வீதம் தான் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். குடியானவர்களுக்கு 60 போய்ச் சேருகிறது. தேவஸ்தானங்களுக்கு 40 போய்ச் சேருகிறது.

## சுரண்டலுக்கு இடமின்றி...

அதிகமாக நிலம் இருக்கக்கூடிய இடங்களில் கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதன் மூலம்

நிச்சயமாக குடியானவர்களுக்கு 60–ம் தேவஸ்தானங்களுக்கு 40–ம் நிச்சயமாகக் கிடைக்க வசதி ஏற்படும். அதனால்தான் சர்க்கார் கூட்டுறவுப் பண்ணையை வற்புறுத்தி வருகிறது. இதையே எங்கும் வற்புறுத்தப்பட வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய எண்ணம். இப்பொழுதே சில கூட்டுறவுப் பண்ணைகள் சீராக நடைபெற்று வருகின்றன.

ஆகவே, தேவஸ்தான நிலங்களைப் பொறுத்தமட்டில் இந்த முறையைக் கடைப் பிடித்தால் எந்தவிதமான சுரண்டலுக்கும் இடம் கொடுக்கமுடியாது. இதன் மூலமாக விவசாயிகள் பரிபூரணமான பலன் அடைவார்கள். தேவஸ்தானங்களுக்கும் வருமானத்திற்குக் குறைவு இல்லை. அவைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் வசதி இருக்கும். அதனால்தான் தேவஸ்தான நிலங்களைக் கண்ட்ரோல் செய்ய முடிகிறது. அந்த அளவுக்கு மக்களுக்கும் சௌகரியம் ஏற்படும்.

## கூட்டுறவுச் சங்கம்

முன்னால் இருந்த முறையை மாற்றி, இந்த நிலங்களை எடுத்து நேரடியாகப் பயிரிடுகின்றவர்கள் இந்த தேவஸ்தானங்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லையென்றால், அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அந்தச் சங்கத்தின் மூலமாக, சீரிய முறையில் விவசாயத்தைச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் முக்கியமாக தஞ்சை மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் "நிலக் குத்தகைதாரர்கள் கூட்டுறவுச் சங்கம்"



மூலமாகப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

இதன் காரணமாக தேவஸ்தான நிலங்களை எடுத்துப் பயிரிடுகின்றவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கிறது. அதே நேரத்தில் தேவஸ்தானங்களுக்கும் நல்ல வருவாய் கிடைக்கிறது. இந்த விதத்தில் இரண்டு பேரும் ஏகோபித்த வழியில் போவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் இந்த முறையை எல்லா இடங்களிலும் ஏற்படுத்தினால் மிகவும் நன்மையாக இருக்கும். இதன்மூலம் பயிரிடுகின்றவர்களும் பல வசதிகளை அடையலாம். உற்பத்தி பெருக முடியும் என்பதையும் உணர்ந்துதான் இம்மாதிரியான சங்கங்கள் ஆங்காங்கே அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பல சங்கங்கள் அமைத்து வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## வியாபார ஸ்தலம் அல்ல

கோயில்களில் கடை வைப்பதைப்பற்றிச் சில வரம்புகள் இருக்கின்றன. வருமானம் வருவது பெரிதல்ல.

கோயில்கள் புனிதமான ஸ்தலங்களாக இருக்க வேண்டும். வெறுப்பு ஏற்படக்கூடிய முறையில் கடைகள் இருப்பது சரியல்ல. முதலில் கடை வைப்பார்கள், வியாபாரம் செய்யக்கூடியவர்கள் மட்டும் இருப்பார்கள். பிறகு அவர்களைச் சேர்ந்தவர்களெல்லாம் இருப்பார்கள். இரவு எல்லோரும் அங்கேயே படுத்துக் கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் சண்டை போட்டுக் கொள்வார்கள். இம்மாதிரியெல்லாம் இருப்பது அழகல்ல. நாம் பைபிளைப் படித்திருக்கிறோம். இயேசுநாதர்கூட கோயில், வியாபார ஸ்தலம் அல்ல என்று, கடை வைத்திருப்பவர்களை அடித்தார் என்று

படித்திருக்கிறோம். ஆலயங்கள் சுத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும். கண்டபடி கடைகளை வைக்கக் கூடாது. கோயிலுக்கு வருகிறவர்களுக்கு என்னென்ன வேண்டுமோ அதற்கான கடைகளை மட்டுமே வைக்க வேண்டும். ஆண்டவன் சந்நிதியில் எந்தக் கடை வேண்டுமானாலும் வைக்கலாம்—பணம் வந்தால் போதும் என்று நினைப்பது சரியல்ல.

# 6. அறம் சிறக்க

தேவஸ்தான டிரஸ்டிகளுக்கு அதிக அதிகாரம் இருக்க வேண்டும் என்றும், அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படுவதாகவும் சொல்கிறார்கள். டிரஸ்டிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் டிரஸ்டிகள் ஏதாவது தவறாக நடந்தால், ஒவ்வொன்றுக்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால் அனாவசியமாகத் தலையிடுவதாகச் சொல்வார்கள்.

## ஸ்தாபனத்தின் அடிப்படை

நானும் பார்த்து இருக்கிறேன். சிலர் பதவிக்காக ஆசைப்படுவார்கள். ஆனால், அந்தப் பதவி வந்து விட்டால், அதற்குப் பிறகு அதை எட்டிப் பார்ப்பது இல்லை.

அகில இந்திய பிரசித்திபெற்ற ஒரு தேவஸ்தானம் இருக்கிறது. அதற்கு ஒரு டிரஸ்டி, ஆசைப்பட்டுத் தான் டிரஸ்டியாக இருந்தார். அந்த தேவஸ்தானம் எங்கு இருக்கிறதோ அங்குதான் டிரஸ்டிகள் போர்டு கூட்டம் போட வேண்டுமென்று விதியிலேயே இருக்கிறது. ஆனால், அந்த டிரஸ்டிக்கு போர்டு கூட்டத்துக்குக் கூடப் போக முடியவில்லை. அதற்காக "வேறு இடங்களிலும் கூட்டத்தை நடத்தலாம் என்று விதியை மாற்றிக்கொடுங்கள்" என்று கேட்டார்கள். இப்படிக்

கூட்டத்திற்குப் போகக்கூட அவகாசம் இல்லை. இம் மாதிரி இருப்பதால் தவறுதல் நடக்கிறது. இப்படிப் பல இடங்களில் நடக்கிறது. ஒவ்வொன்றுக்கும் நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகையால்தான் சில அதிகாரங்களை அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். ஸ்தாபனத்தினுடைய அடிப்படையே அது தான்.

மற்றொரு கேள்வி, தர்மகர்த்தாக்களுக்கு ஏன் வயது 70 என்று வைத்திருக்கிறோம் என்பது. இது கூட வேண்டாம் என்றால், இன்னும் என்ன வயது வேண்டுமானாலும் இருக்கலாம் என்றால், அவர்கள் இளைஞர்களிடத்தில் நம்பிக்கை வைக்கவில்லை என்று தான் நினைக்கிறேன். 70-க்கு மேல் வயது இருக்கலாம் என்று வைத்தால், அவர்கள் கோயிலுக்குப் போய் வருவதே கஷ்டம். ஆகவே 70 என்று வரம்பு வைத்திருக்கிறோம்.

## ஆலோசனைக் கமிட்டி

அறநிலையப் பாதுகாப்பு இலாகாவிற்கு ஆலோசனைக் கமிட்டி போட்டிருக்கிறோம். அப்படி இருப்பதில் என்ன பிரயோஜனம் என்று கேட்கிறார்கள். ஆலோசனைக் கமிட்டியினர் என்னென்ன யோசனைகளைச் சொல்கிறார்களோ அவற்றை நிறைவேற்றாமல் கூடப் போகலாம். கமிஷனர் இருக்கிறார். அதற்குமேல் அரசாங்கம் இருக்கிறது. அக்கறை உள்ளவர்களுடைய யோசனைகளைக் கேட்கவேண்டுமென்ற முறையில்தான் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதில்கூட ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கவேண்டுமென்ற முறையில் *போடவில்லை. கோயில்களில் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் அவர்களுடைய யோசனைகள் வரவேற்கப்படும்.



இப்பொழுது ஆலோசனைக் கமிட்டியில் உள்ள அங்கத்தினர்களில் எத்தனையோ பேர் அரசியல் பற்று இல்லாதவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேராதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல யோசனை கொடுக்கக் கூடியவர்கள், அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் எல்லாம் ஆலோசனைக் கமிட்டியில் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டுமென்று சொல்வதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அம்மாதிரியெல்லாம் கட்டுப்பாடு செய்ய முடியாது. மந்திரி இந்துவாக இருக்கவேண்டுமென்று சொல்ல முடியாது. இந்த ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால் யார் யார் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளுவார்களோ அவர்கள் வரட்டும். இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ள முடியாது.

## அர்ச்சனை மொழி

மற்றொரு விஷயம். கோயில்களில் அர்ச்சனைகள் எல்லாம் தமிழ், சம்ஸ்கிருதம், இவற்றில்எதில் இருக்க வேண்டும் என்பதும் விவாதத்திற்குள்ளாகி விடுகிறது.

தேவாரம், திருவாசகம் முதலியவைகள் எல்லாம் அரிய பாடல்கள். இதைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. உயர்ந்த கலை அதில் இருக்கிறது. அவைகள் எல்லாம் நல்ல காவியங்கள். அந்தப் பாமாலைகளுக்கு சமன் இல்லை. தற்போது இருக்கக் கூடியவற்றில் அவைகள் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட இலக்கியங்கள் என்பதை எல்லோரும் உணருவார்கள். இவைகள் எல்லாம் தமிழ்மொழியில் இருக்கின்றன. அர்ச்சனை எல்லாம் தமிழில்தான் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.

**சர்ச்சை எதற்கு ?**

அர்ச்சனை என்பது கடவுளின் பெயரைச் சொல்வது. அது கடவுளைப்பற்றிய நாமாவளி. அதாவது ஆண்டவனின் பல திருநாமங்களைச் சொல்வது. அது தமிழில்தான் இருக்க வேண்டும் என்ற சர்ச்சை எதற்கு ? அதற்குப் பெரிய சர்ச்சை செய்யவேண்டிய அவசியம் இல்லை.

ஆங்கிலத்தில் இலக்கியம் எப்படி உயர்ந்து இருக்கிறது ? உலகத்திலேயே பெருமைப்படக் கூடிய அளவில் அது உயர்ந்திருக்கிறது. காரணம், அதில் எல்லா வார்த்தைகளும் சேர்ந்திருக்கிறது. ஆகவே மொழிப் பிரச்சினையை எழுப்புவது சரியல்ல. நான்கு வார்த்தைகளைக் காதால் கேட்டால் எவ்வளவோ ரம்மியமாக இருக்கிறது. கடவுளின் பெயர் தமிழில் இருந்தால் என்ன, சமஸ்கிருதத்தில் இருந்தால் என்ன ? தேவாரம் பாடினால் எவ்வளவோ சுகமாக இருக்கிறது. அதைக் கேட்டவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும். ஆகவே, இதில் மொழிச் சர்ச்சை வேண்டாம் என்று நான் எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**பண வசதிக்கு ஏற்ப...**

மொழிச் சர்ச்சையைப் போன்றே இன்னொரு குறுகிய நோக்கமும் இருக்கிறது. சிற்ப, கட்டிடக் கலையில் இந்து கட்டிடக்கலை பாணியில்தான் எல்லாம் இருக்க வேண்டும் என்பது.

சோழர் காலத்தில் எத்தனையோ கோயில்கள், மண்டபங்கள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. பல்லவர் காலத்துக் குகைக் கோயில்கள்எல்லாம் இருக்கின்றன. இப்படி !இப்போது ஒரு மண்டபம் கட்டலாம் என்றால் சோழர் காலத்து மண்டபம் போலக் கட்டலாம், பல்லவர் : காலத்துக் குகைக் கோயில்



மண்டபம் போலக் கட்டலாம். கட்டக் கூடாது என்று சொல்லவில்லை.

எதைக் கட்டுவது என்றாலும் பணம்தான் வேண்டும். குறைவாகத்தான் பணம் இருக்கிறது என்றால், மெட்ராஸ் டெர்ரஸ்தான் போடும்படியாக இருக்கும். இது எந்தப் புராதனக் கலையில் சேரும் ?

சமீபத்தில் ஒரு கல்யாண மண்டபம் கட்டினார்கள். தற்கால நூதன முறையில் தான் கட்டியிருந்தார்கள். நான் கூடக் கேட்டேன். பழங்காலத்து முறையில் கட்டியிருக்கக் கூடாதா என்று. அப்படிக் கட்டுவது என்றால் பணம் இல்லை. இதற்கே 30 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று என்று சொன்னார்கள். ஆகவே இருக்கும் பணத்தை வைத்துக் கொண்டுதான் எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டியிருக்கிறது.

கல்வெட்டுக்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதில் கவனம் செலுத்தப்பட்டுத் தான் வருகிறது.

**நாகரிகம் அல்ல...**

இன்னொன்று. இந்து மத தத்துவ அறிவைப் புகுத்த வேண்டும் என்று இருப்பதில் அதை நிர்ப்பந்தமாகச் செய்யவேண்டும் என்று கூறுவது சரியல்ல. நிர்பந்தம் இருந்தால் பயன் இல்லை. ஏதோ வருவார்கள், நிர்பந்தத்திற்காகப் பாஸ் செய்து விடுவார்கள், ஆகவே இதை நிர்ப்பந்தம் இல்லாமல் விடுவதுதான் நல்லது. நிர்ப்பந்தம் இருந்தால் இந்த மாதிரி ஸ்தாபனங்கள் நன்றாக வளராது.

என்னைப் பார்த்து, பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த என் கருத்துக்கள் மாறுபட்டு

வருவதாகச் சிலர் பாராட்டுகிறார்கள். ஆனால் ஒரு தகவலைப் பெருமையாகச் சொல்வேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் சிறியவனாக இருந்த பொழுது, நான் பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். ஆலயங்களில் பக்தி உள்ள ஹரிஜனங்கள் போகக்கூடாது என்று சொல்வது நாகரிகம் அல்ல என்றும், தவறு என்றும், சட்டத்தைச் செய்தாவது இதை நீக்க வேண்டும் என்றும் எழுதியிருக்கிறேன். ஆலயங்களில் தேவதாசி முறை இருப்பது மிகவும் தவறு என்று சொன்னேன். அதற்கு அப்பொழுது கடுமையான எதிர்ப்பு இருந்தது. அதை எடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். ஆக, நான் அப்பொழுதே இவைகளைப் பற்றி எழுதியிருக்கிறேன்.

ஹரிஜனங்கள் பக்தி உள்ளவர்கள். மற்றவர்களை விட அதிக பக்தி உள்ளவர்கள் என்பதை கிராமத்திற்குப் போய் பார்த்தால் தெரியும். அவர்களுக்கு உத்தியோகம் கிடைக்க வேண்டும். பிரசாதம் கிடைக்க வேண்டும் என்ற அக்கறை இல்லை. கோயிலுக்குச் சென்று ஆண்டவனைத் தொழவேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். அதனால் தாங்கள் சீரிய வாழ்க்கை நடத்தப் பயன்படும் என்று எண்ணுகிறார்கள்.

## குகையில் வேலை

ஆலயங்களில் வேலை செய்யும் ஊழியர்களைப் பற்றிக் குறைகூறப்படுகிறது. அவர்களைப் பற்றி எனக்கு மிகுந்த கவலை உண்டு. அங்கே வேலை செய்கிறவர்களைப் பார்த்துச் சிலர் பொறுமைப்படுகிறார்கள். ஆனால் அர்ச்சகர் வேலை செய்வதைப் பார்த்தால்தான் தெரியும். ஒரு பக்தியின் காரணமாகத்தான் அவர் அந்தக் குகையில் வேலை செய்ய முடிகிறது. அவர்



களுக்குக் குறைந்த சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. அந்தச் சம்பளங்கள் பழைய காலத்தில் ஏற்பட்டவை. அவை சரியல்ல. அதை மாற்றவேண்டும். இப்பொழுது நிதி நிலைமை இடம் கொடுக்கவில்லை. பெரிய கோயில்களில் சம்பளத்தை அதிகமாக்க வேண்டும். எல்லா ஆலயங்களிலும் அதிகமாக்குவதற்கு வகை செய்ய வேண்டும். கோயில்களின் வருமானத்தை அதிகப்படுத்தியாவது அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். எனக்கும் இந்தக் கவலை இருக்கிறது.

## அறம் சிறக்க

ஆலயங்கள், மடங்களில் தவறுகள் நடக்கின்றன. எல்லா ஸ்தாபனங்களும் சரிவர இயங்கவில்லை என்று நான் சொல்லவில்லை. சில மடங்களில் தவறுகள் ரொம்பவும் நடக்கின்றன. அந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் வெட்கித் தலை குனியக்கூடிய வகையில் அவை இருக்கின்றன. அவைகளைப் போக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கவலையும். இதில் சலுகை ஒன்றும் இல்லை. ஏதாவது தவறுகள் செய்தால் சட்டத்தின் கீழ் சீக்கிரத்தில் திருத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்காக அதிகாரிகள் பாடுபடுவார்கள்.

உத்தியோகப் பற்றற்றவர்களும், பொதுமக்களும், போதிய அளவு அவர்களுடைய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அறநிலையப் பாதுகாப்பு என்பது சீரிய முறையில் அமையும்.

ஆலயத் திருப்பணி ஓங்க, அறநிலையங்களின் அறம் சிறக்க, அனைவரும் துணைபுரிவார்களாக !

# 7. தொழில் தகராறு

வேலையில்லாத் திண்டாட்டம், நம் நாட்டில், ஒரு முக்கியமான பிரச்சினை. இதில் அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது.

## புதுத் தொழில்கள்

கிராமங்களில் பெரும்பாலான மக்களுக்கு விவசாயம் ஒரு ஜீவனோபாயமாக இருந்து வருகிறது. இருந்தாலும் அது போதாது என்கிற முறையில்தான், கிராம மக்கள் கூடுதல் வருமானம் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் குடிசைத் தொழில்கள் போன்றவை வளரப் பல வழிகளிலும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நகரங்களில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சொந்தமாக வியாபாரம், தொழில் செய்பவர்கள் தவிர மற்ற மக்கள் எல்லாம், மிகப் பெரும்பாலானவர்கள் எங்காவது வேலை செய்து பிழைக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். இதற்காகத்தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, அவற்றின் கீழ் சர்க்கார் துறையிலும் தனியார் துறையிலும் புதுப்புது தொழில்கள் தோன்ற வழி செய்துள்ளோம். இந்த வகையில் எத்தனையோ



இலட்சம் பேர்களுக்கு, நாடு முழுவதிலும், புதிதாக வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனினும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

## நிரந்தரப் பிரச்சினை

வேலை கிடைத்துவிட்டால், வேலைதான் கிடைத்துவிட்டதே என யாரும் நிம்மதியடைவதில்லை. முதலாளிகள் தங்களைச் சரியாக நடத்தவில்லை என்றும், போதிய ஊதியம் தரவில்லை என்றும் தொழிலாளர்கள் கூறுகின்றனர். அவர்களது உரிமைகள், கோரிக்கைகள் பற்றிப் பேசத் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவை அவ்வப்போது போராட்டங்கள் நடத்துகின்றன. தொழிலாளர்கள் கேட்பதையெல்லாம் முதலாளிகள் தருவதில்லை. இந்தத் தகராறைத்தான் தொழில் தகராறு என்கிறோம். இது என்றைக்கும் இருக்கும். இது ஒரு நிரந்தரப் பிரச்சினையாக இருந்துகொண்டுதான் இருக்கும். அதற்கு அவ்வப்போது தீர்வு காண வேண்டும். பிறகு மீண்டும் புதிய தகராறுகள் கிளம்பும்.

ஆகையால், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட இந்த விவகாரங்களைக் கவனிக்க, தொழிலாளர் நல இலாகா என்று அரசாங்கத்தில் ஒரு தனி இலாகாவே இருக்கிறது. இது எவ்வளவோ, பயன்தரத் தக்கப் பணிகளைச் செய்து வருகிறது.

தொழிலாளர் இலாகா நடைபெற்று வருவதில், எல்லாம் திறமையாக நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லவில்லை. இன்னும் குறைகள் இருக்கின்றன. அதை நாங்கள் உணராமல் இல்லை. குறைகளை நீக்கி, இன்னும் சீரிய முறையில் தொழிலாளர்களுக்குப் பணியாற்றவேண்டும் என்பதுதான் எங்களது விருப்பம். இந்த இலாகா தொழிலாளர்களுக்குப் பணியாற்றி, அவர்களை ஊக்குவித்து, சீரிய முறையில் அவர்களைக்

கவனித்து, அதன் மூலம் நாடு வளரவேண்டும் என்று எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. தொழிலாளர் இலாகாவிற்கும் இதில் முக்கியமாக அக்கறை இருக்கிறது.

## அர்த்தமற்ற புகார்

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், தொழிலாளர் இலாகா சம்பந்தமாக, அரசாங்கத்தின்மீது குறை கூறி வருகிறார்கள். இதில் ஒரு முக்கியமான புகார், காங்கிரஸ்காரர்களாக உள்ள முதலாளிகள் விஷயத்தில் காங்கிரஸ் அரசாங்கம் சலுகை காட்டுகிறது என்பதாகும்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏதோ ஒரு தொழிலைக் குறிப்பிட்டு, அதில் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்றும், ஏன் அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லையென்றால், அந்தத் தொழிலை நடத்துகிறவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், அதற்கு உடனே ஒரு உள் எண்ணம் கற்பித்து விடுகிறார்கள்.

தொழில் நடத்துபவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்தால்கூட, சிறைக்குச் சென்ற காங்கிரஸ்காரர்களாக இருந்தால் கூட, தவறு செய்தால், தயங்காமல், அவசியம் ஏற்பட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடுத்திருக்கிறோம். அப்படிச் சிலர்மீது தொழில் சட்டத்தை மீறியதின் காரணமாக, அரசாங்கம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்ததால், கோபப்பட்டு எங்கள் கட்சியை விட்டு வேறுகட்சிக்கு மாறியுமிருக்கிறார்கள். அதெல்லாம் பலருக்குத் தெரியாது. ஆனால் முக்கியமாக இதிலே அனுபவம் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.



## குறுக்கே நிற்பது யார் ?

கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், 'அகில இந்திய தொழிற் சங்க காங்கிரசைச்' சேர்ந்தவர்கள் தாங்கள்தான் தொழிலாளர்களுக்காகப் பெரிதும் பாடுபடுவதாகவும், முதலாளிகளுக்கு விட்டுக்கொடுப்பதில்லை என்றும், ஆட்சியை நடத்துபவர்கள்தான் முதலாளிகளுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள், முதலாளிகளிடம்தான் அவர்களுக்கு அக்கறை என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் வழக்குப் போடுவதற்குக் குறுக்கே நிற்பவர்கள் யார் என்பதற்கு நான் ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன், கம்யூனிஸ்டுக் கட்சியினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது என் நினைவுக்கு வருகிறது. அப்பொழுது தொழிலாளர் நல இலாகா பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்தேன். ஒரு சமரசம் பேச வேண்டியிருந்தது. அது ஒரு வெள்ளைக்கார கம்பெனி. முதலாளி வெள்ளைக்காரர். அக்கம்பெனியில் இரண்டு,மூன்று கட்சித் தொழிற் சங்கங்கள் இருந்தன. நான் தொழிலாளர்கள் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்த பிறகு, அந்த வெள்ளைக்கார முதலாளியைக் கூப்பிட்டு, 'நீங்கள் இதற்கு ஒப்புக் கொள்ளவேண்டும்' என்று சொன்னேன். நான் கொஞ்சம் கண்டிப்பாகச் சொன்னேன். அவரும் உடனே கொஞ்சம் தயங்கி, 'யோசித்துப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்' என்று கூறினார். திரும்ப வந்து, 'ஒருக்காலும் முடியாது' என்று ரொம்பவும் கண்டிப்பாகச் சொன்னார். 'இந்த மாதிரி சொல்வது சரியல்ல, இத்தகைய போக்கு உங்களுக்கு நல்லது அல்ல, அதை அரசாங்கம் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று நான் மறுபடியும் கண்டிப்பாகச் சொன்னேன். அதற்கப்புறம்

அந்தத் தகராறைத் தொழில் கோர்ட்டுக்கு நாங்கள் விடுவதில்லை என்று சொன்னார்கள். 'அட்ஜூடிகேஷனுக்கு' விடுவது பற்றி வந்தது. இதிலே சில தொழில் தலைவர்கள் வந்து எங்களிடம், "நீங்கள் அட்ஜூடிகேஷனுக்கு விடாதீர்கள்" என்று சொன்னார்கள். அதுதான் அவர்கள் நடந்துகொண்ட இலட்சணம்.

## கட்சிக் கண்ணோட்டம்

இந்த ஆட்சியைப் பொறுத்த மட்டில் எந்த விஷயத்தையும் கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதில்லை. நான் அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகிறது என்னவென்றால், தொழிலாளர்கள் நலனைப் பொறுத்தவரையில், கட்சியை இதிலே புகுத்த வேண்டாம் என்பதுதான்.

தொழிலாளர்களை அரசியல் கட்சிக்குப் பயன்படுத்தி, கட்சிக்கு ஒரு பலம் தேடவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. எல்லோருக்கும் உண்மையிலேயே தொழிலாளர்களிடத்தில் அக்கறை இருக்கிறது. ஆகையால் அரசியல் கட்சியை இதிலே புகுத்த வேண்டாம் என்று நான் மீண்டும் சொல்லுகிறேன். அரசியல் கட்சிகளைப் பலப்படுத்துவதற்காக ஏழைத் தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கம் தவறு என்பதை நான் அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகிறேன்.

## சமரச ஏற்பாடு

ஒரு சமயம் தேயிலை, காப்பி தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் போனஸ் விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்தோம். எல்லோரும் ஒன்று கூடித்தான் பேசினோம். வெவ்வேறு தொழிற் சங்கத் தலைவர்களும், பிரதிநிதிகளும் அதிலே கலந்து



கொண்டார்கள். இரண்டு நாட்கள் பேசினோம். அவர்களிடம் நான், "முடிவு உங்களுக்குச் சரிப்படவில்லை, என்றால் அட்ஜூடிகேஷனுக்கு விடுவதற்குத் தயாராய் இருக்கிறேன்" என்று சொன்னேன். கோர்ட்டுக்குப் போனால் ஒரு வருஷம் ஆகும், இரண்டு வருஷம் ஆகும், ஆகவே இதைச் சமரசமாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்று என்னிடம் தொழிற்சங்கத் தலைவர்கள் சொன்னார்கள். இரண்டு பேரையும் சேர்த்து வைத்துப் பேசினேன். தனித்தனியாகவும் பேசினேன். முடிவை ஒப்புக் கொள்ளவில்லை யென்றால் கோர்ட்டுக்கு விட்டுவிடுகிறேன் என்று சொன்னேன். தொழிலாளர்களின் தலைவர்கள் கோர்ட்டுக்கு விடுவதை ஒப்புக் கொள்ளவில்லை. கோர்ட்டுக்குப் போனால் ரொம்ப நாட்களாகும், நீங்களே தீர்வு பண்ணுங்கள் என்று என்னிடம் சொன்னார்கள். இந்த அளவுக்கு மேல் போனால் முடியாது என்று புள்ளி விவரங்களை யெல்லாம் முதலாளியின் பிரதிநிதிகள் காட்டினார்கள். முடிவு செய்ததை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமென்று, நான் வற்புறுத்தியதின் பேரில் ஒப்புக் கொண்டார்கள். "நீங்கள் ஒப்புக் கொள்வதாயிருந்தால் சரி, இல்லாவிட்டால் கோர்ட்டுக்கு விடுகிறேன்" என்று தொழிற் சங்கத் தலைவர்களிடம் நான் சொன்னேன். அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர்களும் இருந்தார்கள். இவ்வளவு போனஸ் கொடுப்பது என்று முடிவு செய்த பிறகு யாரும் ஆட்சேபணை சொல்லவில்லை.

இப்படி யெல்லாம் நடக்கும் போது, சில கம்யூனிஸ்டுகள் தாங்கள்தான் தொழிலாளர்களுக்காகத் தீவிரமாக இருக்கிற மாதிரியும், ஆட்சி நடத்துகிறவர்கள் முதலாளிகளுக்குச் சலுகைகள் காட்டுகிறார்கள் என்ற எண்ணத்தைக் கற்பிக்க வேண்டும் என்ற முறையிலும் பேசுகிறார்கள். தொழிலாளர்களுக்கு எல்லாம்

நன்ருகத் தெரியும். அவர்கள் எல்லோரும் நான் ஏற்பாடு செய்த சமரச ஏற்பாட்டை வரவேற்ருர்கள். எவ்வளவு தூரம் தொழிலாளர்களுக்குச் சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவிலே நான் எப்பொழுதும் கவனம் செலுத்தி வருகிறேன்.

### போலீஸ் தலையீடு

மற்றொன்று, எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வது, போலீஸ் தலையிடுவதைப் பற்றியது. தொழிலாளர்கள் விஷயத்தில் எப்பொழுது போலீசார் தலையிடுகிருர்கள்? அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால்தான் தலையிடுகிருர்கள். மற்றப்படி போலீசார் தொழிலாளர்கள் கிட்டக் கூட வருவதேயில்லை.

பொதுவாக, தொழில் துறையிலே அமைதி நிலவுகிறது. அதுவும் சிலருக்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது. அப்படிச் சிலருக்கு வருத்தம் ஏற்பட்டதைப பற்றி நான் வருத்தப்படுகிறேன்.

### வருமான உயர்வு

இப்பொழுது, "தொழிலாளர்களுக்கு ஒன்றுமே வரவில்லை, எல்லாம் முதலாளிகளுக்குத்தான் போகிறது" என்று சொல்வது சரியா? விலைவாசி உயர்ந்து விட்டது என்கிருர்கள். விலைவாசி உயர்விற்குத் தகுந்தபடி பஞ்சப்படி ஏற்பட்டு வருகிறது. இப்பொழுது தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. புதிய வேலை வாய்ப்புகளும் இருக்கின்றன.

அமெரிக்காவிலே கூட இன்னும் வேலை வாய்ப்பு குறைபாடு இருக்கிறது என்று அந்நாட்டுஜனுதிபதியே சொல்லியிருக்கிருர். இன்றைக்குப் புதிய வேலை



வாய்ப்பு இருக்கிறதா, புதிய புதிய தொழில்கள் எவ்வளவு வந்து கொண்டிருக்கின்றன, புதிய வேலை வாய்ப்பு எவ்வளவு தூரம் கிடைத்திருக்கிறது என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். தொழிலாளர்களுடைய வருமானமும் உயர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

### எப்படி ஒப்புவது?

இன்று, தொழிலாளர்களுக்குப் பல வசதிகள், சலுகைகள் கொடுத்து வருகிறோம். முன்பு ஒரு வருடத்திற்கு 1,000 ரூபாய் சம்பாதிக்கிறவர்களுடைய பிள்ளைகளுக்கெல்லாம் இலவசக் கல்விச் சலுகை அளித்தோம். அதற்குப் பிறகு, மாதம் 100 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் இச்சலுகை கிடைக்கும்படி வருட வருமான வரம்பை ரூபாய 1,200 ஆக உயர்த்திேனும். எல்லாத் தொழிலாளர்களும் அதிகச் சம்பளம் பெறுவதினுல் அந்த வரம்பை மேலும் ரூபாய் 1,500 ஆக உயர்த்திேனும். ஆனுல் கோயம்புத்தூரிலே உள்ள தொழிலாளருக்கு மாதம் ரூபாய் 175 கிடைக்கிறது, ஆகவே இந்த வரம்பை ரூபாய் 2,500 க்கு உயர்த்த வேண்டும் என்று சொன்னுர்கள். இப்போதோ எல்லோருக்குமே எஸ். எஸ். எல். சி. வரை இலவசக் கல்வி என்று செய்துள்ளோம்.

தொழிலாளர்கள் சம்பாதித்துக் கொண்டுதான் இருக்கிருர்கள். நகரத்திலே தொழிலாளர்கள் இருக்கிற மாதிரி கிராமத்திலே எத்தனை பேர்கள் இருக்கிருர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். கிராமங்களிலே மாதம் 150 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் ஐந்தாறு பேர்களுக்கு மேல் தேருது. சம்பளத்தைத் தவிர தொழிலாளர்களுக்குப் போனசும் கிடைக்கிறது. அப்படி இருக்கும் பொழுது ஒன்றுமே கிடைக்கவில்லை

யென்று சொன்னால், அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

## ஒழுங்குமுறை

அவரவர்களுக்கு உரிய வகைகளில் எல்லோரும் நிறையச் சம்பாதிக்கிறார்கள். வருமானம் அதிகரித்து வருகிறது. தெரிந்த வரைக்கும் நாங்கள் வருமான வரி போடுகிறோம். எவ்வளவு அகப்படுகிறதோ அதற்குப் போடுகிறோம். இன்னும் இதைச் செம்மைப் படுத்த வேண்டும். சட்டங்கள் போடுகிறோம். அவைகளை அமுலுக்குக் கொண்டு வருகிறோம். தொழிலாளர்களுக்கு ஏற்படும் குறைபாடுகளைப் பற்றி அப்போதைக்கப்போது கவனித்து வருகிறோம். சட்டத்தை எந்தெந்த வகையிலே மாற்றுவது என்றும் பார்க்கிறோம்.

தொழில்களில் ஒழுங்கு முறை, நடத்தை நியதி பற்றி விதிகள் இருக்கின்றன. இவை எவ்வளவு தூரம் அமுல் நடத்தப்பட முடியுமோ அந்த அளவிற்கு அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்பும் இருக்கிறது. முதலாளிகளும் ஒத்துழைக்கிறார்கள். சர்க்கார் துறை, கூட்டுறவு தொழில்கள் பற்றியும் கவனிக்கப்படுகிறது. சர்க்கார் துறையைப் பொறுத்த வரையில், சம்பந்தப்பட்ட இலாகா தலைவர்களைச் சந்தித்து, "சர்க்கார் வழிகாட்டியாக இருக்க வேண்டும், அவர்களும் இந்த விதிகளை அமுல் நடத்த வேண்டும்" என்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

## பட்சபாதம் இல்லை

தொழில் தகராறுகளில் சமரசத் தீர்வுக்கான இயந்திரம் போதாது என்று கூறப்படுகிறது. அப்போதைக்கப்போது எவ்வளவு தூரம் விரிவுபடுத்த முடியுமோ அவ்வாறு விரிவு படுத்திக் கொண்டுதான் வருகிறோம். அட்ஜுடிகேஷனுக்கு விட்ட கேசுகள் குறைவு என்று சொல்லப்படுகிறது. சின்ன கேஸ்களைத்தான் அட்ஜுடிகேஷனுக்கு விடுகிறோம் என்றும் பெரிய கேஸ்களைக் கண்டால் மயங்கிவிடுகிறோம் என்றும் சொல்கிறார்கள். அப்படி ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பெரியவர்களாய் இருந்தால் என்ன, சின்னவர்களாய் இருந்தால் என்ன? அட்ஜுடிகேஷனுக்கு விடும்பொழுது தொழிலாளர் நலனையும், உற்பத்தி விஷயத்தையும் பார்த்துத்தான் முடிவு செய்கிறோம். பெரிய தொழிலா, சிறிய தொழிலா என்று பார்ப்பதில்லை. ஆகவே அட்ஜுடிகேஷனுக்கு வருவது குறைவாக இருக்கிறது என்றால், கூடிய வரையிலும் சமரசத் தீர்வு ஆகிறது என்றுதான் அர்த்தம். அதைப் பொறுத்த வரையில் பட்சபாதம் ஒன்றும் இல்லை. தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர தொழிலதிபர்களுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்குச் சிறிதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தற்காலிகத் தொழிலாளர்

மற்றும் எல்லாத் தொழிலாளர்களையும் நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி எதிர்பார்ப்பது முடியாது. உதாரணமாக நெய்வேலித் திட்டம் இருக்கிறது. அங்கே எல்லோரையும் நிரந்தரமாக்க முடியாது. அது ஐந்து அல்லது பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு முடிந்து விடும். அதன் பிறகு அவர்களை என்ன செய்வது?

தொழிலாளர்களை எந்த வகையிலாவது சுரண்டும் போக்கு இருந்தால், சர்க்கார் இலாகாவாக இருந்தாலும் சரி, தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அதன்மீது வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். மற்றபடி எல்லோரையும் நிரந்தரமாக்க வேண்டும் என்று சொல்வது தவறு. அது சரியல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அநேகத் தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தற்காலிகத் தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வசதிகள், சலுகைகளைப் பொறுத்த மட்டில் அதிகமாக ஒன்றும் வித்தியாசம் இல்லை.

ஒரு தொழிலாளர் வேலை காயமாவதற்கு முன்னால் 'ப்ரொபேஷன்' இருக்க வேண்டும். அதற்குப் பிறகு 'ஸ்டாண்டிங் ஆர்டர்' சட்டப்படி அவர் நிரந்தரமாக்கப்படுவார். இந்த 'ஸ்டாண்டிங் ஆர்டர்' சட்டத்தை ஒவ்வொரு தொழிலுக்காக விஸ்தரித்துக் கொண்டு வருகிறோம். இப்போது நானூறு, ஐந்நூறு ஆலைகளுக்கு இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது.

# 8. வேலை வாய்ப்பு

**வே**லை வாய்ப்பு ஸ்தாபனம் பற்றிப் பலருக்குத் தெளிவில்லாமல் இருக்கிறது. பலர் நினைக்கிறார்கள் அது வேலை தேடிக் கொடுப்பது என்று. அப்படி அல்ல. பெயரைப் பதிவு செய்து கொண்டு அதன் பிறகு வேலை இருக்கக் கூடிய இடத்தைப் பற்றிய தகவல் கொடுக்கக் கூடிய நிலையம்தான் அது. இந்த ஸ்தாபனம் முன்பு மத்திய அரசாங்கத்திடம் இருந்தது. இப்போது அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதை எவ்வளவுக்கு எவ்வளவு விரிவு படுத்த வேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு விரிவு படுத்திக் கொண்டுதான் வருகிறோம்.

## கணிசமான உதவி

ஒவ்வொருவரும் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலை கிடைக்கும் போது அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். ரிஜிஸ்டர் செய்து விட்டதன் காரணமாகவே, வேலைக்கு உத்தரவாதம் செய்வதில்லை. வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க வழிவகைகளை வகுப்பதுதான் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் நோக்கம். அந்த முறையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

வேலை வாய்ப்பு எவ்வளவு பெருகியிருக்கிறது என்கிற விவரத்தைத் தெரிந்து கொள்வது அவசியம். உதாரணமாக 1961 பிப்ரவரியில் இருந்து பார்த்தால் 1962 செப்டம்பர் மாதம் வரைக்கும், 17 ஆயிரம் உத்தியோகங்கள் புதிதாக ஏற்பட்டன. 1961-62ல் 46,322 ஸ்தானங்கள் அறிவிக்கப்பட்டன என்ருல் வேலை வாய்ப்பு ஸ்தாபனம் மூலம் 34,040 ஸ்தானங்களுக்கு, தகுந்தவர்கள் அனுப்பப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இப்படி இந்த ஸ்தாபனம், வேலை தேடுபவர்களுக்குக் கணிசமான அளவில் உதவி புரிந்து வருகிறது.

## வேண்டிய வேலை!

இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகப் பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றும், ஆறு மாதங்களுக்கு முன் பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை கிடைத்து வருகிறது என்றும் புகார் கூறப்படுகிறது. எல்லோருக்கும் 'வேண்டிய' வேலையைச் சிருஷ்டிக்க முடியாது. எங்கு வேலை காலியாக இருக்கிறதோ அங்கு, பதிவு செய்யப்பட்டவர்கள் சிபாரிசு செய்யப்படுவார்கள். அப்படிச் சிபாரிசு செய்யும்போது சிலர் அதை ஏற்றுக் கொள்ளுகிருர்கள். சிலர் அந்த வேலை வேண்டாம்; தங்களுடைய தகுதிக்கு ஏற்றவாறு வேலை வேண்டும் என்று சொல்லி மறுத்து விடுகிருர்கள். அப்பொழுது ஆறு மாதத்தில் பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படலாம்.

எங்கு வேலை காலியாக இருக்கிறதோ அதைப் பற்றி 'வேலை வாய்ப்பு' ஸ்தாபனத்திற்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த ஸ்தாபனம் அனுப்புகிறவர்களைத்தான் எடுத்துக் கொள்ள



வேண்டுமென்ற விதி கூட இருக்கிறது. ஆனுல், நான் ஏற்கனவே சொன்னது போல, சில சமயங்களில் ஏதாவது வேலை கிடைத்தாலும், "அந்த வேலை வேண்டாம், வேறு ஏதாவது வேலை வேண்டும்" என்று சொல்லுகிருர்கள். அதனுல்தான் ரொம்பப் பேர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது.

## மறுபடியும் பதிவு

சில சமயங்களில் சிலர் மறுபடியும் பதிவு செய்து கொள்வது இல்லை. ஒரு தடவை வேலைக்கு சிபார்சு செய்யப்பட்டு அதில் சேராமல், வேண்டாம் என்று சொல்லிய பிறகு மறுபடியும் அவர்கள் பதிவு செய்து கொள்வது இல்லை. அந்த முறையிலும் சிலருக்கு வேலை கிடைக்காமல் போய் விடுகிறது. அதனுல்தான் இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகப் பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை கிடைக்காமல் ஆறு மாதங்களுக்கு முன்னதாகப் பதிவு செய்துகொண்டவர்களுக்கு வேலை கிடைப்பதாகவும் இருக்கிறது. அவரவர்களுக்குத் தகுந்தபடி, விரும்பும் வேலை வேண்டும் என்று கேட்பதால்தான் இப்படி ஏற்படுகிறது.

ஆகவே இந்த ஸ்தாபனத்தில் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை யெல்லாம் அவ்வப்போது செய்து கொண்டுதான் வருப்படுகிறது. அதற்காகவே ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்திருக்கிரேம். அந்தக் குழு ஆலோசனை செய்து, அவர்கள் சொல்லுகிறவற்றை யெல்லாம் கவனித்துக் கொண்டு தான் வருகிரேம்.

## ஜாதிப் பாகுபாடு

மற்றும் படித்தவர்கள், அதிலும் அதிகம் படித்தவர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கு வேலை உடனடி

# 9. உரிமைக்கு உறுதி

தொழிலாளர்களுக்குக் கல்வி கொடுக்கிறோம். தொழிலாளர்களைச் சிறந்த தொழிலாளர்களாக உருவாக்க, தொழிலாளர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

## தனிப் பயிற்சி

அப்படித் தனிப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் மூலம் மற்ற தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சிலர் பயிற்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்குக்கூட அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தொழிலதிபர்களும் மிகுந்த ஒத்துழைப்பைத் தருகிறார்கள். 1963-64ல் பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மற்றத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## க்ஷேமநல அதிகாரி

தொழிலாளர்கள் நலனைக் கவனிக்க ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு அதிகாரி இருக்கவேண்டும். அந்த அதி[illegible]ரிகளை தொழிற்சாலை முதலாளிகளையே நியமிக்[illegible]ல்லி இருக்கிறோம். அது கூடாது என்று கூறுகிறார்கள். அது அவர்கள் நியமிக்க வேண்டிய கடமை.

அந்த அதிகாரிகளை, தொழிலாளர்களுடைய க்ஷேம நலனுக்காகத்தான் போடுகிறார்களே தவிர வேறு ஒன்றுக்கும் இல்லை. ஏதாவது தகராறுகள் வந்தால் அதைத் தீர்ப்பதற்குத்தான் போடுகிறார்கள். அரசாங்கத் தொழில் அதிகாரிகளையே ஏன் போடக்கூடாது என்றும் கேட்கப்படுகிறது. ஆனால் அது அவசியமல்ல. ஏனெனில் அந்த அதிகாரிகளைப் போடவேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி அரசாங்கம் அவர்களை வற்புறுத்துகிறது.

தொழிலாளர் நல அதிகாரிகளைப் போடுவதற்கும் சில விதிகள் உண்டு. அப்படிப் போடுவதில் ஏதாவது மாறுதல்கள் இருந்தால் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். அனுமதி இல்லாமல் அந்த அதிகாரிகளை நியமிக்க முடியாது. ஆகவே அரசாங்கமே நியமிக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல.

## தேவையான நடவடிக்கை

பல்வேறு தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் எல்லாம் நிர்ணயித்துச் சட்டம் வந்திருக்கிறது. அதைச் சீராக அமுலாக்கப்படுவதற்கு வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளைப் பற்றியெல்லாம் பெரிது படுத்தப்படுகிறது. அதற்கெல்லாம் ஒரு அளவுகோல் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றியும் அளவுகோல் இருக்கிறது. பல எஸ்டேட்டுகள்—தேயிலைத் தோட்டங்கள் அதை நிறை

வேற்றி வருகின்றன. சில எஸ்டேட்டுகள் நிறைவேற்ற வில்லை. வைத்திய வசதியைப் பொறுத்த மட்டில், கூடியவரைக்கும் நன்ருக இருக்கிறது. இது விஷயமும் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது. இதற்கு என்று தனிச்சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் பல பொறுப்புகள், பல கடமைகள், இருக்கின்றன. அவற்றையெல்லாம் சிறந்த முறையில் நிறை வேற்றுவது பற்றி அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

சினிமாத் தொழிலாளர்களைப் பற்றி பரிசீலனை செய்ய ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டிருக்கிருர். அவர், அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமையைப் பற்றி ஆராய்ந்து முடிவு சொன்னவுடன் அதற்குரிய சட்டம் தயாரிக்கப்படும். சினிமாத் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிருர்கள் என்பதை அரசாங்கமும் உணருகிறது. அந்த வகையில் கவனம் செலுத்தி வருகிறேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உப்பளங்களில் வேலை செய்து வருகிற தொழிலாளர்களைப்பற்றி இந்த அரசாங்கத்தினுடைய யோசனையை மத்திய அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறேம். மத்திய அரசாங்க அதிகாரிகளும், சால்ட் கமிஷனரும் இதிலே கவனம் செலுத்தி வருகிருர்கள். இதிலே உள்ள ஒரு கஷ்டம் என்னவென்ருல், இந்தத் தொழிலாளிகள் ஒரே இடத்தில் வேலை செய்வதில்லை. பல இடங்களுக்குச் செல்கிருர்கள். இதையெல்லாம் நன்ருக ஆராய்ந்து ஏதாவது சட்டம் செய்ய முடியுமா என்று பார்ப்போம்.

## விபத்துத் தடுப்பு

நான் முன்பே குறிப்பிட்டது போன்று தொழில் இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தொழிலாளர்



களின் நலனை முதல் கவனமாக வைத்து, பல துறைகளில் ஈடுபட்டு, சட்டங்கள் மூலமாகவும், மற்ற வகைகளிலும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிருர்கள். பல சட்டங்களைத் தொழிலாளர் நலனுக்காக நிறைவேற்றிக் கொண்டு வருகிறேம்.

தொழிற்சாலைகளில் அவ்வப்போது விபத்துக்கள் நேரிடுவதுண்டு. புதிது புதிதாகப் பாக்டரிகள் ஏற்படும் போது விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம். பாக்டரிகளின் எண்ணிக்கை பழைய அளவிலேயே இருக்குமாஞல் விபத்துக்களின் எண்ணிக்கை ஓரளவு குறைய முடியும். விபத்துக்கள் ஏற்படாதவாறு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் பட்டுத்தான் வருகின்றன. விபத்துக்களை அடியோடு தவிர்க்க வேண்டுமென்ற முறையில்தான் கவனம்செலுத்தப்பட்டு வருகிறது.

பணிபுரியும் தொழிலாளருக்குப் பந்தோபஸ்தும், பாதுகாப்பும் இருக்க வேண்டும் என்ற வகையில் மேலும் மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகள் பிரதம இன்ஸ்பெக்டர் மட்டுமல்லாது எத்தனையோ துணை அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு வருகிருர்கள். அனுபவம் உள்ளவர்கள் இந்தத் துறையிலே கவனம்செலுத்தி வருகிருர்கள்.

தொழிற்சாலைகளில் விபத்துக்கள் நடைபெறவொட்டாமல் தடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதுமட்டுமல்லாது, பல வெளியீடுகளைக்கூட வெளியிட்டிருக்கிறேம். தொழிலாளர்களும் கவனித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதைப் பற்றி யெல்லாம் பிரசாரம் செய்

யப்பட்டிருக்கிறது. எல்லா வகையிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## சீரமைப்புத் திட்டம்

ஆலைகள் சம்பந்தப்பட்ட மட்டில் சீரமைப்புத் திட்டம் என்று ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக உற்பத்தியைப் பெருக்கவேண்டும், தொழிலாளர்களுக்கு வேலையும் குறையவேண்டும், வேலையும் போகக்கூடாது என்பதைப் பற்றியது.

இந்தப் பிரச்சினை ரொம்ப நாட்களாக நீடித்துக் கொண்டிருந்தது. இதைப் பற்றியெல்லாம் கோயம்புத்தூர் பிராந்தியத்தைச் சேர்ந்த மில் அதிபர்களுடனும் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தாகிவிட்டது. இரண்டு சாராரும் இத் திட்டத்தை நிறைவேற்ற ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத் தக்க ஒரு அம்சமாகும்.

## வீட்டுப் பிரச்சினை

இன்னும் தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்டுகிற திட்டம் ஓரளவு நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நெருக்கடி நிலைமையை உத்தேசித்து முன்போல அவ்வளவு வேகமாக வீடுகள் கட்டப்படுகிற திட்டத்தை மேற்கொள்ள முடியாவிட்டாலும் இத்துறையில் சரியான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் விஷயத்தில் குறைபாடு இருக்கிறது. தொழிலதிபர்கள் போதிய அளவில் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லையே என்று எனக்குக் கூடக் கொஞ்சம் அதிருப்திதான். தொழிலாளர்கள் கூடப் போதிய அக்கறை எடுத்துக்



கொள்ளவில்லை என்றுதான் நான் சொல்வேன். அவர்கள் கூட்டுறவு முறையில் இதைச் செய்யலாம். அகமதாபாத்தில் சீரிய முறையில், கூட்டுறவு மூலமாக, வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இதில் வருகிறது. அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழிலதிபர்களுக்கு நான் ஒன்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் தொழிலில் பணம் போடுகிறார்களே அதுபோல் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதும் ஒரு சிறந்த முதலீடு என்று சொல்லியிருக்கிறேன்.

## தாழ்மையான வேண்டுகோள்

எந்த எந்த வகையில் தொழிலாளர்களுடைய நலன் விருத்தி செய்யப்படவேண்டும், அவர்கள் மூலம் நாட்டிலே உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதிலெல்லாம் தொழிலாளர் இலாகா கவனம் செலுத்து மென்று உறுதி தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் நான் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். தொழிலாளர்களுடைய நலனுக்காகவே நாம் அவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும். அரசியலை அதில் புகுத்தக்கூடாது. அரசியலைப் புகுத்தி, அதன் மூலம் அவர்களை அரசியலில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று யாரும் எண்ணக் கூடாது என்று கூறிக் கொள்கிறேன்.

## போனஸ் விஷயம்

தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பது சர்க்கார் துறை, கூட்டுறவுத்துறை தொழில்களில் இல்லை என்று சொல்லப்படுகிறது. தனிப்பட்ட கம்பெ

னிகள் நடத்துகிற தொழிலுக்கு 'இலாபம்' என்று உண்டு. அந்த இலாபத்திலே ஒரு பகுதியைத் தொழிலாளர்களுக்குப் போனசாகக் கொடுக்கிறார்கள். ஆனால், சர்க்கார் துறை தொழில்களிலும், அதே மாதிரி, அந்த அளவுகோலையே வைத்துக் கொள்வது எதிர்பார்க்கக் கூடியதல்ல. அப்படி எதிர்பார்ப்பதும் முறையல்ல. ஏன் என்றால், அதில் யாரும் இலாபத்தை எடுத்துக்கொண்டு போவதில்லை. இலாபம் வந்தால், அந்த ஸ்தாபனங்கள் வரி கொடுக்கும், பிறகு அந்தப் பணம் பொதுமக்கள் எல்லோருக்கும்தான் போய்ச் சேருகிறது. அரசாங்கம் அதை எல்லோருக்கும் பொதுவாக, நல்ல பல திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறது. ஆகையால் தனிப்பட்டவர்கள் இலாபம் நஷ்டம் பார்த்துப் போனஸ் கொடுப்பதுமாதிரி சர்க்கார் துறையிலும் போனஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்வது முறையல்ல.

### உரியன வழங்கப்படும்

சர்க்கார் துறையாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையாக இருந்தாலும், தனியார் துறையாக இருந்தாலும், அவைகளிலுள்ள தொழிலாளர்கள் எந்த விதத்திலும் சுரண்டப்படக் கூடாது, தொழிலாளர்களுக்கு உரியவை வழங்கப்பட வேண்டும் என்பதிலே நான் கவனம் செலுத்துகின்றேன்.

சம்பந்தப்பட்டவர்களோடு அடிக்கடிக் கலந்து பேசி, சரியான வகையிலே தொழிலாளர்களுக்கு உரியவற்றை அளிக்க வேண்டும் என்பதிலே இந்த அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்பதை மட்டும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

## 10. குறைந்தபட்ச ஊதியம்

குறைந்த பட்ச ஊதியம் கொடுப்பதைப் பற்றிச் சட்டம் இருக்கிறது. அப்போதைக்கப்போது எந்த எந்தத் தொழிலுக்குக் குறைந்தபட்சக் கூலி விகிதம் நிர்ணயிக்கப்படுவது அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறதோ அவற்றுக்கு எல்லாம் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தந்தத் தொழில்களுக்குத் தக்கபடி ஆலோசனைக் கமிட்டி நியமிக்கிறோம். அவர்களுடைய முடிவைச் செயலாற்றுகிறோம்.

### கூலி நிர்ணயம்

அதே மாதிரி விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கூட குறைந்தபட்சக் கூலி விகிதம் நிர்ணயிக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் இரண்டு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் அமுலில் இருக்கிறது. அதன்படி விவசாயிகள் கூலி கொடுக்கப்பட்டு வருகிறார்களா என்பதைக் கண்காணிக்கவும் அதிகாரிகள் இருக்கிறார்கள்.

குறிப்பாக இந்தச் சட்டம் தஞ்சாவூர், திருச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும்தான் இல்லை என்றால் அதற்குக் காரணம் அந்த மாவட்டங்களில்-

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. குறைந்த பட்சக் கூலி விகிதச் சட்டத்தைவிட அது அங்குள்ள விவசாயிகளுக்கு அதிக அனுகூலமானது என்பதனால் இந்தச் சட்டத்தினால் அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அந்த இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

## குறையாமல் கவனிப்பு

தஞ்சை, திருச்சி மட்டுமல்ல, வேறு சில இடங்களில் கூட குறைந்த பட்சக் கூலியைவிட அதிகமாக விவசாயத் தொழிலாளர்கள் பெறுகிறார்கள். குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டம் காரணமாக ஏற்கனவே வாங்குகிற கூலி, குறைந்துவிடக் கூடிய தன்மை ஏற்படுமோ என்ற கவலை எனக்கு இருந்தது. ஆனால் கிராமங்களிலே வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை. இது கிராம விவசாயிகளுக்குத் தெரியும். விவசாயிகள் சங்கத் தலைவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். அந்த அளவுக்குத் தொழில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. தொழிற்சாலைக்குப் போனால் போனஸ் முதலியவை கிடைக்கிறது என்று நினைத்துத் தொழிலாளர்கள் அங்கு போய்விடுகிறார்கள். என்றாலும், விவசாயக் கூலியும் உயர்ந்து கொண்டுதான் வருகிறது.

விவசாயக் கூலி ரொம்பவும் கட்டையாக, குறைந்த பட்சக் கூலி விகிதத்திற்கும் குறைவாக இருந்தால் அது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கோ, தொழிலாளர் இலாகாவின் கவனத்திற்கோ கொண்டு வந்தால், வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இதற்கென்று தனியாக, பல பிரதிநிதிகள் அடங்கிய, ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.



## சட்டத்தின் அவசியம்

“சட்டம் இல்லாமலே முன்பு எப்படி எப்படியோ இருந்தது, இப்பொழுது சட்டம் வந்து விட்டது” என்று சிலர் குறைபட்டுக் கொள்கிறார்கள். அந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. முன்பு சட்டம் இல்லாமல் இருந்திருக்கலாம். அதற்காகச் சட்டம் செய்யாமலிருக்க முடியுமா ? சுரண்டும் மனப்பான்மை எல்லோருக்கும் இருக்கிறது. தொழில் அதிபர்கள்தான் சுரண்டும் மனப்பான்மை உடையவர்கள் என்பதல்ல. காரணம் அந்த மனப்பான்மை எல்லோருக்கும் இருக்கிறது. அதற்குச் சட்டம்தான் வேண்டியிருக்கிறது.

இந்தச் சட்டம் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டு வருகிறது. மாநில ரீதியில், தொழிலாளர் தலைவர்கள், தொழில் அதிபர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள் எல்லோரும் கூடிக் கலந்து பேசி, என்ன குறை இருக்கிறது, என்ன என்ன வகையிலே இதை மாற்ற வேண்டும் என்பதிலே நாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். அதேபோல், மத்திய அரசாங்கமும் கவனம் செலுத்தி வருகிறது; அடிக்கடி மாநாடுகள் கூட்டுகிறார்கள். இதையெல்லாம் பார்த்து, எந்த முறையிலே திருத்த வேண்டுமோ அந்த முறையிலே திருத்திக் கொண்டு வருகிறோம்.

குறைந்த பட்சக் கூலி, நியாயக் கூலி இவைகள் ஒன்றோடொன்று இணைந்திருப்பவை. குத்தகைக் கூலிதாரர்களைப் பொறுத்தமட்டில் அதற்கு வேண்டிய விதிகள் இருக்கின்றன. இதைப் பற்றியெல்லாம் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். குறைந்தபட்ச ஊதியம், நியாய ஊதியம் இவைகளைப் பற்றி என்ன என்ன செய்ய வேண்டுமோ அதைப்

பற்றி யெல்லாம் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

## நியாய ஊதியம்

குறைந்த பட்ச ஊதியமே வேண்டாம், நியாய ஊதியம் நிர்ணயம் செய்து விட்டால் போதும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது, விஷயத்தைப் புரிந்து கொள்ளாது சொல்வதாகும். அதிகப்பட்ச ஊதிய சட்டமே வைத்துக் கொண்டு விடலாம். எதற்காகக் குறைந்த பட்ச ஊதிய சட்டம் ?

குறைந்த பட்சக் கூலி வேறு, நியாக் கூலி வேறு. குறிப்பாக, ஒரு தொழில் நஷ்டத்தில் நடக்கலாம். அதற்காகத் தொழிலாளர்களுடைய கூலியை முதலாளி குறைக்கக் கூடாது, நஷ்டத்தில் தொழில் நடந்தாலும் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்தபட்சம் இவ்வளவு கூலி கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பதே சட்டம்.

இதை எடுத்துவிட்டு நியாய ஊதியம் என்று கொண்டு வந்து விட்டால் அதற்கு எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்யலாம். "நியாயமான கூலிதானே கொடுக்கவேண்டும். இப்போது தொழிலில் இலாபமே இல்லை. ஆகவே எங்களுக்கு இவ்வளவுதான் நியாயமாகக் கூலி கொடுக்க முடியும்." என்று முதலாளிகள் சொல்லலாம். இந்த நியாயக் கூலி, குறைந்தபட்சம் என்று நாம் நிர்ணயிப்பதைவிடக் குறைவாக இருக்கலாம். ஆகவே நியாயக் கூலி என்று மட்டும் நிர்ணயிப்பது சரியல்ல.

குறைந்த பட்சக் கூலி என்று நாம் விதித்தாலும், அதிகச் சம்பளம் கொடுக்கக் கூடிய நிலைமையும் இருக்கிறது. இன்னும் தொழிலில் இலாபம் வந்தால் உடனே அந்த இலாபத்திற்கு ஏற்றபடி போனஸ் கொடுக்கிறார்கள். அலவன்ஸ், பஞ்சப்படி எல்லாம் கொடுக்கிறார்கள். ஆகவே குறைந்த பட்சம் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கூலி நிர்ணயம் செய்வதே சரியானது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அடிப்படையே சரியான அடிப்படை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



## இருதரப்பு நலன்

தொழில் கமிட்டி போடுகிறோம். அதிலே தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழிலதிபர்கள் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு இருக்க வேண்டுமென்ற முறையில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது.

இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ஊதியத்தைக் கொடுப்பதில் தகராறுகள் ஏற்பட்டால் அதைத் தகராறு இல்லாத வகையில் உடன்பாடு காண்பதற்கு, தொழிலாளர் நல அதிகாரிகள் முயற்சி செய்கிறார்கள். அவர்கள் நீதிபதிகள் அல்லர். அவர்கள் செய்வது சமரசம்தான்.

மத்தியஸ்தம் பண்ணிப் பார்ப்போம், ஒப்பந்தம் பண்ணி உடன்பாடு ஏற்படச் செய்வோம் என்ற முறையில் முயற்சி செய்வது லேபர் ஆபீசர்கள் வேலை. அவர்கள் தீர்ப்புக் கொடுப்பதில்லை. உடன்பாடு வெற்றி பெறவில்லை யென்று சொன்னால், அவர்கள் தங்களுடைய சிபாரிசை மேலதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். அதற்குமேல் கோர்ட்டுக்கு விடுவது, அட்ஜுடிகேஷனுக்கு விடுவது எல்லாம் கவனிக்கப்படுகிறது.

இதிலே தீர்வு ஏற்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டி, இத்தனை கேஸ்கள் தீர்வு காணுமலே விடப்பட்டிருக்கின்றனவே என்று குறை சொல்லப்படுகிறது. சமரசமாகப் போவது நல்லது என்ற காரணத்தினுல், இருவர் நலனுக்கும் உகந்தது என்ற காரணத்தினுல், அந்த வகையிலேயே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

# 11. விடுமுறை வசதி

தொழிலாளர்களுக்கு விடுமுறை கொடுக்கும் பிரச்சினை பல நாட்களாக இருந்து வருகிறது. சிலர் தாராளமாகக் கொடுத்துக் கொண்டும் வருகிருர்கள். பெரும்பாலான தொழிற்சாலைகளில் இந்த விடுமுறை என்பது மிகவும் குறைவு. ஒரு வருடத்தில் ஏழு நாட்கள் வேண்டாம், ஐந்து நாட்கள் கூடக் கிடையாது. ஆகவே சட்ட பூர்வமாக விடுமுறை நாட்கள் இன்னது என்று நிர்ணயிக்க வேண்டுமென்ற பிரச்சினை வெகு நாட்களாக இருந்து வந்தது.

## விடுமுறைக்குச் சட்டம்

மத்திய அரசாங்கமும், தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் இவர்களோடு கூட இந்தப் பிரச்சினையை விவாதித்தது. விடுமுறை என்பதையே தொழிலதிபர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் இவ்வளவு விடுமுறை கொடுக்க முடியாது என்று கூறிக் கொண்டு வந்தார்கள். இருந்தாலும் விடுமுறை கொடுக்கத்தான் வேண்டும் என்று மத்திய அரசாங்கம் கருதியது. இந்த அரசாங்கமும் கருதியது, இதர அரசாங்கங்களும் கருதின.

வருடத்தில் குறைந்த பட்சம் இரண்டு தேசிய நாட்கள், ஐந்து பண்டிகை நாட்கள் விடுமுறை கொடுக்கத்

தான் வேண்டு மென்று எல்லோரும் கருதினோம். சென்னையில் கூட ஸ்டாண்டிங் கமிட்டியில் விவாதிக்கப்பட்டது. ராஜ்ய அரசாங்கங்களை இதற்காகச் சட்டம் செய்ய வேண்டு மென்றார்கள். அதற்குமேல், அதற்கான சட்டம் தயாரிக்கப்பட்டது. அப்போதும் கூட விடுமுறை என்று அளித்தால் உற்பத்தி பாதிக்கப்படும் என்று தொழிலதிபர்கள் தங்கள் ஐயத்தைத் தெரிவித்தார்கள். இருந்தாலும் இந்த அரசாங்கம் குறைந்த பட்சம் ஏழு நாட்களாவது விடுமுறை கொடுக்கத்தான் வேண்டு மென்று சட்டம் கொண்டு வந்தது.

## அர்த்தம் என்ன ?

விடுமுறை என்றால் எல்லோரும் வரவேற்கிறார்கள். விடுமுறை வேண்டும் என்று கோரும் மனப்பான்மையைச் சற்று சிந்திக்க வேண்டும். நாட்டின் செல்வம் வளர வேண்டும். வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்றால் நம் மக்கள் உழைப்புக்கு அஞ்சக்கூடாது. இருந்தாலும் விடுமுறை கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் விடுமுறை தினத்தில் அவர்கள் வேலை செய்யும் படியாகச் சொல்லப்பட்டால் இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பது சட்டம்.

தொழிலாளர்களுக்கு ஓரளவு விடுமுறை கொடுக்க வேண்டும். விடுமுறை என்றாலே அர்த்தம் அந்த விடுமுறை நாட்களில் அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை என்றாலும் அவர்களுக்குச் சம்பளம் உண்டு என்பது தான். ஓரளவாகிலும் இந்தக் குறிப்பிட்ட அளவுக்கு ஏழு நாட்களாகிலும் விடுமுறை கொடுக்க வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது.

பொதுவாகத் தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் பரஸ்பரம் அவர்களுக்கிடையே இருக்க



வேண்டிய நல்லுறவு முதலியனவெல்லாம் பொதுவான பிரச்சினை. அந்தப் பிரச்சினையைப் பற்றி அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சட்டங்கள் செய்கின்றோம். மற்ற ஏற்பாடுகளைச் செய்கின்றோம். அவைகளை இதிலே கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. ஓரளவு விடுமுறை, வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.

## பொதுவான குறைபாடு

நாம், பொதுவாக அரசாங்கக் காரியாலயங்களைப் பற்றி ஒரு குறைபாடு சொல்வதுண்டு. நம் நாட்டில் தான் அரசாங்கக் காரியாலயங்களுக்கு அதிகமான விடுமுறை விடப்படுகிறது என்றும் மற்ற நாடுகளில் அவ்வளவு நாட்கள் விடுமுறை இல்லை என்றும் சொல்வதுண்டு. ஏறக்குறைய மற்றவர்களைப் போலவே தொழிலாளர்களும் அதிகமான விடுமுறையை அநுபவித்து வருவதாகத்தான் நான் கூட முதலில் தப்பாக எண்ணிக் கொண்டிருந்தேன். அப்புறம் அதைப்பற்றி விசாரித்த போது வருடத்தில் 7 நாட்கள் கூட அவர்கள் விடுமுறை அநுபவிக்கவில்லை என்று தெரிந்த போது ஆச்சரியமாக இருந்தது. அவசியம் ஒரு சட்டம் செய்தாக வேண்டும் என்ற நிலைமையை உணர்ந்தேன். சில அலுவலகங்களில் அப்போதே பழக்க வழக்கங்களினால் அதிகமான விடுமுறை கொடுத்து வந்தார்கள். பி. அண்டு சி. மில்லில் 11 நாட்கள் உண்டு. இன்னும் சில கம்பெனிகளில் இதையும் விட தாராளமாக லீவு வழங்கி வந்திருக்கிறார்கள்.

ஆகவே தான், 7 நாட்கள் என்று சட்டம் கொண்டு வந்த போது இந்த ஏற்பாடு முன்பு இருந்த பழக்க வழக்கத்தைப் பாதிக்கக் கூடாது என்று செய்தோம்.

## தேசிய தினங்கள்

ஏழு நாட்கள் கூட லீவு இல்லாமல் இருந்த இடங்களில் இப்போது இந்த 7 நாட்களாவது கொடுக்க வேண்டுமென்று செய்திருக்கிறோம். இரண்டு தினங்கள் தேசியநாட்கள். இந்த மாதிரி சட்டம் இல்லாத காரணத்தினால்தான், அப்போது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15 தேதிக்கு லீவு விட வேண்டும், ஜனவரி 26-க்கு லீவு விட வேண்டும் என்று தனித்தனியாக உத்திரவு போட்டுக் கொண்டு வந்தோம். இந்தச் சட்டம் அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்தது. சுதந்திர தினம், குடியரசு தினம் இரண்டுக்கும் லீவு, மற்றும் ஐந்து பண்டிகைகளுக்கு லீவு என்று குறைந்த பட்சமாக வகை செய்கிறது சட்டம்.

சுதந்திர தினத்தன்றும், குடியரசு தினத்தன்றும் விடுமுறை அளிப்பதற்கு யாரும் ஆட்சேபிப்பார்கள் என்று அரசாங்கம் கருதவில்லை. தேசிய தினங்களாக, அந்த இரண்டு தினத்தையும் கருதுவதில் இந்தியர்களிடையே ஆட்சேபம் இருக்கும் என்ற ஐயம் கிடையாது.

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய இரண்டையும் தேசீய தினங்களாகக் கருதுவதில் அபிப்பிராய பேதம் இருந்தாலும், உள்ளுக்குள் வைத்துக் கொள்வார்களே தவிர வெளிப்படையாகச் சொல்ல முடியாது.

## மே தினப் பிரச்சினை

தேசிய நாட்கள் இரண்டுக்கு விடுமுறை என்று சொல்லியிருப்பதை போல, ஏன் இன்னொரு நாளைக் குச் சொல்லக் கூடாது ? மே தினத்தையும் அப்படிச் சேர்த்திருக்கலாமே என்று சிலர் சொன்னார்கள். மே



மாதம் முதல் தேதியைத் தொழிலாளர் நாளாகக் கொண்டாடுகிறார்கள். அரசாங்கம் அதை உணராமல் இல்லை. ஆனால் ஒரு நாளை நாம் நம்முடைய நாளாகக் கொண்டாடுவதற்கு விடுமுறை வேண்டுமென்பது இல்லை.

மே தினம் போல லீவு விட வேண்டுமென்றால் இன்னும் அநேக நாட்கள் சொல்லலாம். இது தமிழர்களுடைய நாடு. சித்திரை முதல் தேதி லீவு விட்டால் நல்லது என்பர். இன்னொரு நாள், தமிழ் நாட்டில் ஆயுத பூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைக்கு எல்லாத் தொழிலாளர்களும் ஆயுதங்களை வைத்துக் கும்பிடுகிறார்கள். அன்றைக்கு லீவு விட வேண்டுமென்று சொல்லலாம். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி அன்றைக்கு லீவு வேண்டுமென்றால் பண்டிகை நாளாக எடுத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால்வேலை செய்து கொள்ள முடியும். மற்றொரு நாள் பொங்கல் தினம். அது தமிழர் திருநாள் என்று நம் நாட்டிலே இப்போது மிகவும் சிறப்பாக கொண்டாடி வருகிறார்கள்.

## வருத்தம் வேண்டாம்

ஆகவே, இரண்டு தேசிய நாட்களுக்கு லீவு விட்டு விட்டு, மே தினமாக இருந்தாலும், தமிழ் வருஷப் பிறப்பு, ஆயுதபூசை, பொங்கல் என்று என்றைக்கு வேண்டுமோ அன்றைக்கு வருஷத்தில் ஐந்து பண்டிகை தினங்கள் விடுமுறை அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டோம்.

தொழிலாளர்களுடைய தலைவர்கள் என்னிடம் வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. நான் தவறுதலாகச் சொல்லவில்லை. மே தினத்தை நம்முடைய

தேசிய தினங்களோடு நான் ஒப்பிடுவதற்கில்லை. இரண்டையும் சமமாக வைப்பதற்குத் தயாராக இல்லை. அப்படி வைப்பதானது நம்முடையசுதந்திர தினத்திற்குள்ள முக்கியத்துவத்தை, குடியரசு தினத்திற்குள்ள முக்கியத்துவத்தைக் குறைத்ததாகத்தான் ஆகும். ஆகையால்தான் பண்டிகை தினங்களோடு மே தினம் சேர்க்கப்பட்டது.

### சர்க்கார்துறைக்கு விஸ்தரிப்பு

வருடத்தில் 7 நாட்கள் விடுமுறை விட வேண்டும் எனச் சட்டம் செய்ததெல்லாம் பழைய சங்கதி. அதன் பிறகு, தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிப்பது பற்றிய சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்ததை அறிந்திருக்கலாம். அதில் முன்பு ஏழு நாள் விடுமுறை என்று இருந்ததை அதாவது வருடத்தில் இரண்டு தேசிய தினங்கள், ஐந்து பண்டிகை தினங்கள் சம்பளத்தோடு விடுமுறை அளிக்க வேண்டும் என்று இருந்ததில் காந்தி ஜயந்திக்கும் விடுமுறை அளிக்க வசதியாக மூன்று தேசிய தினங்கள் என்றும், ஐந்து பண்டிகை தினங்கள் என்றும் எட்டு நாட்கள் விடுமுறை அளிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமும் இப்போது அமுலில் இருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. சர்க்கார் நடத்துகிற ஸ்தாபனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கும்படி செய்வதுதான் நியாயம் என்று பலரும் கருதினார்கள். அதை ஏற்றுக் கொண்டு சர்க்கார் துறையில் இருக்கும் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# 12. நல்ல சூழ்நிலை

பொதுவாக தொழிலாளர்களுடைய சலுகை அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக அமைய வேண்டும். தொழிலதிபர்களின் ஒத்துழைப்பையும் பெற்றதாக அமைய வேண்டும். அப்போதுதான் இருதரப்பாரும் உற்சாகமாக வேலை செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பு உண்டாகும். நாட்டின் செல்வம் பெருகும்.

### நெருக்கடி நிலை

முக்கியமாக நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டவுடனேயே தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் மிகுந்த உற்சாகத்தோடு, உணர்ச்சியோடு உற்பத்தியைப் பெருக்குவதிலே எந்த எந்த வகையில் ஒத்துழைக்க வேண்டுமோ தொடர்ந்து பாடுபட வேண்டுமோ, அவ்வாறெல்லாம் பாடுபடுவோம் என்று உறுதி கூறியது மாத்திரமல்லாமல் அதே வகையில் நடந்துங் கொண்டார்கள் என்று நான் கூறவிரும்புகிறேன்.

இந்த நெருக்கடி நிலை ஆரம்பித்தவுடனே, 1962ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ந் தேதி மத்திய அரசாங்கத் தொழிலமைச்சர் அவர்கள் ஒரு மகாநாடு நடத்தினார்கள். அதில், தொழிலதிபர்கள், தொழிலாளர் பிரதி

நிதிகள், மாநில ஆட்சிப் பிரதிநிதிகள் எல்லோரும் வந்திருந்தார்கள். அதிலே எல்லோரும் ஏகோபித்து, நல்லுறவோடு உற்பத்தியைப் பெருக்குவதிலே ஈடுபட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, கூடுதல் 'ஷிப்ட்' வேண்டு மென்றால், கூடுதலாக வேலை செய்ய வேண்டும், விரயம் கூடாது; தகராறுகளை யெல்லாம் சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்; தனிப்பட்ட தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், வேலை நீக்கம், ஆட்குறைப்பு எதுவாக இருந்தாலும், சாதாரணமாக கோர்ட் மூலமாகப் போகாமல் லேபர் கமிஷனரிடம் அறிவித்து, அவர் என்ன முடிவு சொல்கிறாரோ அதை ஏற்றுக் கொள்ளுவது என்று முடிவு செய்யப்பட்டது.

அதையொட்டியே நம்முடைய மாநிலத்திலும் தொழில் அதிபர்களையும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் சேர்த்து வைத்து, அம்மாதிரியே செய்வோம் என்று முடிவு செய்யப்பட்டது.

## நல்ல சூழ்நிலை

மற்றொன்று, தொழிலில் ஒழுங்குமுறை விதிகள் என்பதாக எல்லோருக்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். ஒரு ஒழுங்குமுறை வேண்டும் என்ற அடிப்படையில் தொழிலாளர்களும் சரி, தொழிலதிபர்களும் சரி சிற்சில கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் இவற்றுக்கு உட்பட்டுத் தாங்களே நடந்து கொள்ளும் ஒரு மனப்பான்மையை வளர்க்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுப்பாடு, ஒழுங்கு முறைகளை இரு சாரார்களும் ஏற்று நடத்துவதற்குப் பலர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வேலை நிறுத்தம் செய்து, வேலை நாட்கள் விரயமாகப் போய் விட்டது என்று சொல்வதற்கில்லை.



இந்த நல்ல சூழ்நிலை தொடர்ந்து நீடிக்கும். நாட்டுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க இந்தச் சூழ்நிலையை நீடிக்கத் தொழிலாளர்களும் சரி, தொழிலதிபர்களும் சரி, ஆக இரண்டு சாராரும் மிக்க உற்சாகத்துடன் ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

## பாராட்டத்தக்க ஒத்துழைப்பு

தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் நல்லுறவுடனே இருந்து வருகிறார்கள். வேலை நிறுத்தங்கள், தகராறுகளெல்லாம் அதிகமாக இல்லை. அப்படி ஏதாவது ஏற்பட்டாலும், தகராறுகளை இரு சாராரும் சேர்ந்து பேசியே தீர்த்துக் கொள்ளக்கூடிய வகை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் நல்லதொரு சூழ்நிலையில் தொழிலுற்பத்தி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த வகையில் ஒத்துழைக்கும் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# 13. கைத்தொழில் இயக்கம்

நம் நாட்டின் பொருளாதாரத்தை நாம் உணர வேண்டும். மற்ற நாடுகளுடைய பொருளாதாரத்திற்கும், நம் நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது.

## பொருளாதார நிலை

நம் நாடு விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டது. ஆனால் விவசாயம் மாத்திரம் போதாது. இப்போது பல தொழில்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. கனரகத் தொழில்கள், சிறு தொழில்கள் எல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன.

என்றைக்கும் விவசாயத்தை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை. விவசாயத்தில் அதிகமான இலாபம், ஒருகாலத்திலும் வராது. தொழில் துறையில் நல்ல இலாபம் ஏற்படுகிறது. அதற்காக எங்கே பார்த்தாலும் விவசாயத்திற்கே நிலமில்லாதபடி பெரிய பெரிய ஆலைகளையே வைத்துக்கொண்டு போய்விடலாம் என்று யாரும் யோசனை சொல்லமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். விவசாயம் இல்லையென்றால் மக்கள் எல்லாம் எப்படிச் சாப்பிடுவது?

## இணைந்த அமைப்பு

நமக்கு விவசாயமும் வேண்டும். தொழில்களும் வேண்டும். எங்கு பார்த்தாலும் தொழில்களை ஏற்படுத்



துவது என்றால் முதலாவது போதுமான மூலதனம் வேண்டும். மேலும் உற்பத்தியாகிற சரக்குகளை எல்லாம் விற்க மார்க்கெட் வேண்டும். ஆகவேதான் தொழில் உற்பத்தியையும் சீராக வைத்திருக்க வேண்டும். அதே சமயம் விவசாயமும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

இப்படி இரண்டும் இணைந்த ஒரு பொருளாதார அமைப்பு இருந்தால்தான் விவசாயத்திலும் ஈடுபடலாம், விவசாய வேலை இல்லாத நாட்களில் தொழில் துறையிலும் ஈடுபடலாம். இப்படி இரண்டும் இணைந்து செயல்படுகிறபோதுதான் தொழில் துறையில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, வளமாக வாழ முடியும்.

## தனி மதிப்பு

கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு இன்று கைத்தறி பெருவாரியாகத் தொழில் தந்து கொண்டிருக்கிறது. இந்தக் கைத்தறித் தொழில், நம்முடைய நாட்டுப் பொருளாதார அமைப்பை வைத்துக் கொண்டு பார்க்கிறபோது ஒரு நாளும் அழிந்து போகாது. நாளாவட்டத்தில் அது அழிந்து போகும் என்று சிலர் கூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

இன்றைக்கு ஆலை மயமாக வளர்ந்திருக்கிற அமெரிக்க நாட்டிலேகூட கைத்தறித் துணி என்றால் ஒரு மோகம் இருக்கிறது. அவர்களுடைய நாட்டுக் கண்காட்சி ஒன்று சில காலத்திற்கு முன்பு இங்கே வைக்கப்பட்டது. அங்கே கையினால் செய்யப்படுகிற பொருள்களுக்கு ஒரு தனி மதிப்புக்கொடுத்தே பொருள்களை வைத்திருந்தார்கள்.

எந்தக் காலத்திலும் சரி, எந்த நாட்டிலும் சரி, கையினால் செய்யப்படுகிற பொருள் ஒருநாளும் தனது மதிப்பை இழந்துவிடாது.

## எது சிறப்பு !

கதர் எதற்கு என்று கேட்கிறார்கள். நான் அவர்களையே கேட்கிறேன், கைத்தறி எதற்கு? மில்லிலே நூற்கப்படுகிற நூலைக்கொண்டு கைத்தறியிலே துணி நெய்தால் அதைக் கைத்தறித் துணி என்கிறோம். அதாவது கைத்தறித் துணிக்கு உபயோகிக்கப்படும் நூல் மில்லில் தயாராகும் நூல். ஆனால், கதர்த் தொழிலில் நூலே கையினால் நூற்கப்படுகிறது. மறுபடியும் இந்த நூல் கைத்தறியிலேயே துணியாக நெய்யப்படுகிறது. ஆகையால், கைத்தறி போலவே இதுவும் சிறப்புடைய ஒரு தொழில் இல்லையா?

கைத்தறி, கதர் இவை எல்லாவற்றையும் காட்டிலும் மில்லில் வேலை செய்கிறவர்களுக்கு அதிக வருமானம் வருகிறது என்று சொல்கிறார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் எத்தனை மில்கள் ஏற்படுத்த முடியும்? ஏற்படுத்தினாலும் எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியும்? அதிகமான பேர்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்றாலும் ஆலையின் வேகத்தில் உற்பத்தி செய்யப்படுகிற சரக்குகளை எப்படி விற்பனை செய்வது? அத்தனை ஆலைகளை வைப்பதற்கும், அத்தனை பேர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் எவ்வளவு மூலதனம் வேண்டும்? இதையெல்லாம் சிந்திக்க வேண்டும். நம்முடைய நாட்டுப் பொருளாதார அமைப்புப்படி நம் திட்டங்கள் வகுக்கப்படுவதுதான் சிறப்புடையதாக இருக்கும்.

## சிறிய தொழில்கள்

கிராமத்திலே விவசாயிகளுக்கு, விவசாயத்திலே ஈடுபடுகின்ற நேரம் போகப் பாக்கியுள்ள ஒழிவு நேரங்களிலே வேறு வேலைதரச் சிறிய கைத்தொழில்களுக்கு வழி செய்யலாம், வாய்ப்பளிக்கலாம்.



உதாரணமாக, கோழிப் பண்ணை வைக்கலாம். கோழிப் பண்ணை என்றால் அலட்சியமாக நினைக்க வேண்டாம். சிறிய தொழில்கள் என்றால் சாதாரணமானது என்று நினைக்க வேண்டாம். அதைச் செய்து பார்த்தால், அதை ஏற்படுத்துவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பது தெரியும். அப்படி ஏற்படுத்தும் போது, முதலிலே கொஞ்சம் நஷ்டம்கூட வரலாம். நஷ்டம் வந்தால் என்ன? நஷ்டப்பட்டால்தான், பின்பு நல்ல முறையிலே அதை அமைக்க முடியும். அந்த வகையிலேதான் அமைந்து கொண்டு வருகிறது.

கிராமத்திலே உள்ளவர்கள் இவைகளை நன்றாகப் பாராட்டுகிறார்கள். நூற்பு அமைப்பாளர்கள், தங்களுடைய இதர வேலைகளினால் கொஞ்சம் நூல் வாங்குவதை நிறுத்திவிட்டால், அப்போது வரக்கூடிய புகார்களைப் பார்க்கவேண்டும்; இந்த நூல் நூற்பதையே வேலையாகக் கொண்டு, சம்பாதிக்கக் கூடியவர்கள், அதையே நம்பி ஜீவனம் செய்யக்கூடியவர்களிடம் நூல் வாங்குவது குறைந்துவிட்டது என்று சொன்னால், அதனால் எத்தனை பேர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

## பெரிய உதவி

கதருக்கும் குறிப்பிட்ட சில கிராமக் கைத்தொழில்களுக்கும்—மத்திய கமிஷன் ஒன்று இருக்கிறது. அந்தக் கமிஷனுக்கு மத்திய அரசாங்கம் நிதி வழங்குகிறார்கள். அவர்கள் இராஜ்யங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்கிறார்கள். இங்கே, மாநில ரீதியிலும் நாம் கதர், கிராமக் கைத்தொழில் போர்டு ஒன்று வைத்தி

ருக்கிறோம். அதன்மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

"இச்செலவினுல் பிரயோசனம் இல்லே, விரயம்," என்று எல்லாம் சொல்கிருர்கள். இப்பொழுதுமொத்த வரவு செலவுத் திட்டத்தில் நூற்பவர்களுக்கு மாத்திரம் இந்தத் திட்டத்தின்கீழ், ஓராண்டில் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாயும், நெய்கிறவர்களுக்கு சுமார் 35 இலட்சம் ரூபாயும் கொடுக்கப்படும். கதர்கூட கைத்தறியில்தான் நெய்யப்படுகிறது. கையால் நூற்கப்பட்ட நூலேக் கைத்தறிக்காரர்கள் துணியாக நெய்கிருர்கள். இவர்களுக்கு 35 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன்.

இன்னும் மற்ற இனங்கள்—'டை' போடுவது போன்ற காரியங்களுக்காக 5 இலட்சம் ரூபாய் கிடைக்கும். இது அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு உருப்படியாகக் கிடைக்கக் கூடிய அனுகூலமாகும்.

இன்றைக்கு 40 இலட்சம் ரூபாய் நேரிடையாக கிராமங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு,கையால் நூல் நூற்பவர்களுக்கு மட்டும் போய்ச் சேருகிறது என்று சொன்னேன். இதுவே அவர்களுடைய பிரதான வருமானம் என்று சொல்ல முடியாது. மற்ற வருமானத்தோடு இது சேரும்போது இது அவர்களுக்கு ஒரு பெரிய தொகை, பெரிய உதவி என்பதை நினைவு கொள்ளவேண்டும். இது கிராமங்களில் உள்ளவர்களுடைய குடும்ப வருமானத்தை ஓரளவு உயர்த்தவே செய்கிறது.

## வீட்டில் இருந்தபடியே...

ஆகவே இது நமக்கும் ஒரு ஆறுதல் அளிக்கக் கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. ஒரு நாளேக்கு நூல் நூற்பதன் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்ருல் அதிகமாக நூல் நூற்பதற்கும் அந்த வருமானம் அதிகப்படுத்துவதற்கும்தான் சர்க்காவில் பல ஆராய்ச்சி செய்திருக்கிறோம். அம்பர் சர்க்கா கொண்டு வந்திருக்கிறோம்.



வீட்டில் இருந்தபடியே ஒருநாளேக்கு அம்பர் சர்க்காவில் ஒரு ரூபாய், ஒண்ணரை ரூபாய் கூடச் சம்பாதிக்க முடியும். அதோடு ஒரு பெண் ஆலேயில் போய் வேலே பார்ப்பது என்ருல் வீட்டு வேலேகள் அத்தனேயும் பாதிக்கப்படும். ஆனுல் இப்போது வீட்டில் இருந்தே இந்தத் தொழிலில் ஈடுபடுவதினுல் வீட்டு வேலேகளேயும் கவனித்துக்கொள்ள முடிகிறது.

ஆகவே, நம்முடைய பொருளாதார அமைப்புக்கு ஏற்றபடி நம் கிராம மக்களுடைய வருமானத்தைப் பெருக்க வழி செய்வது அடிப்படைக் கிராமக் கதர் தொழில்தான் என்பது நிச்சயம்.

## உப வருமானம்

இந்தக் காலத்திலே ஏன் கதருக்கு இவ்வளவு செலவு செய்யவேண்டுமென்று கேட்கிருர்கள்? நம்முடைய பொருளாதார நிலேமையை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். நான் குறிப்பிட்டபடி, பெரிய தொழிற்சாலேகளினுல் மட்டும் வேலேயில்லா திண்டாட்டத்தைப் போக்கிவிட முடியாது. மக்களின் பொருளாதார நிலேமையை உயர்த்திவிட முடியாது.

இப்போது கதர் இயக்கத்திஞல் மட்டும் இரண்டு இலட்சம் பேர்களுக்கு மேல் வேலே கொடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகிறது. வேலேகிடைக்காதவர்களுக்கு ஓரளவுக்கு வேலே கிடைக்கிறது. மேலும் குறைந்த

ஊதியம் பெறுபவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் உபவருமானம் கிடைக்கிறது.

ஏற்கனவே, குறைந்த வேலையில் இருப்பவர்களுக்கு உபவருமானம் அளிப்பதுதான் இந்தக் கிராம கைத்தொழில் இயக்கத்தின் முக்கியமான தத்துவம்.

# 14. கொள்கை உணர்வு

நம்முடைய நாடு ஒரு விவசாயப் பொருளாதார அமைப்பிலே இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## இரண்டு இலட்சம் பேருக்கு வேலை

சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் சுற்றுப்புறத்தில் 50 ஆயிரம் பேர் ஆலையிலே வேலை செய்கிறார்கள். கோவை நகரத்திலேயும் அம்மாதிரி 50 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். மதுரை நகரத்திலும் அம்மாதிரி 50 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். நூற்பு ஆலைகளில் மட்டும் அல்ல, மற்ற எல்லா ஆலைகளிலும் 2 இலட்சம் பேர் வேலை செய்கிறார்கள். அதே சமயத்தில் ராட்டையின் மூலமாக இரண்டு இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கிறது என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏன் இவ்வளவு முதல், இந்தக் கதர்த் தொழிலில் போடவேண்டுமென்று கேட்பவர்கள், இதனால் இரண்டு இலட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதை, இந்த திட்டம் இல்லாவிட்டால் இரண்டு இலட்சம் பேர் வேலை இல்லாமல் தவிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை உணரவேண்டும்.

**ஓரளவு நிவாரணம்**

இப்பொழுது ஒரு நிலைமையைப்பற்றிச் சொல்லு கிறேன். ஒரு பகுதியிலே பெண்களுக்கு நாற்று நடுவது களை பறிப்பது போன்ற விவசாய வேலை செய் வதுதான் ஜீவனம் என்று வைத்துக்கொள்வோம். அவர்கள் மூன்று அல்லது நான்கு மணி நேரம்தான் வேலை செய்வார்கள். காலை 9, 9-30 மணியில் இருந்து மத்தியானம் 12-30—1 மணி வரையில்தான் வேலை செய்வார்கள். அவர்களுக்கு முன்னால் 8 அணு கூலி இருந்தது. இப்பொழுது அவர்கள் சொல்லுகிறார்கள் எங்களுக்கு நிழலில் இருந்தபடியே ராட்டை நூற்றாலே 10 அணு கிடைக்கிறது, ஆகவே 12 அணு கூலி கொடுத் தால்தான் நாற்று நடுவோம் என்று சொல்லுகிறார்கள். ஊதியத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு ராட்டை அவர் களுக்கு ஒரு ஏதுவாக இருக்கிறது. அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 10 அணு கிடைத்தாலே பெரிதாக நினைக்கிறார்கள். இது கூடக் கிடைக்காமல் அவதிப் படுகிறவர்கள், எத்தனையோ பேர் இருக்கிறார்களே !

இதனால் வேலையில்லாத மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கொடுக்கிறது. இந்த நாட்டின் பொருளா தார இணைப்பை மனத்திலே வைத்துக்கொண்டு பார்த் தால் கதர், சிறு கைத்தொழில்கள் ஆகியவைகளை கிராமங்களிலே அதிகமாக ஏற்படுத்தினால்தான் விவ சாயத்தில் ஈடுபட்டிருக்கிற பெரும்பான்மையான கிராம மக்களுடைய பொருளாதார நிலையையும் வாழ்க் கைத் தரத்தையும் உயர்த்த முடியும். இந்த திட்டங் களின் மூலம் அவர்களுக்கு உப வருமானம் கிடைப்ப தற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது.

**கட்சியின் சின்னம்**

கதர் கட்டுவதுபற்றி உள்ளே என்ன இருக்கிறது, வெளியே என்ன இருக்கிறது, கருப்பு இருக்கிறது,



சிவப்பு இருக்கிறது என்றெல்லாம் பேசப்படுகிறது. கதர் கட்டுவதென்றால் சில பேர் தவறாக நினைக்கிறார் கள்.

ஒரு கட்சி செய்கிற நல்ல காரியங்களை ஏற்றுக் கொண்டால், அந்தக் கட்சிக்குச் சகல விதத்திலும் உட்பட்டுவிட்டதாக அர்த்தமல்ல. இதை மறந்து எத்தனையோ அரசியல் கட்சிகள் இருக்கின்றன. எல்லா கட்சிகளும் சேர்ந்து பல நல்ல திட்டங்களை உருவாக்குகின்றன. அதில் கதரும் ஒன்று.

ஆகவே, காங்கிரஸ்காரர்கள்தான் கதர் கட்டுவார் கள் என்று நினைப்பது தவறு. கதர் கட்டவேண்டும் என்ற நிர்ப்பந்தம் காங்கிரஸ் விதியில் இருக்கிறது. ஆகையால் கதர், ஒரு அரசியல் கட்சியின் சின்னம் என்று சொல்வது சரியல்ல. ஏதோ சர்க்கார் உத்தி யோகஸ்தர்கள் கதர் போட்டுக் கொள்வதினால், அவர் கள் காங்கிரஸ் கட்சியிடம் அனுதாபம் காட்டுகிற வர்கள் என்றும் அர்த்தம் அல்ல.

சுதந்திரா கட்சி முதலிய மற்ற கட்சிக்காரர்களும் கதர் கட்டுகிறார்கள். உண்மையில் அவர்கள் கதர் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் என்ன இருக்கிறது? அதனால் அவர்கள் காங்கிரசுக்கு கட்டுப்பட்டவர்கள், உறவு கொண்டாடுகிறவர்கள் என்று சொல்ல முடி யாது. காங்கிரசிலும் சிலர் கதர் கட்டாதவர்கள் இருக்கலாம். அவர்கள் உண்மையான காங்கிரஸ் காரர்கள் என்று சொல்வதற்கில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிபந்தனை, கதர் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது.

**கொள்கை உணர்வு**

அரசாங்கம் அனுசரிக்கும் பொருளாதாரக் கொள் கையாகக் கதர் இருக்கிறது. அதனால் அரசாங்கம்

இதில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கெனத் தனியாகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறது. நஷ்டம் வந்தாலும், பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பதற்காக இதில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் இது அரசாங்கம் அனுசரிக்கும் கொள்கை என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இதை ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆகையால் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு இதில் நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்கு இடம் இல்லை. அப்படிச் சொல்லக் கூடாது. திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அதிகாரிகளுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்கு எங்கே இடம் இருக்கிறது? அவர்களைக் கதர் போட்டுக் கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யவில்லை. நிர்ப்பந்தம் செய்வதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. உத்தியோகஸ்தர்களே கதர் கட்டுவார்களானால் அது அவர்களுக்கு அழகு, அரசாங்கத்தின் கொள்கையை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

## நிர்ப்பந்தம் இல்லை

இதில் கட்சி ஒன்றும் இல்லை. சிலர் நிர்ப்பந்தம் இருப்பதாகச் சொன்னார்கள். எந்த இலாகாவிலும் இந்த மாதிரி நிர்ப்பந்தம் இல்லை என்று நான் சொல்லுவேன். அரசாங்கம் இதை ஒரு கொள்கையாக நிர்ணயித்து, அனுசரித்து வருகின்றது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அந்தக் கொள்கைப்படிதான் நடந்து கொள்ளவேண்டும். இல்லையென்றால் ஒரு தரக் குறைவு என்றுதான் அர்த்தம். அதற்காக நிர்ப்பந்தம் செய்யப்போவது இல்லை. செய்யவும் மாட்டோம்



V2:11, 2[illegible]M97 N164

என்றுகூடச் சொல்லுவேன். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாவிட்டால் பொதுமக்கள் நம்பிக்கை குறைவாகத்தான் நினைப்பார்கள். ஒரு தரக் குறைவு என்றுதான் கருதுவார்கள்.

எந்த இலாகாவிலும் நிர்ப்பந்தம் இல்லை. இந்த விஷயத்தில் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதுதான் முக்கிய நோக்கம். கதர் கடையில் இருப்பவர்கள் வேண்டுமானால் சிலர் கதர் துணி கட்டாமல் இருக்கலாம். சிலர் கைத்தறித் துணிகூடக் கட்டாமல் மில் துணிகளைக் கட்டுகிறார்கள். ஓரளவுக்கு இந்த இலாகா சம்பந்தப்பட்ட வரை, நிர்ப்பந்தம் செய்தால் கூடத் தவறு ஒன்றும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

இதை நடத்துகிற உத்தியோகஸ்தர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று புகார் சொல்லப்படுகிறது. இதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? நடத்தையினால்தான் தெரிந்து கொள்ள முடியும். அவர்களுடைய நடத்தை சரியாக இல்லாவிட்டால் அவை கவனிக்கப்பட்டு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கும்.

## விற்பனையில் அக்கறை

முன்பு கதர் இயக்கத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இருந்தார்கள், இப்பொழுதுதான் நம்பிக்கை இல்லையென்று கூறுவது சரியல்ல.

நான் முன்பு கவனித்து இருக்கிறேன். அப்பொழுது கதர்க் கடைக்குப் போனால், அங்கு இருப்பவர்கள் ஏறிட்டுக்கூடப் பேசமாட்டார்கள்; தலைவிதியே என்று இருப்பார்கள். இருக்கிறவர்கள் அவர்களுடைய முகத்தைப் பார்த்துவிட்டுப் போய்விடுவார்கள். இப்பொழுது கதர் விற்பனை நிலையங்களில், வருகிறவர்களை வரவேற்று, இருக்கும் நிலையைச் சொல்லி, அக்கறை காட்டும்படி செய்து

ARCHIVES MADRAS 1104-51

வேண்டிய உதவிகளை அளித்து விளக்கம் கொடுப்ப தற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதன் மூலம் விற்பனை அதிகம் நடை பெற்று வருகிறது.

விலையைப் பற்றியும் ஊதியத்தைப் பற்றியும் கவனிக்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது நெய்கிற வர்களுடைய ஊதியம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான் கதரினுடைய விலை ஓரளவு அதிகமா கவே இருக்கிறது. கதரின் தரமும் இப்போது உயர்ந்து இருக்கிறது.

**விலையும் தரமும்**

எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரிந்து கொள் வதுபோல் கதரைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். கதர் வாங்கி உபயோகித்துப் பார்த்தால் மூன்று நான்கு மாதங்களில் கிழிந்து விடுகிறது என்று சொல்ல மாட்டார்கள். அதன் தரம் நன்றாக உயர்ந்து இருக்கிறது. அரசாங்கக் கதர் கடைகளில் வாங்கலாம்; சர்வ சேவா சங்கத்தின் கடைகளிலும் வாங்கலாம். இதை உபயோகிப்பவர்களுக்கு அனுபவம் இருக் கிறது. தரம் உயர்ந்து இருக்கிறது என்பதை அறி வார்கள்.

இப்பொழுது அம்பர் சர்க்கா பரப்பப்பட்டு வருவதால் கதரின் விலையைக்கூட ஓரளவுக்குக் குறைக்க முடியும். சில உயர்ந்த தரங்களுக்கு விலை அதிகமாக இருக்கலாம். இந்தக் கதர் திட்டத்தினால் இரண்டு இலட்சம் பேர்களுக்கு மேல் வேலை கொடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. பொதுமக்கள், முக்கிய மாகப் பெண்மணிகள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை மேலும் மேலும் கவனம் செலுத்தி கதரின் விலை யைக் குறைக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம்.

# 15. கதர் உற்பத்தி

கதர் உற்பத்தி செய்வதில் நிர்ப்பந்தமொன்று மில்லை. சுய தேவைப் பூர்த்தி ஏற்பட வேண்டும் என்பதுதான் இதன் அடிப்படையான கொள்கை. ஆகவே யார் நூல் நூற்றாலும் அதைக் கொண்டு போய்க் கொடுத்தால் துணியாகவே கொடுப்பது என்கிற முறையை இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம். அதனுடைய மதிப்பைப் பயன்படுத்த வேண்டும் என்கிற முறையில்தான் இவ்விதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

**மத்திய கமிஷன்**

மத்திய அரசாங்கத்தின் கிராமக் கைத்தொழில் கமிஷன் மூலமும் கதர் உற்பத்திக்கு உதவி அளிக்கப் படுகிறது. இது தவிர தனிப்பட்ட நபர்களும் கதர் அபிவிருத்தியில் வேலை செய்து வருகிறார்கள். சர்வ சேவா சங்கமும் கதர் அபிவிருத்தியில் ஈடுபட்டிருக் கிறது. இவைகள் எல்லாம் அரசாங்கத்தால் கொடுக் கப்படும் எல்லா உதவிகளையும் பயன்படுத்திக் கொள் கின்றன. அது மேலும் பயன் தரத்தக்க முறையில் எல்லாத் தொழில்களையும் அபிவிருத்தி செய்யவேண் டும் என்பதுதான் நோக்கம்.

## போட்டி இல்லை

கதர் விஷயத்தில் அரசாங்கத்திற்கும் சர்வ சேவா சங்கத்திற்கும் ஏதோ போட்டியிருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. எந்த விதமான போட்டா போட்டியும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சர்வ சேவா சங்கத்தை ஆரம்பித்து வைத்ததே ஆச்சார்யா விநோபாபாவே அவர்கள்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சில ஆண்டுகளுக்கு முன்பு ஆச்சார்யா விநோபா பாவே அவர்கள், இந்த அரசாங்கம் கதர் விஷயத்தில் எடுத்திருக்கும் அக்கறையையும் வேலைகளையும் பார்த்து பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு பழனியில் இருந்த போது அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் சர்வசேவா சங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைத்துப் பல பிரச்சினைகளையும் பற்றிப் பேசி, கதர் அபிவிருத்திக்காக எந்த முறையில் எல்லாம் அரசாங்கம் ஈடுபடலாம் என்பதைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசி, அதற்காகப் பல வழிகளையும் காட்டினார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் திருப்பூரில் கதர் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட ஒரு அரங்கை சர்வ சேவா சங்கத்தினரே ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் சர்வ சேவா சங்கத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் பிரதிநிதிகள், கதர் சம்பந்தப்பட்ட ஊழியர்கள், கதர் உற்பத்தி செய்கின்றவர்களின் பிரதிநிதிகள் இவர்கள் எல்லாம் சேர்ந்து இருந்து மூன்று நாட்கள் அந்த அரங்கிலிருந்து கதர் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் விவாதித்தார்கள். இவைகளை எல்லாம் சர்வ சேவா சங்கத்தினரே முழு முயற்சி எடுத்து நடத்தினார்கள்.



இதிலிருந்து எல்லாம், அரசாங்கத்திற்கும் சர்வ சேவா சங்கத்தினருக்கும் எந்த விதமான வேறுபாடும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம். ஆகவே இதில் ஏதோ தகராறு இருப்பதாக எண்ண வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## இரண்டு வகையில் உற்பத்தி......

நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இப்போது இரண்டு வகையிலும் கதர் அபிவிருத்திக்காகத் திட்டங்கள் போடப்பட்டிருப்பதால் யாருக்கும் பாதகம் ஏற்பட்டு விடவில்லை என்பதே. கதர் உற்பத்தி எல்லாம் இரட்டிப்பாகியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு உண்மையிலேயே கதர் உற்பத்தி மிகவும் பெருகியிருக்கிறது. நாட்டில் வேலையில்லாது இருக்கின்ற ஆட்களுக்கெல்லாம் சர்க்காக்கள் கொடுத்து வருவதன் மூலமாக வேலை கிடைக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. 1946-லிருந்து எடுத்துக் கொண்டால் சர்க்கார் கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதனால் யாருக்கும் பாதகம் ஏற்பட்டு விடவில்லை. இதனால் சர்வ சேவா சங்கத்திற்கும் எந்த விதமான வருத்தமும் கிடையாது, அவர்களுக்கு எந்த விதமான நஷ்டமும் கிடையாது.

## கிராம உத்யோக் பவன்

சென்னையில் கூட இப்போது அகில இந்திய காதி கமிஷன் ஆதரவில் காதி கிராம உத்தியோக் பவன் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களிடம் கைத்தொழில் சாமான்கள் எல்லாம் கிடைக்

கும். அங்கு குறிப்பாக நல்ல கதர் ரகங்கள் கிடைக்கின்றன. நல்ல கைகுத்தல் அரிசி கொடுக்கிறார்கள். நல்லெண்ணெய் விற்கிறார்கள். கைத்தொழிலில் தயாரித்த வெல்லம் விற்று வருகிறார்கள்.

இன்றைக்கு கிராம உத்யோக் பவன் என்பது சென்னையில் யாத்ரீகர்கள் வந்தால் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாக விளங்குகிறது. இங்கு அதிகமாகக் கதர் விற்பனையாகிறது என்றால், அதனால் வேறு யாருக்கும் பாதகமில்லை. இது தவிர அரசாங்கத்தின் சார்பிலும் பல கதர்டிப்போக்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஒருவருக்கொருவர் போட்டி போடுகிறார்கள் என்று அர்த்தமல்ல. எந்த அளவுக்குக் கதர் அதிகமாக விற்பனையாகிறதோ அந்த அளவுக்கு நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

## தீவிரத் திட்டம்

அரசாங்கத்தின் திட்டங்களாக, எல்லா சமுதாய நல அபிவிருத்திப் பகுதியிலும் கதரை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்ற முறையில் 'தீவிரத் திட்டம்' என்றும், 'விரிவான திட்டம்' என்றும் ஆரம்பித்து கிராமங்களில் எல்லாம் அதிகமான அளவில் சர்க்காக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இப்போது கதர் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. சர்வ சேவா சங்கமும் இதைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதன் மூலமாக அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் இல்லை. சர்வ சேவா சங்கத்தினரும் பல முறையில் வேலை செய்து வருகிறார்கள்.



நமது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் கீழ் வரும் வேலைகளைப் பற்றியும், கதர் இயக்கத்தில் அரசாங்கம் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் மற்ற ராஜ்யங்கள் எல்லாம் நமது அரசாங்கத்தைப் பாராட்டுகின்றன.

இந்த இராஜ்யத்திலுள்ள சர்வ சேவா சங்கமும், மற்றவர்களும் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் எல்லாம் நல்ல முறையில் விற்பனை ஆகிறது. அரசாங்கத்தின் கதர் இலாகாவால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் எல்லாம் அதிகப்படியான அளவுக்கு விற்பனை ஆகிறது. எந்த அளவுக்கு விற்பனை ஆக வேண்டுமோ அந்த அளவுக்கு விற்பனை ஆகி வருகிறது.

## காந்திஜியோடு போயிற்று?

ஆனால் சிலர் சொல்லுகிறார்கள் காந்தியடிகளுடன் கதர் போய்விட்டது என்று. அது சரி இல்லை. இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்த்தால் இப்பொழுது எவ்வளவோ அதிகமாக உற்பத்தியாகிறது. கதரின் தரமும் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். எந்த அளவுக்கு உற்பத்தியாக வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அதைவிட அதிகமான அளவில் இப்பொழுது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கதர் உற்பத்தி செய்ய வேண்டுமானால் சர்க்கா வேண்டும். சர்க்காவை வைத்துக்கொண்டு உற்பத்தி செய்கிறவர்களுக்கு இப்பொழுது அதிகப்படியான வருமானம் கிடைக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதில் வேலை செய்யக்கூடியவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய அளவில் சர்க்காவில் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொல்லலாம்.

அதை இன்னும் எவ்வளவோ விஸ்தரிக்க வேண்டிய தாக இருக்கிறது.

**அம்பர் சர்க்கா**

இப்பொழுது அம்பர் சர்க்காவையும் விஸ்தரிக்க வேண்டியதாக இருக்கிறது. அதிகப்படியான அம்பர் சர்க்காவை உற்பத்தி செய்ய வேண்டியதாக இருக் கிறது. ஆனால் அப்படி உற்பத்தி செய்ய முடியவில்லை.

அம்பர் சர்க்காவை உற்பத்தி செய்வதற்கு வெளி நாட்டிலிருந்து சில சாமான்கள் வரவேண்டிய தாக இருக்கிறது. அது வேண்டிய அளவில் இங்கு இல்லாத் காரணத்தால் அதிகப்படியான அம்பர் சர்க் காவை உற்பத்தி செய்ய முடியவில்லை. அந்த சாமான் கள் எல்லாம் வெளி நாட்டிலிருந்து வந்துவிட்டால் இன்னும் அதிகப்படியான அம்பர்ராட்டைகளை இங்கே உற்பத்தி செய்து விடலாம். அதற்கு வேண்டிய திட்டமும் போடப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும் அம்பர் சர்க்காவிலும் ஒரு அபிவிருத்தி செய் யப்பட்டு, இன்னும் துரிதமாக நூல் நூற்க வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இப்பொழுது கதர் ஏராளமான அளவில் பெருகி இருக்கிறது. இன்னும் அதிகமாகக்கூடப் பெருக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் அரசாங்கம் இதைச் சரியாக நடத்த வேண்டியதாக இருக்கிறது. இதற்கு அகில இந்திய காதி கமிஷன் சார்பாக ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டபூர்வ கமிஷன் மூலமாக இந்த அரசாங் கம் உற்பத்தி செய்கிறது. அதனால் காதி அல்லது சர்வ சேவா சங்கம் இன்னும் விஸ்தரிக்க வேண்டிய தாக இருக்கிறது. அதற்கு அனுசரணையாக உற்பத்தி யைப் பெருக்க ஏற்பாடாகி இருக்கிறது.

# 16. இணைந்த செயல்

நமது ராஜ்யத்தில் கதர் அபிவிருத்தி இயக்கமும், கிராம கைத்தொழில் இயக்கமும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

**தனிபோர்டு**

நம்மைப் பொறுத்த மட்டில் மத்திய அரசாங்கம் செய்வதாக இருந்தாலும் சரி, அல்லது சர்வ சேவா சங்கம் செய்வதாக இருந்தாலும் சரி அல்லது தனி ஸ்தாபனம் செய்வதாக இருந்தாலும் சரி ஒன்றுக்கு ஒன்று இணைந்து செய்யவேண்டும். அப்பொழுது தான் சிறந்த முறையில் நடைபெறும்.

ஆகவே, கதர் கிராமக் கைத்தொழில் அபி விருத்திக்காக ஒரு போர்டு என்று அமைத்து தனியாக மேலும் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வகை செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடு சட்டம் செய்யப்பட்டது. இதுவரை எடுத்துக் கொண்டிருக் கிற நடவடிக்கைகள் போதாது. இன்னும் சட்ட பூர்வ மாக கதர் கிராமத்தொழில் போர்டு என்றே ஏற்படுத்தி அதன் வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்ய வேண் டும் என்பது இந்த சட்டத்தின் நோக்கம்.

**வழக்கமான புகார்**

இந்த மாதிரி மத்திய போர்டு ஒன்று இருப்பதால், இந்தத் தொழில்களின் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள

தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இந்த போர்டினிடத்தில் இருந்து உதவி பெறுகின்றன.

சர்க்கார் தனியாக நம் மாகாணத்தில் இப்படியெல்லாம், கதர், கிராமத் தொழில்கள் வளர்ச்சிக்குச் சட்ட பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவரும் நேரத்தில், சிலர் தங்கள் வழக்கமான புகார்களைக் கூறுகிறார்கள்.

இந்தக் காலத்தில் கதர் எதற்கு? பெரிய தொழில்கள் வளர வேண்டியிருக்கிறது. கதர்த் தொழில் என்றைக்கோ சுதந்திரத்தைப் பெறுவதற்குச் சாதனமாக கையாளப்பட்ட ஒரு விஷயம். நான் கூட அப்போது கதர் கட்டிக்கொண்டிருந்தேன். ஆனால் இப்போது அந்தத் திட்டம் எதற்கு? அது என்ன வகையில் பொருளாதார வளர்ச்சிக்கு உபயோகப்படும்?'' என்பதாகச் சிலர் கூறுகின்றனர்.

## இலாபமா? நஷ்டமா?

இவர்கள் கதரைப் பற்றிப் பாராட்டுகின்றனர். கிராம கைத்தொழில்களைப் பற்றிப் பாராட்டிப் பேசுகிறார்கள். வேலை வாய்ப்பு இதனால் இருக்கிறதென்று கூட ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அத்திட்டம் சரியாக நடைபெறவில்லையென்கிற குறையையும் சொல்கிறார்கள். நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள்.

அவர்களுக்கு நான்சொல்கிறேன், உற்பத்தியானது எவ்வளவு, விற்கப்பட்டது எவ்வளவு என்று பார்த்து பாக்கி கையில் இருக்கும் சரக்கு எவ்வளவு? நஷ்டமா இலாபமா என்று கணக்குப் போடவேண்டும். கையில் இருக்கும்படியான 'ஸ்டாக்' எவ்வளவு என்று கணக்



குப் பார்க்காது நஷ்டம் என்று சொல்லிவிடமுடியாது. உற்பத்தியான செலவு, விற்கப்பட்டு "பணமாக'' வந்துவிட்ட தொகை, பாக்கி கையில் இருக்கும்படியான ஸ்டாக்எல்லாவற்றையும் ஒருமிக்கப் பார்த்தால் இத்தொழில் இலாபத்தில் நடைபெறுகின்றதென்று தெரியும்.

## பயிற்சியும் பலனும்

அம்பர் சர்க்கா பயிற்சிக்கு, காதி, கிராமத் தொழில் கமிஷன் தரும் மானியத்தின் மூலம் செலவு செய்யப்படுகிறது. இந்த இனத்திலே பயிற்சி அளிப்பதில் எப்படி இலாபம் உடனே காட்ட முடியும்? பயிற்சிக்குப் பிறகு இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள், அதுதான் இலாபம்.

கதர் திட்டம் நிறைவேற்றப்படுவதிலே நஷ்டம் என்ன? நான் முன்னால் சொன்னமாதிரி கணக்குப் போட்டுப் பார்த்தால் இதில் நஷ்டம் இல்லை. அதுதான் சொல்வேன். கதர் திட்டத்தில் டல அம்சங்கள் இருக்கின்றன. ஆகையால் வியாபார ரீதியில் மட்டும் வரவு செலவை எடுத்துக்காட்ட முடியாது. இருந்தாலும் இதிலே, முன்பெல்லாம் இந்த இயக்கம் தோன்றிய காலத்தில், அதிகமான நஷ்டம் இருந்தது. எத்தனையோ பேர் உற்சாகத்தில் இதில் ஈடுபட்டு நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். இப்போது அப்படியில்லை. உற்பத்தி பெருகிக் கொண்டே வருகிறது. இதற்கேற்றவாறு இப்பொழுது சிறப்பாக நடைபெற்று வருகிறதென்று நான் சொல்லுவேன்.

## நல்ல ஆர்வம்

கதர் இயக்கத்தில் போடப்பட்டிருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு கதர் அபிவிருத்தியில் ஆர்

வம், அக்கறை இல்லை என்று சொல்லப்படும் புகாருக்கு மீண்டும் ஒருமுறை விளக்கம் தரவிரும்புகிறேன். அந்த அதிகாரிகளைப் பற்றி அப்படிச் சொல்வது சரியல்ல. இங்கு வருவதற்கு முன்னதாக அவர்களுக்கு இருந்ததோ இல்லையோ அதைப்பற்றித் தெரியாது. இந்த இலாகாவுக்கு வந்த பிறகு அவர்களுக்கு கதர் அபிவிருத்தியில் நல்ல ஆர்வமும், அக்கறையும் இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். நானே இதைக் கவனித்திருக்கிறேன்.

இப்பொழுது இருக்கக் கூடியவர்களுக்குக் கதர் உற்பத்தியில் நம்பிக்கை இருக்கிறது. அதைப் பற்றிச் சந்தேகிக்கவேண்டியதே இல்லை. அவர்களுக்கு இதில் பக்தி இல்லை என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு இதில் பக்தி இல்லை என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தால் இதுவரையில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும். அங்கு வேலை செய்யக்கூடிய அதிகாரிகள் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் தான் வேலை செய்கிறார்கள். கதர் உற்பத்தியை இன்னும் மேலும் மேலும் பெருக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்.

நமது ராஜ்யம் இந்த வகையில் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. நமது ராஜ்யத்தில் இந்தப் பணி சீராக இருப்பதைக்கண்டு மற்ற ராஜ்யங்களும் நம்மைப் பின்பற்றி வருகின்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

# 17. கதர்ப் பணி

காந்தியடிகள் தமது வாழ்நாளில் கடைப்பிடித்துப் போராடிய பல்வேறு இலட்சியங்களில் கிராம சுய தேவைப் பூர்த்தியும் ஒன்று; இதை அவரது மிகமுக்கியமான இலட்சியமாகவும் கூறலாம். அதிலும், கதருக்கு இடமில்லாத கிராமப் பொருளாதாரத்தைப் பற்றி அவரால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. அவருக்குக் கதர் என்பது சுதந்திர உணர்ச்சியை குறிப்பிடுவதாக மட்டும் இல்லை; அதைக் காட்டிலும் முக்கியமான ஒன்றின் சின்னமாகவும் அது விளங்கியது.

## சுயதேவைப் பூர்த்தி

கிராமிய இந்தியாவின் ஆன்மாவாகவே கதரைக் காந்தியடிகள் கருதினார். கிராமவாசிகளுக்குக் கதரில் அசைக்க முடியாத நம்பிக்கை இல்லாவிட்டால், கிராம சுயதேவைப் பூர்த்தி என்பது அடைய முடியாத ஒரு கற்பனை இலட்சியமாகவே நின்றுவிடும் என அவர் கருதினார்.

ஒவ்வொரு கிராமவாசியும் தனக்கு வேண்டிய பருத்தியைத் தானே பயிரிட்டு தனது ராட்டையில் நூற்று தனக்கு வேண்டிய துணியைத்தானே உற்பத்தி செய்து கொள்ளவேண்டும் என்பதே அவரது குறிக்கோள். அதாவது தனது துணித்தேவைக்காக எந்த கிராம வாசியும் ஆண், பெண் அனைவரும் உட்பட—

வெளியாரின் உதவியை எதிர்பார்த்து நிற்கக்கூடாது என அவர் எண்ணினார்.

## வேறுவிதத்தில் பணி

ஆனால் எப்படியோ, நாளடைவில் கதரின் இந்த சுயதேவைப் பூர்த்தி அம்சம் மறைந்து விற்பனை நோக்கம் இடம் பெற்று விட்டது. இதன் பயனாகக் கிராமப் புறங்களில் உற்பத்தியாகும் கதர், அதன் உற்பத்தி ஸ்தலங்களில் செலவாவதைக் காட்டிலும் நகரங்களிலேயே அதிகமாகச் செலவாவதைப்பார்க்கிறோம். அதாவது கதர் தனது சமுதாய நலப் பணியை வேறு விதத்தில் செய்து வருகிறது.

முழு நேரமும் வேலை வாய்ப்பில்லாத கிராமப் பகுதி மக்களுக்கு நூற்பு—நெசவுக் கூலி தருவதன் மூலமாக அவர்களின் வாழ்க்கைக்கான ஒரு உப தொழிலாக கதர் நெசவு விளங்குகிறது. ஆனால் இது போதாது. கோடிக்கணக்கான நமது கிராமவாசிகளின் துணித் தேவை முழுவதையும் பூர்த்தி செய்யும் அளவுக்குக் கதர் வளர்ச்சியடைந்தால்தான் தனது இலட்சியத்தை அது பூர்த்தி செய்ததாகக் கருத முடியும்.

## விற்பனை குறையாது

கதரின் உற்பத்தியும் விற்பனையும் பல ஆண்டுகளாகவே மிகவும் அதிகரித்து விட்டது. சென்னை ராஜ்யத்தில் கதர் விற்பனை மூன்று கோடி ரூபாய் அளவை எட்டி விட்டது. நான்காவது திட்டத்தின் முடிவில் இது இரண்டு மடங்காகப் பெருகிவிடும். கதர் விற்பனையை அதிகரிப்பதில் அதுவும் நகரப் பகுதிகளில் சில்லரை விற்பனைக்குக் கொடுக்கப்படும் மானியம் பெருமளவுக்குக் காரணமாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.



இங்கிலையில் கதர் சில்லரை விற்பனைக்கு அதாவது கதர் வாங்குபவர்களுக்கு கொடுக்கப்படும் மானியத்தை எடுத்து விட்டால் கதர் வாங்குபவர்கள் குறைந்து விடுவார்கள் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தக் கருத்தைப் புறக்கணித்துவிட முடியாது என்றாலும், இலவச நெசவுத் திட்டத்தால் நகரங்களிலுள்ள கதர் வாடிக்கையாளர்களுக்கும் முன்பு போலவே அனுகூலங்கள் கிடைக்கும் என கதர்—கிராமத் தொழில் கமிஷன் உறுதியளித்திருக்கிறது.

## இருவகைச் சிறப்பு

தற்போது கிடைத்து வரும் அதே விலையிலேயே கதர் தொடர்ந்து மக்களுக்குக் கிடைத்து வரும். கதர் சில்லரை விற்பனைக்கு அளிக்கப்படும் மானியமும் அதற்குப் பதிலாக புதிய திட்டத்தின் கீழ் அளிக்கும் நெசவு மானியமும் அநேகமாக ஒரே அளவில்தான் இருக்கும். எனவே இத்திட்டத்திற்கு இருவகைச் சிறப்பு இருக்கிறது; ஒன்று, கிராமவாசிகளுக்கு மிகவும் குறைந்த விலையில் கதர் கிடைக்கும்படி செய்து, அதன் மூலம் கிராமங்களில் ஆடை சுயதேவைப் பூர்த்தி மலரச் செய்கிறது. இரண்டாவதாக, தற்போது கிடைத்துவரும் அதே விலைக்கே மக்களுக்குக் கதர் கிடைக்கும்படி செய்கிறது.

## நெசவுமான்யம்

நெசவு மான்ய திட்டம் முற்றிலும் நூதனமான திட்டமல்ல; சுயதேவைப் பூர்த்திக்காக நூற்கப்படும் நூலை நெசவு செய்ய ஆகும் செலவில் 75 சதவிகிதம் இப்பொழுது மான்யமாகத் தரப்படுகிறது. இதற்கு மேல் இந்த நெசவிற்கு ஏற்பாடு செய்யும் ஸ்தாபனங்களுக்கு நெசவு செய்யப்படும் துணிக்கு 1 சதுரகஜத்

திற்கு 12 நயா பைசா வீதம் 5000 சதுர கஜம் வரை மான்யமளிக்கப்படுகிறது. இதற்கு மேல் நெசவு செய்தால் சதுரகஜத்திற்கு 3 நயா பைசா மான்யமளிக்கப்படுகிறது.

குஜராத், தமிழ்நாடு போன்ற ராஜ்யங்களில் ராஜ்ய போர்டு அல்லது ஸ்தல கழகங்கள் நூற்பவர்கள் நெசவுச் செலவிற்காக 20 சதவிகிதம் அதிகப்படி மான்யம் அளித்து வருகின்றன. ஆனால், இந்த நெசவு மான்யம் சாதாரண கதர் துணி நெசவிற்காகத்தான். புதுத் திட்டப்படி எல்லாவித நெசவுகளுக்கும் மான்யம் கிடைக்கும்.

## கிராமத்தில் பரவும்

இப் புதுத்திட்டத்தினால் பல நன்மைகள் உண்டு. கிராமங்களில் பருத்தி விளைவித்து நூற்பவர்கள் எவ்விதச் செலவுமின்றி துணி தயாரித்துக் கொள்ளலாம். துணி வாங்கப் பணமின்றி, ஆனால் உழைக்கத் தயாராக இருக்கும், கிராமவாசிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

பருத்தி தயாரிக்காத கிராமவாசிகள் குறைந்த செலவில் துணிகள் பெற முடியும். 1 சதுர கெஜத்திற்கு 37 நயா பைசாதான் அவர்கள் தரும்படி இருக்கும். உழைப்பால் குறைந்த செலவில் துணி கிடைக்கும் என்பதால், மேலும் அதிக கிராமவாசிகள் நூற்பதில் முனைவார்கள். நூற்காத கிராமவாசிகளுக்கும் குறைந்த செலவில் துணி கிடைக்கும். மில் துணிகளைவிட விலை குறைவாகவே இருக்கும். ஏனென்றால், கிராமத்திலேயே நூற்று அங்கேயே நெசவு செய்யப்படுவதால் போக்கு வரத்து செலவு கிடையாது. இப் புதுத் திட்டப்படி கிராமங்களில் கதர் நன்றாகப் பரவும்.



## காந்திஜியின் கனவு

காந்தியடிகள் ஆரம்பித்து வளர்த்த கதர்ப்பணி, தற்போது திறமையும் அனுபவமும் தியாகமும் மிக்க தொண்டர்களின் கையிலேயே இருக்கிறது. ஆச்சாரிய வினோபாஜியைப் போன்ற மகான்களும் நம்மிடையே வாழும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. கிராமவாசிகள் சமுதாய ரீதியாகவும் பொருளாதாரத்துறையிலும் தன்னிறைவு பெற்றவர்களாய் வளர்ச்சியடைவதற்குப் பாடுபடுவதே நமது வாழ்க்கைப் பணியாக இவர்கள் கொண்டிருக்கின்றனர். எல்லா இடங்களிலும் கதர் நெசவு பரவுவதற்கு வாய்ப்பளிக்கும் இப்புதிய திட்டத்திற்கு வினோபாஜியைப் போன்றவர்கள் ஆசி அளித்திருப்பது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். காந்தியடிகள் கனவு கண்ட கிராம ராஜ்யம் உண்மையாகவே நம் முன் மலர்வதற்கு இத்திட்டம் உதவும்.

## 18.

# மகத்தான பொறுப்பு

நம்முடைய நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. கிராமங்கள் வளர்ச்சியடைந்தால்தான் நாடு முன்னேறும். அதற்காகத்தான் நாம் சுதந்திரம் அடைந்தோம்.

### நன்மையை உணர......

சுதந்திரத்தின் முழுப் பலனை கிராமங்கள் அடைய வேண்டும். அந்த நோக்கத்தில்தான் நாம் சமுதாய நலத்திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் என்றெல்லாம் திட்டம் போட்டு அமுல் செய்தோம்.

இந்த அபிவிருத்திக் காரியங்களில் கிராம மக்கள் ஒத்துழைப்பு மேலும் மேலும் பெருக வேண்டும். இந்த வேலைகள் எல்லாம், தங்கள் நன்மைக்காகத்தான் என்று அவர்கள் உணரும்படிச் செய்ய வேண்டும். அதற்கு, கிராம மக்களிடமே பொறுப்பை ஒப்படைப்பது நல்லது என்று கருதினோம். ஆகையால் பொறுப்புகள், உரிமைகள், சந்தர்ப்பங்களை யெல்லாம் அவர்களிடம் ஒப்படைப்பதற்காகக் கிராமப் பஞ்சாயத்து ஆட்சி முறையைத் திருத்தியமைத்தோம்.

### ஜில்லா போர்டுக்கு மாற்று

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படி கிராமப பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டுள்ளன.



முன்பு சமுதாய நலத் திட்டம் எப்படி அமைக்கப்பட்டிருந்ததோ அதே போன்று வட்டார ரீதியில் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முன்பு ஜில்லா போர்டு, முனிசிபாலிடி தவிர கிராமங்களிலே கிராமப் பஞ்சாயத்து என்னென்ன செய்ய வேண்டுமோ அதற்கு மேல் உள்ள வேலைகளை ஜில்லா போர்டு கவனித்து வந்தது. இப்போது ஜில்லா போர்டு ஸ்தானத்தில் பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா போர்டு பார்த்த வேலையை பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஜில்லா போர்டாக இருந்த போது முக்கியமான பொறுப்புகளைச் சரிவர நன்ருக நடத்த முடியவில்லை. ஜில்லா போர்டால் வேலைகள் பூராவையும் சரிவரக் கவனிக்க முடியவில்லை. அந்த அனுபவத்தால்தான். சிறிய ஸ்தல ஸ்தாபனமாக பஞ்சாயத்துக்கு மேல், ஒரு அமைப்பு வேண்டுமென்ற முறையில் நன்ருகப் பரிசீலனை செய்து சட்டம் செய்யப்பட்டது.

### வளர்ச்சிப் பணிகள்

ஒரு பக்கத்திலே புதிய பொறுப்புகளை, சாதாரணமாக முன்பு பஞ்சாயத்து கவனித்து வந்த பணிகளைக் கவனிப்பதோடு மட்டுமல்லாது கிராம வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, விவசாயத்திற்கு வேண்டிய திட்டத்தைத் தயாரிப்பது, ஆகியவற்றை யெல்லாம் பஞ்சாயத்து கவனித்துக் கொண்டு வருகிறது.

பஞ்சாயத்து யூனியன், ஜில்லா போர்டு ஸ்தானத்திலிருந்து ஸ்தல ஸ்தாபனம் செய்து வந்த வேலைகளைச் செய்து வருகிறது. அதோடுகூட சமுதாய நலத் திட்ட வேலையையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மற்றப்படி ஐந்தாண்டுத் திட்ட வேலைகளைக் கிராமங்களில் கவனித்து நிறைவேற்றக் கூடியவற்றையும் சர்க்காரின் சார்பாகக் கவனித்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. விவசாய வளர்ச்சிப் பொறுப்பையும் பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பல்வேறு துறைகளில் கிராமங்கள் வளர்ச்சிபெற, பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும் பணிபுரிந்து வருகின்றன. பள்ளிக் கூடங்கள், சமுதாய நலத் திட்ட வேலைகளைக் கவனிப்பது, கிராமங்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெருக்குவது, குடும்பக்கட்டுப்பாடு உட்பட பலவற்றுக்கும் பொறுப்பு ஏற்று அதிலே கவனம் செலுத்தி வருகின்றன.

## மகத்தான பொறுப்பு

ஜில்லாவை இரண்டாகப் பிரித்து, ஒன்றிரண்டு ஜில்லாக்கள் தவிர மற்ற ஜில்லாக்களில் எல்லாம் இரண்டு ஜில்லா அபிவிருத்தி கவுன்சில்கள் அமைக்கப்பட்டுத் தொண்டாற்றிக் கொண்டு வருகின்றன. அதிலே பல விஷயங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன. நிரந்தரமான கமிட்டிகள் அமைத்து எல்லா விஷயங்களையும் பற்றிக் கவனித்து வருகிறார்கள். அப்போதைக்கப்போது சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள், அபிவிருத்தி கவுன்சில் அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இவர்களை யெல்லாம் அழைத்துக் குறைபாடுகளைக் கேட்டு சிக்கல்களை உணர்ந்து சீராக்கும் முறையில் பணி புரிந்து வருகிறார்கள்.

ஆங்காங்கு இருக்கும் பஞ்சாயத்து தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் அபிவிருத்தி கவுன்சிலில் கூடி, நிதி நிலைமை எப்படி இருக்கிறது, கணக்கு சரியாக வைக்கப்பட்டிருக்கிறதா என்பதில் எல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



இவற்றை யெல்லாம் பார்த்ததில் ஒன்றை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் இது மகத்தான பொறுப்பு, புதியபொறுப்பு.

## புனரமைப்புத் திட்டம்

பஞ்சாயத்து நிதி நிலைமையை, வருவாயைப்பெருக்கிக் கொள்ளவும் வசதி அளித்திருக்கிறோம். மக்களுடைய உற்சாகத்தையும் பயன்படுத்திக் கொண்டு பஞ்சாயத்து வருவாயையும் அதிகப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

பஞ்சாயத்துத் தலைவர்களும்,பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் சீரிய முறையில், நல்ல முறையில் செயல் புரிந்து வருகிறார்கள். அதிலும் ஒரு குறைபாடு இருக்கலாம், புகார் சொல்லக் கூடும். ஆனால் மொத்தத்தில் இது சீரிய முறையில் திருப்திகரமாகவே நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது சில ஆலோசனைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தைப் பற்றி, நிதியைப் பற்றி, திட்டத்தைப்பற்றி, கல்வியைப் பற்றி, இதற்கெல்லாம் ஆலோசனைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இம்முறையில் கிராமப் புனரமைப்புத் திட்டம் செயல்படுகிறது. அது சீரிய முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. உருப்படியான யோசனைகளைச் சொல்லி அந்த யோசனைகள் மீது இன்னும் சீரிய முறையில் இந்த கிராமப் புனரமைப்புத் திட்டம் நடைபெறும் வகையில் மக்கள் வேண்டிய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

# 19. பஞ்சாயத்து அமைப்பு

கிராம ஆட்சியைப் பொறுத்த மட்டில் அரசியல் பற்றின்றி—அரசியல் என்று சொல்லவில்லை—கட்சிப் அரசியல் கட்சிப் பற்றின்றி இந்த ஆட்சியில் ஈடுபடுவதுதான் நலம் என்பதில் ஆட்சியாளர்களுக்கு மிகுந்த கவலையுண்டு.

## கட்சிப் பற்றற்ற தேர்தல்

காங்கிரஸ் கட்சிக்கு இதில் மிகுந்த அக்கறையுண்டு, நம்பிக்கையுண்டு. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இதுபற்றி ஒரு முடிவு செய்து நல்ல வழி காட்டியிருக்கிறார்கள் என்பதை அனைவரும் உணருவார்கள். பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில் அதில் கட்சிப் பற்றற்ற முறையில் தேர்தல் நடக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி அதைத்தான் வற்புறுத்தி வருகிறது. மற்ற கட்சிகளும் கூட இதற்கு ஒத்துழைக்க வேண்டு மென்பதுதான் காங்கிரஸ் கட்சியின் தீர்மானம்.

அந்தத் தீர்மானத்தில் அடங்கிய கருத்தைத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது, மற்ற கட்சிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றவர்களும் இதை நிறை வேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடுதான் நான் இருக்கிறேன்.



கட்சிப்பற்றற்ற தேர்தல் நடக்க வேண்டும் என்று சொல்லும் போது—கட்சி நமக்கு இருக்கத்தான் செய்கிறது—அரசியலில் கட்சி இல்லாமல் இருக்க முடியாது—ஜனநாயகத்திற்குக் கட்சி இருக்க வேண்டியது தான்—ஜனநாயகம் சீரிய முறையில் நடைபெற வேண்டுமென்றால் கட்சி இருக்க வேண்டியதுதான்—ஆனால் அதற்கு வேறு இடம் இருக்கிறது.

கிராம ஆட்சியைப் பொறுத்த மட்டில், கட்சிப் பற்றற்ற முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும், கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## மனிதனுக்குள்ள பலவீனம்

அப்படி கட்சிப் பற்றற்ற முறையில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் எல்லாம் நடைபெற வேண்டு மென்றால் சிலர் சொல்வது போல் "ஜாதி" வந்து விடுகிறது. அதிலும் "சுரண்டல்" வந்துவிடுகிறது. அதைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் வந்து விடுகிறது.

மனிதனுக்கு இவ்விதமான பலவீனம் எப்போதும் இருக்கிறது. ஓர் உன்னதமான இலட்சியத்தை அடைய வேண்டும் என்றுதான் எல்லோரும் நினைக்கிறோம். உயர்ந்த இலட்சியம், உயர்ந்த நடத்தை, உயர்ந்த பண்பு இவைகள் எல்லாம் எல்லோரிடத்திலும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

எல்லாக் கட்சியிலும்தான் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். உயர்ந்த நோக்கத்துடன் "பாடுபடுகிறோம்" என்று சொன்னால் எல்லாக் கட்சிகளும்தான் அதற்காகப் பாடுபடுகின்றன. ஒருகட்சியிலுள்ள எல்லோருக்கும் அந்த உயர்ந்த இலட்சியம். கொள்கை இருக்

கிறது என்று சொல்லிவிட முடியாது. ஒரு கட்சியைச் சேர்ந்த ஒருவர் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கிற இடத்தில் பொதுத்தேர்தல் காலத்தில் தலையிட்டார்; தம் செல்வாக்கைப் பயன்படுத்தினார்; தலையிடவில்லை என்று சொல்ல முடியாது.

ஆனால் ஒரு கட்சியிலிருப்பவர்களுக்குத்தான் எல்லா நல்ல குணங்களும் இருக்கின்றன, மற்றவர்கள் எல்லாம் தவறு செய்கின்றார்கள் என்று சொல்வது சரியல்ல, அது நல்லதுமல்ல—அது நல்ல பண்பாடுகூட அல்ல என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் தவறுகள் வரலாம். காங்கிரஸ்காரர்கள் தவறுகள் செய்திருக்கலாம் எங்கள் கட்சியில் தவறுகள் செய்கின்றவர்கள் இல்லவே இல்லை என்று சொல்ல வரவில்லை. எல்லா கட்சியிலும் இருக்கலாம். தவறுகள் என்பது விதிவிலக்காக இருக்கலாம்.

## தேர்தல் வேலைக்கு வரம்பு

பொதுவாக பஞ்சாயத்துத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்றால், ஒரு கட்சியை மட்டும் சட்டமன்ற தேர்தலில் ஆதரிக்கக் கூடாது என்ற வரம்பு இருக்க வேண்டும். அந்த வரம்பை எல்லோரும் உணர வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கின்றவர்கள், அவர்களுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்ற ஆசிரியர்களைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. அவர்களின் கீழ் உள்ள சிப்பந்திகளைப் பயன்படுத்தக் கூடாது. அவர்களுக்கு இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. இப்படியெல்லாம் இருந்தும் கூட, சிலர் சட்ட மன்ற தேர்தலில் வேலை செய்கிறார்கள்.



பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்றால் அந்த வட்டாரத்தில் மதிப்பு இருக்கிறது. ஆகவே, எங்கே யாருக்குச் செல்வாக்கு இருக்கிறது என்று அறிந்து அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்றால் மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. அதற்கு நாம் என்ன செய்வது? அதை நாம் தவிர்க்க முடியாது. ஆகவே அரசியல் நோக்கத்தோடுதான் எல்லா இடங்களிலும் காங்கிரஸ் கட்சி நடந்து கொள்ளுகிறது என்று பொதுவாக சொல்வது சரியல்ல. ஒன்றிரண்டு பேர்கள் தவறியிருக்கலாம். அம்மாதிரி தவறுதலுக்கு சில பேர்கள் இடம் கொடுத்திருக்கலாம். அது போல்தான் ஜாதியை உபயோகப்படுத்துவதும்.

## ஜாதி வேற்றுமை

ஜாதி இருக்கக்கூடாது என்றுதான் நாம் அனைவரும் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஜாதி இருக்கக்கூடாது என்பதை யார்தான் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்? ஆனால் யார் ஜாதி இருக்கக்கூடாது என்று அதிகமாகப் பேசுகிறார்களோ அவர்கள்தான் சிலநேரங்களில் ஜாதியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஜாதி உணர்ச்சி கூடாது என்ற எண்ணம் நமக்கெல்லாம் உண்டு. ஆனால் சிலர் ஜாதி உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றார்கள்.

ஜாதி வேண்டாம் என்று சொல்லுகிற வரையில் நன்றாகத்தான் இருக்கிறது. இதைப்பற்றி நாம் அடிக்கடி பேச வேண்டும். ஜாதி வேற்றுமை போக வேண்டும் என்று நாம் திருப்பித் திருப்பி சொல்ல வேண்டியதுதான், அதில் எந்தவிதமான தவறும் இல்லை. அப்படிச் சொல்வதால் நன்மைதான் ஓரளவுக்கு ஏற்படும். ஆகவே இதைப்பற்றித் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியதுதான்—ஜாதியைப் பயன்படுத்திக்

தோள்வது எங்கேயும் இருக்கிறது. இதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றுதான் நாம் அனைவரும் சொல்லுகிறோம்.

## நேரடித் தேர்தல்

பஞ்சாயத்து யூனியன் தலைவரை அந்த வட்டாரத்திலுள்ள மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சாதாரணமாக, பஞ்சாயத்து யூனியன் தலைவரைப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களை எல்லாம் சேர்த்து பஞ்சாயத்து யூனியனை அமைக்கின்றார்கள்.

இப்போது இருக்கின்ற முறைக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தில் இருக்கும் வாக்காளர்களே பஞ்சாயத்து யூனியன் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்ற முறை இருந்தால் ஜாதி இருக்காது என்று சொல்லுகிறார்கள். அப்படிப் பார்க்கப் போனால், இப்போது இருக்கின்ற சட்ட மன்றத் தொகுதி, பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தைவிட பெரியதாக இருக்கிறது. சட்டமன்ற தொகுதி தேர்தலில் ஜாதி வருகிறதே! எங்கே எந்த ஜாதி கணிசமாக இருக்கிறது, எந்த இடத்தில் ஜாதியின் பெயரால் கூடுதல் வோட்டுகள் வரும் என்று கேட்கிறார்களே! அப்படிக் கேட்பவர்கள் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா ? நேரடி தேர்தல் வைத்தால், இப்போது இருக்கின்ற அளவுக்கு ஜாதி வராது என்று சொல்லலாம். ஆனால் அதில் எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

## பாதகம் ஏற்படும்

அதோடு ஜன நாயகத்தில் தேர்தல் என்றால், மக்களுக்கும் அதிகமான தொல்லையைக் கொடுக்கக்கூடாது.



தேர்தல் வருகின்றது என்றால், தேர்தலில் நிற்கின்ற நமக்கு மட்டும் தொல்லை இல்லை, மக்களுக்கும் தொல்லையிருக்கின்றது. பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கிறது, சட்டசபைத் தேர்தல் நடக்கிறது, பார்லிமெண்ட் சபை தேர்தல் நடக்கிறது. இவ்விதம் பல தேர்தல்களில் மக்கள் ஈடுபடுகிறார்கள்.

மக்களுக்கு இருக்கின்ற தொல்லைகளைக் குறைத்துக் கொண்டால்தான் ஜனநாயகம் நல்ல முறையில் நடக்க முடியும். அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே, இப்போது இருக்கின்ற தொல்லைகளுக்கு இடையில் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் இருக்க வேண்டும் என்று சொன்னால் இன்னும் எவ்வளவோ பாதகத்தைத்தான் ஏற்படுத்தும்.

## சில சங்கடங்கள்

இதில் வேறு சில சங்கடங்களும் இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்து யூனியன் என்றால், 45 தலைவர்கள் வரை இருக்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டால், பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் நேரடியாக நடந்து விட்டால், அந்தத் தலைவருக்கும் இந்த 45 தலைவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் போய்விடுகிறது. அப்படியானால் இந்த பஞ்சாயத்து யூனியனே இல்லாமல், ஒரு சர்வாதிகாரி என்ற முறையில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து விட்டால், பஞ்சாயத்துத் தலைவர்களோடு கலந்து கொண்டு காரியங்களை நடத்தலாம். பஞ்சாயத்துக்களிலுள்ள தலைவர்கள் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் தலைவரை தேர்ந்தெடுக்கும் போதுதான் பஞ்சாயத்துக்களின் மீதுள்ள பொறுப்பை அவர்கள் உணர முடியும்.

அதைவிட்டு நேரடித் தேர்தல் நடத்தினுல் பஞ்சாயத்து யூனியனுக்கு அவசியமே இல்லாமல் போய்விடலாம். அப்படியிருக்கும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர், அதாவது பஞ்சாயத்துத் தலைவர்கள் இல்லாமல்—வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிருர்கள் என்று வைத்துக் கொண்டால்—இந்த யூனியனின் கீழ் இருக்கும் 45 தலைவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுத்தான் நடக்க வேண்டும் என்ற முறை இருக்காது, அவர்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளலாம் என்று ஆகிவிடும். அதற்கு நாம் ஒப்புக்கொள்ள முடியுமா?

இப்போதே 'ஆலோசனைக் கமிட்டி' என்றெல்லாம் போட்டிருக்கிறேம். இந்த நிலைமையில் பஞ்சாயத்து யூனியன் வேண்டாம் என்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? பஞ்சாயத்து யூனியன் என்று வைத்து விட்டு அன்ருடம் முரண்பாடு இருந்தால் நிர்வாகம் எப்படி நடக்கும்? 45 பேர்களில் 30 பேர்கள் சேர்ந்து ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவார்கள். அவர் சொல்லுவார், "நீங்கள் யார் சொல்லுவதற்கு, மக்கள் அல்லவோ ஓட்டுப் போட்டிருக்கிருர்கள்?" என்று.

அது அல்லாமல் இந்த மாதிரி அதிகமாகத் தேர்தல் என்று ஏற்படுத்தினுல், எல்லாவற்றுக்கும் கிராமங்களில் ஓட்டுப்போடுவது என்று ஏற்படுத்தினுல் கட்சி தான் அதிகமாகும். ஜனநாயகத்தில் தேர்தல் தவிர்க்க முடியாதது. இருந்தாலும், கட்சிகளை அதிகப்படுத்தாமல் கூடிய வரையில் சுமுகமாக நிர்வாகம் நடைபெற வேண்டும்.

### காரியங்களில் உடன்பாடு

பஞ்சாயத்துத் தலைவர்களாக இருப்பவர்கள் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாக இருப்பது நல்லதல்ல என்று கூடச் சொல்லப்படுகிறது. பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு சம்பந்தம் இருக்க வேண்டும். ஜில்லா போர்டு, பஞ்சாயத்து என்று இருந்தபோது அந்தச் சம்பந்தம் இல்லை. ஒருவருக்கொருவர் முரண்பாடு கொண்டு போராடிக் கொண்டிருந்தார்கள். ஒரு மார்க்கட்டை ஜில்லா போர்டு வைத்துக் கொள்வதா, அல்லது கிராமப் பஞ்சாயத்து வைத்துக் கொள்வதா என்பதிலே தகராறு வரும். இப்போது பஞ்சாயத்துக்கள் ஒன்றுபட வேண்டுமென்ற காரணத்தினுலேயே பஞ்சாயத்து—பஞ்சாயத்து யூனியன்கள் என்று அமைத்திருக்கிறேம்.



பஞ்சாயத்துத் தலைவர்களாக இருப்பவர்கள் பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதிகளாக வருவதுதான் சிறப்பு. பஞ்சாயத்துத் தலைவரை விடுத்து வேறு ஒருவரைப் பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதியாக வைப்பது சரியல்ல. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்கள் செய்யும் காரியங்களிலே ஒரு உடன்பாடு இருக்க வேண்டும் என்ற முறையில்தான் இப்போது அப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த முறையை மாற்றுவது உசிதமல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

### சட்டமன்ற உறுப்பினர் பிரச்சினை

சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்தில் இருப்பதைப் பற்றி ஒரு பிரச்சினை எழுப்பப்படுகிறது. அதிகாரம் இல்லாமல், ஓட்டுரிமை இல்லாமல் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக்குப் போகலாம் என்று சொன்னுல் போதுமா என்று கேட்கப்படுகிறது. ஓட்டுரிமை வேண்டுமென்ற அவசியமில்லை. சட்ட மன்ற அங்கத்தினர் என்ற மரியாதை இருக்கிறது. சட்டமன்ற அங்கத்தினர்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களைவிட அதிக

அனுபவம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்திஞல் நல்ல வழிவகைகளை எடுத்துச் சொல்ல லாம் என்றுதான் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக் குப் போகலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது.

இலட்சம் ஓட்டர்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற அங்கத்தினர்களுக்குப் பஞ்சாயத்து யூனி யன் கூட்டத்தில் ஓட்டு செய்ய உரிமை கிடை யாது என்று சொன்ஞல் அது நியாயமா என்று கேட் டார்கள். இப்படியே தொடர்ந்து பேசலாம். மக்கள் மன்றம்—பாராளு மன்றம் இருக்கிறது. சட்டசபை உறுப்பினர்கள் ஒரு இலட்சம் ஓட்டுப் பெற்றுத் தேர்ந் தெடுக்கப்படுகிருர்கள் என்று சொன்ஞல், அவர்கள் ஐந்து இலட்சம் ஓட்டுப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படு கிருர்கள். அவர்கள் சட்டமன்றத்திலே வந்து உட் கார்ந்துகொண்டு ஓட்டுச் செய்யும் உரிமை வேண்டு மென்று சொன்ஞல் அது முடியுமா ? மன்றத்தின் நட வடிக்கைகளை அருகில் இருந்து வேண்டுமாஞல் பார்த் துக் கொண்டிருக்கலாம். அந்தந்த மன்றத்திலே அங்கம் வகிப்பவர்களுக்குத்தான் ஓட்டுச் செய்யும் உரிமை உண்டு. நம்முடைய ஜனநாயக அமைப்பை உணர வேண்டும். நமது அரசியலமைப்பை நாம் மனத் தில் கொள்ள வேண்டும்.

## பள்ளிக்கூட நிர்வாகம்

கல்வி விஷயத்தில், பள்ளிகள் விஷயத்தில், கல்வி யின் தரம், பாடம் சொல்லிக் கொடுக்கும் தரம், நிர்ண யிக்கப்படும் பாடப் புத்தகங்கள் விஷயம், ஆசிரியர் கள் விஷயம் இவைகளிலே பஞ்சாயத்து யூனியனுக்கு சட்டப்படி பொறுப்பு இருக்கிறது. அவர்களுக்கு கல்வி விஷயத்தில் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.



அவர்களுக்குப் பள்ளிகளை நல்ல முறையில் சரியாகக் கவனித்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு—அக்கறை— இருக்கிறது. அதுதான் முக்கியமான வேலை, பஞ்சா யத்து யூனியனுக்கு என்றுகூட நான் சொல்லுவேன். ஆஞல் கல்வியின் தரத்தைப் பொறுத்த வரையில் அந்த விஷயத்தை கல்வி இலாகாவினர், நிபுணர்கள் ஆகியவர்களுக்கு விட்டுவிட வேண்டு மென்று கூறு வதை முற்றிலும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூட நிர்வாகம் என்பது ஒரு விஷயம்; கல் வித் தரம் என்பது வேறு விஷயம். ஆசிரியர்கள் ஒழுங்காக வருகிருர்களா, ஆஜர் பதிவு புத்தகத்தில் கையெழுத்திடுகிருர்களா, 'லீவ்' லெட்டர் எழுதிக் கொடுத்து, பின்ஞல் 'கேட்டால் லீவ் லெட்டரைக் கொடு, இல்லாவிட்டால் வைத்துக் கொள்' என்று சொல்லிவிட்டுச் செல்லுகிருர்களா என்ற இந்த மாதிரி விஷயங்களை யெல்லாம் கண்காணிக்க பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் கமிஷனருக்கும் பொறுப்பு இருக்கிறது. கட்டிடம் நன்ருக இருக்கிறதா, அவ்வப் போது பழுது பார்க்கப்படுகிறதா, பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய வேறு வசதிகளெல்லாம் இருக்கிறதா என்று கவனிப்பதும் பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பு. பள்ளிகளில் எப்படிச் சொல்லிக் கொடுக்கிருர்கள் என்று கவனிக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது.

## அதிகார துஷ்பிரயோகம்

இத்தனை பொறுப்பு,அதிகாரம் இருப்பதால் அதைத் தவருக உபயோகிக்கக் கூடாது. அதிகாரத் துஷ்பிர யோகம் நிகழக் கூடாது.ஒரு இடத்தில் சொன்ஞர்கள், ஒருகமிஷனர் எங்கோ ஒரு இடத்தில் யாரோ இரண்டு மார்க் குறைத்துப் போட்டு விட்டார் என்று சொன்ன தற்காக, உடனே ஆசிரியரை 'சஸ்பெண்ட்' செய்தா ராம். அந்த மாதிரி நடக்கக் கூடாது.

ஆனால் இது எங்கோ ஒரு இடத்தில் நடப்பது தான். கல்வி தரமாக இருக்க வேண்டும். கல்வியின் தரத்தில் பஞ்சாயத்து யூனியன் தலையிடாது. இதிலே வரம்பு உணரப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்குப் பஞ் சாயத்து யூனியன் கவனம் செலுத்துவது என்றும் கல்வி இலாகா எந்த அளவுக்குக் கவனிப்பது என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

# 20. நிர்வாக நடைமுறை

பஞ்சாயத்து நிர்வாகம் ஏதோ ஒரு கட்சிக் கண் ணோட்டத்தோடு, கட்சி மனோபாவத்தோடு நடைபெறு கிறது என்றும் சொல்கிறார்கள்.

## கட்சி மனோபாவம்

கட்சி மனோபாவத்தோடு நடைபெறுகிறது என்று சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வர்களாக இருக்கலாம். இந்த நிலையில் எல்லோரும் அரசியல்வாதிகளாக இருக்கிறோம். இதைப் பார்த்து கட்சி இல்லை என்று சொல்லுவது ஏமாற்று வித்தை என்று நினைக்கலாம்.

பெரும்பாலானவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்த வர்களாக வந்தால் அதனால் ஏமாற்றம் அடைந்தால் பயனில்லை. நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பது தான் முக்கியமாகப் பார்க்க வேண்டியது.

## அதிகாரிகள் கண்காணிப்பு

பஞ்சாயத்து நிர்வாகத்தைப் பற்றி இன்னொன்று சொல்கிறார்கள். ஏதோ பெயருக்குத்தான் விஸ் தரிப்பு அதிகாரிகள் போன்றவர்கள் இருக்கிறார்கள்

என்றும், அவர்கள் தங்களுக்கு மேலே இருக்கிற அதிகாரியைக் கலக்க வேண்டியிருக்கிறது என்றும் ஒரு குறையாகச் சொல்லப்படுகிறது.

விவசாயத்திற்கு, கால்நடைக்கு, கல்விக்கு, காட்டு வளத்திற்கு, அவ்வாறே கூட்டுறவுக்கு இப்படி எதுவாக இருந்தாலும் சரி, இதற்கெல்லாம் தனித்தனியாக ஒரு இலாகா இருக்கிறது. அதிலே நிபுணர்கள் இருக்கிறார்கள். அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள்தான் எல்லாவற்றிற்கும் தலைமை அதிகாரிகளாக இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு என்று ஒரு தனி வேலை அல்ல.

சென்னையில் இருக்கிற தலைமை அதிகாரிதான் கிராமங்களுக்காகவும் பணி புரிகிறார். எப்படி எப்படி யெல்லாம் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர் சொல்கிறார். எது எது எந்த வகையிலே பொருந்தும், எது சரி என்பதை யெல்லாம் அவர்கள் கண்காணிப்பதற்காகத்தான் இருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு சும்மா உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கொடுக்கவில்லை. அவர்களுடைய யோசனையை, கண்காணிப்பை நாம் ஏற்றுக் கொள்வதுதான் முறை. ஏதோ பஞ்சாயத்துக் கமிஷனர் சொல்கிறார், சேர்மன் சொல்கிறார் என்று மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## தலையீட்டுக்கு உதாரணம்

உதாரணமாக, 36 அடி ரோடு தேவைப்படும் போது 25 அடி ரோடு இருந்தால் போதும், 15 அடி ரோடு இருந்தால் போதும் என்றால், அது நியாயமில்லை. ரோடுக்கான நில ஆர்ஜிதத்தால் நிலத்தின் சொந்தக்காரர் பாதிக்கப்படக்கூடும்என்பதற்காகவும், அவர் தன் நிலத்தைக் கொடுக்கத் தயங்குகிறார் என்பதற்காகவும் இன்றைக்கு அவ்விதம் சொல்லிவிடலாம்.



தற்சமயம் இப்படிப்பட்ட தொந்திரவுகள் ஏற்படுகின்றன என்று நாம் விட்டு விட்டால், பின்பு ரோடுகள் விரிந்து, போக்குவரத்து அதிகமாகிக் கொண்டு போகிற போக்கிலே, நாட்டிலே பொருளாதாரம் பெருகி, மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டு போகக்கூடிய நேரத்திலே இப்படி 15, 20 அடி என்று ரோடு போட்டு விட்டால் போதாது. ஆகவே, இதற்குப் பெருவழித் துறை பிரதம என்ஜினியர் சொல்வது தவறு என்றும், அவர் தலையீடு கூடாது என்றும் சொல்வது தவறு.

## ஒரு பாதுகாப்பு

தலைவர்—கமிஷனர் உறவு, அதிகார வரம்பு பற்றியும் பலருக்குத் தெளிவு இல்லாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் உத்திரவுகளை நிறைவேற்ற வேண்டியவர்கள் கமிஷனர்கள். தலைவர் உத்திரவுப்படிதான் செய்ய வேண்டும். கமிஷனர் தன் கடமையை நன்கு ஆற்றுவது தலைவர்களுக்கு ஒரு பாதுகாப்புப் போலாகும். அப்படியில்லாத இடங்களில் தலைவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்.

கமிஷனர்—தலைவர் உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதெல்லாம் அப்போதைக்கப்போது விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தலைவர்களில் சிலர் தவறு செய்பவர்களும் உண்டு. கமிஷனர்களில் தவறு செய்கிறவர்களும் இருக்கிறார்கள். இதையெல்லாம் கவனித்து அரசாங்கம் அப்போதைக்கப்போது அதிகாரிகள் மீது வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

## தியாகிகளுக்கு வேலை

"நீங்கள் கட்சிப் பற்றற்ற முறையிலே ஆட்சியை நடத்துகிறீர்கள் என்று சொல்கிறீர்களே, ஆனால் கிராமங்களிலே வேலை செய்வதற்கு அரசியல் தியாகிகளைப் போடுகிறீர்களே" என்று சிலர் கேட்கிறார்கள். அரசியல் தியாகிகளாக இருந்து, இன்றைக்கு அவர்கள் வேறு கட்சியிலே இருந்தாலும் சரி, அன்று சுதந்திரப் போராட்டத்திலே தியாகம் செய்தவர்களாக இருந்தால் அவர்களைத்தான் போடுகிறோம். அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்று, அதை அனுசரித்து வருகின்ற ஒரு கொள்கையாகும்.

இந்தக் கொள்கை இந்த அரசாங்கத்திற்குப் புதிதில்லை. வேறு வகையிலே, இந்த ராஜ்யத்திலே முன்பு யுத்தத்திலே ஈடுபட்டவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போதுகூட அதை நாம் பின்பற்றிக்கொண்டு வருகிறோம். இப்போது சுதந்திர போராட்டத்திலே ஈடுபட்ட அரசியல் தியாகிகளுக்கு, அதிலும் தியாகம் செய்தவர்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்று, அவதிப்படுகிறவர்களுக்கு நாம் இடம் கொடுக்க வேண்டுமென்று, அத்தகைய சீரிய நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## உற்சாக மிகுதி

இத்திட்டப்படி கிராம சேவக்குகள் வேலைக்குத் தியாகிகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வயதுபற்றித்தான் சலுகை கொடுக்கப்படுகிறதே தவிர, மற்றபடி அவர்களும் தேர்வின்மூலம்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்த மட்டில், அவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர, மற்றபடி, "அவர்கள் தவறான பாதையிலே செல்கிறார்கள்; கட்சிப் பிரச்சாரம் செய்கிறார்கள்" என்று சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.



ஒரிருவர் உற்சாக மிகுதியினாலே ஏதாவது செய்தால், அதை நாம் ஏப்புக்கொள்ளத்தான் வேண்டும்; அதைப்பற்றி நான் தயங்கவில்லை. கிராம சேவக்குகளிலே தி. மு. க. வினரின் அபிப்பிராயம் கொண்டவர்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. அது எனக்குத் தெரியாமல் இல்லை. அவர்களில் சிலர் அத்துமீறிப் போயிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். சிலர் தேர்தலிலும் தலையிட்டிருக்கிறார்கள். இதெல்லாம் தெரியாமல் இல்லை. இதெல்லாம் சகஜம் தான். அதையெல்லாம் தவிர்க்க வேண்டியதுதான். அம்மாதிரி அரசியல் தியாகிகளிலும் ஒரிருவர் இருக்கலாம். ஆனால், அரசியல் தியாகிகளாக இருப்பதால், அவர்களுக்கெல்லாம் கட்சிப்பற்று இருக்குமென்று சொல்வது சரியல்ல என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

## பஞ்சாயத்து வழக்குகள்

வழக்குகளை விசாரித்து நீதிவழங்கும் அதிகாரத்தையும் பஞ்சாயத்துக்களுக்குத் தரலாம் என்று ஒரு யோசனை சொல்லப்படுகிறது. ஆனால் பஞ்சாயத்தில் உள்ளவர்கள், தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாதலால், மெஜாரிட்டியைப் பார்த்து நியாயம் அளிக்க வேண்டி வந்தால், அது சரியான நீதி ஆகாது. ஊரிலே கட்சியிருந்தால் பஞ்சாயத்து யூனியனிலே கட்சி இருந்து விட்டால், தீர்ப்பு இவனுக்குச் சாதகமாகக் கொடுப்பதா அல்லது அவனுக்குச் சாதகமாகக் கொடுப்பதா என்ற நிலைமை வரலாம். ஆகை

யால் இந்த விஷயத்தைப் பற்றி அரசாங்கத்திற்கும் கவலை இருக்கிறது. ஜனநாயகத்தை உணராமல் இல்லை. ஆனால் இப்போதுள்ள "கௌரவ பெஞ்சு மாஜிஸ்டிரேட்" முறை நல்ல முறையில் நடக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ரொம்பவும் திருப்திகரமாக நடக்கிறது "கௌரவ மாஜிஸ்டிரேட்" முறை.

பஞ்சாயத்து நீதி மன்றங்களை ஏற்படுத்தலாமென்றால், அதிலே மெஜாரிடி பார்த்தா தீர்ப்பு சொல்லுவது? 10 பேரில், 7 பேர் மெஜாரிடி பார்த்துத் தீர்ப்பு கொடுப்பது சரியாக வருமா? அப்பொழுது தான் நீதி வழங்கப்படும் என்று சொல்லுவது சரியல்ல. அப்பொழுதுதான் உண்மையான நீதி வழங்கப்படும் என்று சொல்லுவது அதிக உற்சாகத்தின் வேகத்தினால் இருக்கலாம் என்று நினைக்கிறேன். பஞ்சாயத்தில்தான் நீதி கிடைக்கும் என்று சொல்லுவது சரியல்ல. பஞ்சாயத்தினால் நல்ல நிர்வாகம் கிடைக்கும். நீதிக்கும் பஞ்சாயத்துதான் என்பது, உண்மையான நீதி அங்குதான் கிடைக்கும் என்று சொல்லுவது, அவ்வளவு சரியில்லை என்றுதான் நினைக்கிறேன்.

## வரி அதிகமா?

பஞ்சாயத்துக்களில் வரியெல்லாம் அதிகமாகப் போடுகிறார்கள், நிலத்திற்கு ஸர்சார்ஜ் போடுகிறார்கள், இது கூடாது என்றும், கேளிக்கை வரி கூடாது என்றும் சொல்கிறார்கள். கேளிக்கை வரி போடுவதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அம்மாதிரி வரி போடுவதிலே கட்டணம் ஜாஸ்தியாகி விட்டது, சினிமாவுக்குப் போகிறவர்கள் டிக்கெட்டிற்கு அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது, ஆகையினால் அது கூடாது என்றெல்லாம் சொல்கிறார்கள்.



ஆனால், பிள்ளைகள் பள்ளிகளில் படிப்பதற்கு 40 அதிகம், 30 பிள்ளைகளுக்கு ஒரு வாத்தியார் வைக்கணும் என்றும், அதே நேரத்தில் சொல்லுகிறார்கள். அதற்கு என்ன செலவு ஆகும்? 30 பேர்களுக்கு ஒரு வாத்தியார் என்றால் அதற்கு என்ன செலவாகும்? கிராம ரோடுகளுக்கு ஒதுக்கிய பணம் போதாது, ஸ்தல ரோடு மானியத்திற்கு ஒதுக்கிய பணம் போதாது, கடன் கொடுப்பது போதாது, விவசாயத்திற்குக் கொடுக்கிற பணம் போதாது என்றெல்லாம் சொல்கிறார்கள். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து கொடுப்பது?

## ஈடு மான்ய நிதி வசதி

பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்கம் ஓரளவு நிதி கொடுக்கிறது. அதோடு பஞ்சாயத்துக்களுக்கு வரி வசூல் அதிகாரமும் கொடுத்திருக்கிறோம். பஞ்சாயத்துக்கள் பார்த்து, கிராமத்தினுடைய நிலவரத்தை உணர்ந்து, எவ்வளவு தூரம் நிதி வேண்டும் என்று பார்த்து, அவர்கள் வசூல் செய்து கொள்கிறார்கள். அதைத் தவறு என்று எப்படிச் சொல்லுவது? அவர்களுக்கு அல்லவா பொறுப்பு இருக்கிறது. அவர்கள் பார்க்க வேண்டும். சில இடங்களில், அதிலும் நிலவரி அதிகமாக இருக்கிற இடங்களில், அதிக வரி விகிதம் இருக்கிற இடங்களில் கொஞ்சம் அதிகமாக வருகிறது. குறைவாக ஸர்சார்ஜ் இருந்தால், அதை அதிகப்படுத்தா விட்டால், போதிய நிதி கிடைக்காது. கிராமங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது.

பகிர்ந்து கொடுக்கக்கூடிய ஒரு முறையில் கிராமத்தில் வசூல் செய்து கொடுத்தால், நாங்கள் பாதி மான்யம் கொடுக்கிறோம், கடன் கொடுக்கிறோம், விசேஷமான்யம் கொடுக்கிறோம். நீங்கள் இவ்வளவு

வசூல் செய்யுங்கள், அதாவது ஈடு மான்ய அடிப்படையில் நீங்கள் இந்த அளவுக்கு நிதி வசூல் செய்யுங்கள். அந்த அளவுக்கு நாங்கள் கொடுக்கிறோம் என்று செய்வதுதான் சிறந்த முறை, சீரான முறை. அங்கே வரி வசூல் பண்ணக் கூடிய பலனை கிராமத்தில் நேரடியாக அனுபவிக்கிறார்கள். கிராமத்திற்கு வசதி அளிக்கிறது அந்தப் பணம். அது அப்படியே அவர்களுக்குப் போய் விடுகிறது.

கிராமத்திலே பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் வேலை மாத்திரம் அல்ல. மற்ற வேலைகளும்இருக்கின்றன. அதை ஆட்சியினர் செய்கிறார்கள். சென்னையிலிருந்தும் செய்யப்படுகிறது. டெல்லியிலிருந்தும் செய்யப்படுகிறது. இதையெல்லாம் குறைத்து விட வேண்டுமென்று சொன்னால், கிராமத்திற்குப் போதிய அளவு நன்மைகள் செய்ய முடியாது.

**வசதிகள் பெருக...**

மக்கள், சில குறிப்பிட்ட வசதிகளைப் பெருக்கிக் கொள்வதிலேதான் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

சினிமா பார்ப்பதில் கூட சில பேர், சினிமாவுக்கு ஒரு முறை அல்ல, பல முறை போகிறார்கள். பார்த்த படத்தையே 3, 4 முறை பார்க்கிறார்கள். நான் குறை கூறவில்லை. ஏழை கிராமமக்களுக்கு சினிமா பொழுதுபோக்கு ரொம்பஅவசியம் என்பதைநான் ஒப்புக் கொள்கிறேன். ஏராளமான பேர்கள் வருகிறார்கள். ராத்திரி 12 மணிக்கு நான் பார்க்கிறேன். எந்த வேளையிலும் சரி ஏராளமான கூட்டம். அப்படி ஒருக்கால் டிக்கெட் விலையை கொஞ்சம் அதிகப்படுத்தினாலும் கூட, அவர்கள் அதிகமாக ஆட்சேபிக்கவில்லை. கவலைப்படவில்லை.



சினிமா போகிறவர்களுக்கு எத்தனையோ வசதிகள் வேண்டியிருக்கின்றன. அவர்களுக்கு அந்த வசதிகள் பெருக வேண்டும். அப்படி வசதிகளைப் பெருக்குவதற்காக நாம் ஓரளவுக்கு கேளிக்கை வரியை அதிகப்படுத்தினால், அதன் விளைவாகக் கட்டணம் உயர வேண்டுமென்று நான் சொல்லவில்லை, அப்படி உயர்த்தப்பட்டாலும் கூட, அதைப் பெரிது படுத்தக் கூடாது என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**சொல்வது சுலபம்**

பொதுவாகக் குறை சொல்வது சுலபம். ஆனால் பொதுவான ஒருகுற்றச்சாட்டு என்னவென்றால், இந்த பஞ்சாயத்து அமைப்பின் காரணமாகக் காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரம் நடக்கிறது என்பதுதான்.

இந்த அமைப்பினால் ஒன்றும் பலன் இல்லையென்று, பலனையே எதிர்பார்க்காதவர்கள் சொல்லலாம். அவ்வளவு தெரியாதவர்களா ஊரில் இருக்கிறார்கள். ஏதோ வாதத்திற்காகச் சொல்லலாமே தவிர, எல்லோருக்கும் தெரியும்—பஞ்சாயத்துக்கள் பற்றிய புதிய சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் நிறைவேற்றி வரும் பல திட்டங்களைப் பற்றியும் சமுதாய நலத் திட்டங்களைப் பற்றியும் எல்லோரும் நன்றாக உணருவார்கள்.

விவசாய உற்பத்தியிலே கிராம மக்கள் எல்லாம் உற்சாகத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். பல குழுக்களிலே நானும் கலந்து கொண்டிருக்கிறேன். பெரும்பாலும் இளைஞர்கள் வருகிறார்கள். மிகவும் விழிப்போடு இருக்கிறார்கள். மாறுபட்ட கொள்கையைச் சார்ந்தவர்கள்கூட இருக்கிறார்கள். சீரிய கருத்தோடு, ஆர்வத்தோடு நடத்துகிறார்கள்.

**பெரிய வரப்பிரசாதம்**

காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகுதான் கிராம அபி விருத்தித் திட்டத்தை எடுத்துக் கொண்டார்கள். காங் கிரஸ் ஆட்சி வந்தது பெரிய வரப்பிரசாதம் என்று மக்கள் சொன்னால் அதை எப்படித் தவிர்ப்பது?

காங்கிரசுக்குப் புறம்பாக உள்ளவர்கள், எதிர்ப் பாக உள்ளவர்கள் அவர்கள் ஆட்சிக்கு வரும்போது காங்கிரஸ் கட்சியை விட நன்றாக நடத்தினார்கள் என் றால், ஒருவேளை அந்தக் கருத்து மாறலாம். எவ்வளவு தான் எதிர்க்கட்சிக்காரர்கள் மனத்திலே சங்கடப்பட் டுக்கொண்டாலும், அந்தக் கருத்தைத் தவிர்க்க முடி யாது.

நல்ல காரியங்களைச் செய்வதால் காங்கிரசுக்கு நல்ல பெயர் வருகிறது. கெட்ட காரியங்களைச் செய் தால் கெட்ட பெயர் வரும். நாங்கள் கட்சிப் பற்றின்றி ஆட்சி நடத்தி வருகிறோம். அதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். நல்ல காரியங்களைச் செய்கின்ற கார ணத்தினால் மக்களில் பெரும்பாலோர் காங்கிரசிடம் அனுதாபம் உடையவர்களாக இருக்கிறார்கள். அதைத் தவிர்க்க முடியாது.

# 21. மாதர் நலன்

நம்முடைய நாட்டில், 'கிராமாந்திரம்' என்றாலோ, 'கிராமங்கள்' என்றாலோ நமக்குக் கொஞ்சம் அலட்சி யம்தான். நம்மையும் அறியாமல் அலட்சியம் ஏற்படுவ துண்டு. ஆனால் கிராமம் நமக்கு மிகவும் தேவைப் படுகிறது. கிராமம் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்று தெரிந்திருந்தாலுங்கூட, 'கிராமம்' என்றாலே சில சமயங்களிலே கொஞ்சம் 'சப்'பிட்டுப் போகிறது.

**அலட்சியம் கூடாது**

யாரையும் நாம் அலட்சியப்படுத்தக் கூடாது. அதுவும், பெண்மணிகளைப் பொறுத்தவரையில் சிறிதும் அலட்சியப் படுத்தக்கூடாது. நாட்டின் ஜனத் தொகையில் அவர்கள் சரிபாதி இருக்கிறார்கள். பெண் கள் சாதுக்களாக இருக்கலாம். அவர்களை அவமதித் தால் சில சமயம் மிளகாய்த் தூளைக்கூட எறிந்து விடக்கூடும். மிளகாய்ப் பொடியைப் போட்டால் அப் பொழுது என்ன செய்வது? ஆகவே, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பெண்களைக் குறித்து அலட்சிய மனப்பான்மை இருந்தாலும், நடைமுறையில் அலட் சியமாக இருக்கக் கூடாது.

எந்தக் குடும்பமாக இருந்தாலும், பெண்மணிகள் இல்லாமல் குடும்பத்தை நடத்த முடியாது. பெண் களுக்குப் பதிலாக சில சமயம் ஆண்களும் சமையல்

செய்யவேண்டியிருக்கும். சமையல் செய்யவேண்டிய அவசியமும் ஏற்படலாம். இதில் எனக்கு அனுபவம் இல்லை. பார்த்திருக்கிறேன். ஆண்கள் சமையல் செய்யவேண்டியிருக்கிறதோ இல்லையோ, சமையல் என்பது உத்தமமான வேலைதான். அதைப் பெண்கள் செய்கிறார்கள். சமையல்தானே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று அலட்சிய மனப்பான்மையில், என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அவர்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. அவர்கள் பொறுத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், அவர்களுடைய பொறுமையும் சில சமயங்களில் மீறிப் போகலாம். 'ஆண்களும் பெண்களும் சரிநிகர்சமானம்' என்பதை உண்மையிலேயே மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். "சக்தியை வழிபடுகிறேன்" என்று சொல்லி, குங்குமப் பொட்டு போட்டாலும் போதாது. அப்படிச் சில பேர் செய்கிறார்கள். பெயரளவில் சொல்லி, செய்வதெல்லாம் வேறுவிதமாகச் செய்தாலும், அதுவும் நலனை அளிக்காது.

### பிற்போக்கு அகல...

சமுதாய நல வேலைகளில் பெண்களுடைய ஆதரவும், உதவியும், ஈடுபாடும் நமக்கு வேண்டியிருக்கிறது. அது இல்லாமல் நம்முடைய சமுதாயத்தை உயர்த்த முடியாது. அந்த நோக்கத்தோடுதான் நாம் காரியங்களைச் செய்துவருகிறோம். இன்று பெண்களில் பாதிப் பேர்கள் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக, கிராமப் புறங்களில் வசிக்கும் பெண்களில் பெரும்பாலோர் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். 'பெண்கள் ஒன்றும் செய்யவேண்டாம். ஆண்களே பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்வோமானால், நாமே அவர்களுடைய பிற்போக்கான நிலையை அகற்றிவிட முடியாது. அந்தப் பெண்களையும் வைத்துத்தான், நம்முடைய நாட்டில், குறிப்பாக, கிராமங்களில் உள்ள பிற்போக்கான நிலையை நாம் அகற்ற முடியும். இதிலே எல்லாவிதமான கவனமும் செலுத்தப்படுகிறது.



பெண்களின் நிலையை உயர்த்துவதிலே, பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைப்பெருக்குவதிலே, அவர்களே ஈடுபட்டு அவ்வாறு உயர்த்திக்கொள்ளவேண்டும் என்ற வகையிலே இன்று பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அது வற்புறுத்தப்பட்டும் வருகிறது. அந்த வகையிலேதான் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாதர் சங்கங்கள் நடத்துவது என்ற முறை இருக்கிறது.

### மாதர் சங்கம்

நான் எத்தனையோ மாதர் சங்கங்களுக்குப் போய்ப் பார்த்திருக்கிறேன். திருச்சியை அடுத்த ஒரு குக்கிராமத்தில் மாதர் சங்க நிகழ்ச்சியொன்றுக்கு நான் சென்றிருந்தேன். அன்று பகல் 12 மணிக்குத்தான் நான் அங்கு போக முடிந்தது. பன்னிரண்டு மணி வெயிலில் யார் இருக்கப்போகிறார்கள் என்றுதான் முதலில் நினைத்திருந்தேன். ஆனால் அங்கே போனபோதுதான் அங்குள்ளவர்கள் எவ்வளவு ஊக்கத்தோடு அங்கு காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிந்தது. பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள்—ஆண்கள்கூட ஏராளமாகக் கூடியிருந்தார்கள். பெண்மணிகள் அவ்வளவு உற்சாகத்தோடு மாதர் சங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிராமப் புறங்களில் உள்ளவர்கள், தங்களுடைய குடும்பத்தின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வ

தற்காக—விவசாய வேலையைச் செய்வதோடுகூட—இம்மாதிரி மாதர் சங்கங்களின் மூலமாக, தையல் வேலை போன்ற மாற்று வேலைகளில் ஈடுபட்டு, குடும்பத்தின் வருமானத்தை உயர்த்திக்கொள்வதற்கு முன் வருகிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். அந்த அளவு தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதற்குக்கூட நாம் அவர்களைப் பக்குவப்படுத்தவில்லை யென்றால், முன்னேற்றவில்லை யென்றால், ஆண்களே முழுதும் சம்பாதித்துப் போட்டுவிட முடியுமா? பெண்களுக்கும் தேவை அதிகம் இருக்கிறது. ஆண்களுக்கும் தேவை இருக்கிறது. எல்லாப் பொறுப்பையும் ஆண்களே ஏற்றுக்கொள்ள முடியாது.

## அன்புடன் உதவி

மாதர் சங்கங்கள் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகின்றன என்று நான் நிச்சயமாகச் சொல்வேன், நான் பார்த்த வரையில் சொல்வேன். கிராமங்களில் பெண்கள் அதில் ரொம்ப அக்கறையோடு உழைக்கிறார்கள் என்பதை எத்தனையோ இடங்களில் கண்டு நான் மகிழ்ச்சியோடு ஆச்சரியப்பட்டதுண்டு. மாதர் சங்கங்களை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் கண்டிருக்கிறேன்.

ஆகவே, வேறு அனுபவங்கள் ஒரு சிலருக்கு இருந்தாலும், அந்த அனுபவத்தையே எப்போதும் வைத்துக்கொண்டு, 'மாதர் சங்கம் வேண்டாம்' என்று சொல்வது சரியல்ல. 'மாதர் சங்கமே வேண்டாம்' என்று சொன்னாலும் அரசாங்கம் அவைகளை நிறுத்த முடியாது. வேண்டாம் என்று சொல்வது அப்படிச் சொல்பவருக்கே நல்லதல்ல. எங்காவது ஒரு மாதர் சங்கம் சரியாக நடைபெறவில்லை யென்றால், உண்மை



யான அக்கறையோடு, நம்பிக்கையோடு, அன்போடு அது நல்ல முறையில் நடக்கத்தக்க வகையில் உதவி செய்யவேண்டும்.

## ஆண்களின் ஒத்துழைப்பு

பெண்கள் மாத்திரம்—குறிப்பாகக் கிராமப் புறங்களில் இருக்கும் பெண்கள் மாத்திரம்—அவர்களே தங்களுடைய முன்னேற்றத்தில் ஈடுபட்டு எல்லாக் காரியங்களையும் சாதித்துவிட முடியாது. ஆண்களுடைய ஒத்துழைப்பும் அவர்களுக்குக் கட்டாயமாக வேண்டும்.

நகரங்களில் பெண்களுக்கான கிளப்புகள் போன்றவை பழைய காலத்தில் பொழுதுபோக்குக்காக அமைந்திருந்தன என்றாலும், இப்பொழுது நகரப் புறங்களிலுள்ள பெண்கள் கிளப்புகள் பொழுது போக்குக்கான இடங்களாக மட்டுமல்லாமல், அங்கே நல்ல உருப்படியான வேலைகளும் நடைபெறுகின்றன. எப்படியும் மாதர் சங்கம் ரொம்ப அவசியம். அதிலே எல்லோரும், நம்பிக்கைக் கொண்டுள்ளவர்கள் எல்லோரும் இன்னும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, மாதர் சங்கங்கள் சீரிய வகையில் இயங்குவதற்குத் தங்களுடைய ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

# 22. குற்றமும் தண்டனையும்

மனிதன் எத்தனையோ வகைகளில் தவறு செய்துவிடுகிறான். ஆனால் ஒவ்வொரு தவற்றுக்கும் ஏதாவது ஒரு நியாயம் கற்பித்துக் கூறுவது சரியல்ல. ஏனெனில் சிலர் சொல்கிறார்கள், திருட்டுக் குற்றத்திற்குப் பெரும்பாலும் காரணம் வறுமைதான், இல்லாத கொடுமைதான் என்று. அதே போல் வேறு பெரிய குற்றங்களைச் செய்வதுகூட, சந்தர்ப்பச் சூழ்நிலையில் நிதானம் இழப்பதால்தான் என்று சொல்லலாம். ஆனால் சட்டம், கோர்ட் ஆகியவை இதையெல்லாம் அனுசரிக்காமல் இல்லை, கொலை என்றவுடன், தூக்குத்தண்டனைதான் என்பதில்லை. நிலைமைக்கு ஏற்பக் குறைந்த தண்டனைகளும் தரப்படுகின்றன.

## சிறை நிர்வாகம்

ஆகையால் சட்டம், கோர்ட், தண்டனை, சிறை என்பவை இருப்பதன் நோக்கம் குற்றம் செய்வது தவறு என்ற உணர்வு ஏற்பட வேண்டும், இன்னொரு முறை அப்படிச் செய்யக்கூடாது என்ற எண்ணம் பிறக்க வேண்டும் என்பதும் அவர்களைப் பார்த்து மற்றவர்கள் திருந்தவேண்டும் என்பதும், பொதுவில் குற்றம் புரிவது தவிர்க்கப்படவேண்டும் என்பதுந்தான்,



ஆனால் ஒரு சிலர், ஒரு முறை சிறை சென்றாகிவிட்டது இனி மறுபடியும் சென்றாலும் அதே கேவலந்தான் என்ற முறையில் மனப்போக்கு கொண்டுவிடுகிறார்கள். அந்த மனப்போக்கு அடியோடு மாற வேண்டும். தவறு செய்தவர்களும் திருந்தி சமூகத்தில் நல்ல அந்தஸ்தோடு வாழமுடியும் என்ற எண்ணத்தை, நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டவேண்டும். இதுதான் நமது நோக்கம். அந்த முறையில் சிறை நிர்வாகமும் நடந்து வருகிறது.

கைதிகளைத் திருத்தி அவர்கள் விடுதலையானதும், நல்லவர்களாக நடந்துகொண்டு, சட்டத்தை மீறாமல் அமைதியான வாழ்வில், நல்ல முறையில் ஈடுபட வேண்டும் என்பதே சிறை நிர்வாகம் பொறுத்தவரை, அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது.

## தடுப்புச் சாதனம்

"ஏதோ சுதந்திரம் வந்துவிட்டது, சிறைக்கு அவசியம் இல்லை" என்ற வகையிலே சிலர் கருதுகின்றனர். எந்த நாட்டிலும் சிறை இருக்கத்தான் செய்கிறது.

சிறை என்பது ஒரு தடுப்புச் சாதனம். அங்கு கோரமாக நடத்தப்படவேண்டும் என்பது அல்ல. அங்கே மனிதாபிமானத்தோடும் மரியாதையோடும் அவர்கள் நடத்தப்படவேண்டுமென்பதை வரவேற்கிறேன். மரியாதைவேண்டும். அந்த மரியாதை அளிக்கப்படுகிறது. அங்கே ரொம்ப முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் கூறக்கூடும். ஆனால், முற்றிலும் முன்னேற்றம் வந்து விட்டதா என்றால் நான் சொல்ல முடியாது. முற்றிலும் முன்னேற்றம் வர வேண்டும் என்ற வகையிலேதான் இன்று அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

## கைதிகளுக்கு வேலை

கைதிகளின் சமூக அந்தஸ்து, வாழ்க்கை நிலை, செய்த குற்றம் ஆகியவைகளை உத்தேசித்து அவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றனர். அப்படி பிரிக்கப்பட்ட அந்தந்த வகுப்புக்கு ஏற்றபடி உணவு, உடை முதலிய விஷயங்களில் எல்லாச் சலுகைகளும் காட்டப்படுகின்றன. அரசாங்கத்தின் அனுமதி பெற்ற பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றை எல்லா வகுப்புக் கைதிகளும், அவர்கள் சொந்த செலவிலேயே வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

கைதிகளைச் சீர்திருத்தவேண்டும் என்னும் நோக்கத்துடனும், அதே சமயத்தில் அரசாங்க இலாக்காக்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளலாம் என்ற நோக்கத்துடனும் கைதிகளுக்கு வேலை தரப்படுகிறது. அவர்கள் விடுதலை யடைந்து வெளியில் வந்ததும் கௌரவமாக வாழ்க்கை நடத்த வாய்ப்புகள் அளிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன், தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் ஏற்றுதல் முதலிய தொழில்களில் பயிற்சி தரப்படுகிறது.

கைதிகளுக்கு அவரவர் உடல் நிலைக்குத் தக்க விதத்திலும், தண்டனை அடைவதற்கு முன்பாக அவர்கள் என்ன வேலையில் பழக்கப்பட்டிருந்தனரோ, அதையும் உத்தேசித்துத் தக்க வேலைகள் தரப்படுகின்றன.

## ஆலோசனை போர்டு

கைதிகளின் திறமை, மனப்பான்மை முதலியவைகளை உத்தேசித்து அவர்களுக்கு என்ன வேலைதரப்பட வேண்டும், எந்த விதத்தில் கல்விப் பயிற்சி முதலியன



அளிக்கலாம் என்பவைகளை நிர்ணயிப்பதற்காக கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், சென்னை ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகளில் போர்டுகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இந்த போர்டுகளில் சிறைத் தலைமை அதிகாரி, சீனியர் உதவி சர்ஜன், ஜெயிலர் முதலியோர் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

அரசாங்க வேலைகளைச் செய்வதற்கும் கைதிகள் அனுப்பப்படுகின்றனர். உற்பத்தியை அதிகரிக்க அவர்களுக்கு உற்சாகம் அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கைதிகளுக்கு "கிராச்சுவிட்டி" கொடுக்கப்படுகிறது.

சிறைகளில் ஒழுங்காக நடப்பவர்களுக்குச் சுமார் இரண்டு மாதம் வரை தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்று வரும் கைதிகள் விஷயத்தில், அவர்கள் ஓரளவு காலத்திற்குச் சிறையில் இருந்த பிறகு அவர்களை முன்னதாகவே விடுதலை செய்யலாமா என்பதைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காகவும் ஒரு போர்டு இருக்கிறது.

சிறைகளில் தக்க வைத்திய, சுகாதார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும் ஒரு ஆஸ்பத்திரியும் இருக்கிறது.

## கல்வி வசதி

கல்வி வசதிபெற ஆவலாய் உள்ள கைதிகளுக்குக் கல்வி அளிப்பதற்கு வழிகள் செய்யப்படுகின்றன. சில சிறைச்சாலைகளில் முதியோர் கல்வி அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக விசேஷப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்

டிருக்கின்றனர். திருச்சியிலுள்ள மத்திய சிறையில் படித்த கைதிகளைக் கொண்டே மற்ற கைதிகளுக்கு உயர்தரக் கல்வி அளிப்பதற்கு, முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ், ஒரு திட்டத்தை அரசாங்கம் ஆராய்ச்சி முறையில் வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி முன்பு இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குக் குறையாத தண்டனை அடைந்த கைதிகளுக்கு மட்டும் உயர்தரக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று இருந்ததை மாற்றி, இப்போது 6 மாதத்திற்குக் குறையாத தண்டனை பெற்ற கைதிகளுக்கும் இது மாதிரி கல்வி வசதி அளிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறைகளில் ஆரம்பத்தில் அனுமதிக்கப்படும் போது சுமார் 21·60 சத விகிதத்தினர்தான் கல்வி யறிவு உடையவர்களாய் இருக்கின்றனர்; ஆனால் விடுதலை அடைந்து செல்லும்போது சுமார் 67·86 சத விகிதத்தினர் கல்வி யறிவு பெற்றுத் திரும்புகின்றனர்.

பட்டப்படிப்பு உள்பட தேர்வுப் பரீட்சை எழுத விரும்பும் எல்லா வகுப்புக் கைதிகளும் அவரவர்கள் தகுதிகளுக்கேற்ப தேர்வு எழுத, அவர்களது, உறுதி மொழியின் பேரில் (பரோலில்) அவசியமான நாட்களுக்கு மட்டும் வெளியில் விடலாம் என்று அரசாங்கம் அனுமதிக்கிறது. இவர்கள் தங்கள் சொந்த உடையிலேயே சென்று பரீட்சைகள் எழுதலாம்.

## பிரசங்க போதனை

எல்லா வகுப்புக் கைதிகளுக்கும் மத சம்பந்தமாகவும் ஒழுக்க சம்பந்தமாகவும் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. அவரவர் மத சம்பந்தப்பட்ட பிரசங்கங்களையே [illegible] பிரசாரகர்கள் அனுமதிக்கப்படுகின்



றனர். சிறை ஓய்வு நாட்களின்போது சிறைச்சாலைகளின் நிர்வாக சம்பந்தமான சில வேலைகள் தவிர, மற்ற வேலைகளை அவர்கள் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்ற ஏற்பாடு இருக்கிறது.

சிறைகளைப் பார்வையிடும், "ஜில்லா மாஜிஸ்ட்ரேட்", "பொது சுகாதார டைரக்டர்", "ஜில்லா கல்வி அதிகாரி" ஆகியோர் தவிர பொது மக்களிலிருந்தும் சிலர் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இப்பார்வையாளர்களுக்குச் சிறைச்சாலையின் எந்தப் பகுதிக்கும் சென்று பார்வையிடவும், எல்லாக் கைதிகளையும் பார்த்து அவர்களுக்குக் குறைகள் ஏதாவது உண்டா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளவும், சிறைச்சாலை விதிகள், சட்டங்கள்படி நிர்வாகம் சரிவர நடைபெறுகின்றனவா என்று அறியவும், உரிமைகள் இருக்கின்றன.

## உதவிச் சங்கம்

விடுதலையடையும் கைதிகளுக்கு உதவி செய்யும் சங்கத்தின் மூலமாக, விடுதலையடையும் கைதிகளுக்கு அரசாங்கம் பல வழிகளில் உதவி வருகிறது. இச் சங்கத்திற்கு அரசாங்கம் ஆண்டுதோறும் 6,000 ரூபாய் மான்யமாக அளித்து வருகிறது. இச்சங்கம் நடத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் மொத்த மான்யமாக சில ஆண்டுகளுக்கு முன்பு, ரூபாய் 5,000 அளித்துள்ளது.

சிறைவாச நிலை வேகமாக மாறிக்கொண்டுதான் வருகிறது என்று உறுதியாகச் சொல்லக்கூடும். சிறையிலே வாழ்ந்த காலத்திலே மட்டுமல்லாமல் பின்னும் அப்போதைக்கப்போது சிறைக்குப் போய்ச் சுற்றிப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டன. அப்படி நான் பார்த்ததில் பல மாறுதல்

கள் ஏற்பட்டுக்கொண்டு வருவதை அறிவேன். எனினும், எல்லாக் குறைகளும் தீர்ந்து விட்டன, இன்னும் அகற்றுவதற்கு இடமில்லை என்று சொல்லவில்லை.

### சுத்தமான உணவு

உணவு விஷயத்தைப் பற்றி அவ்வப்போது குறிப்பிடப்படுகிறது. உணவு விஷயம் அப்படிக் கேவலமாக இல்லையென்று சொல்வேன். ஆனால் ரொம்ப சௌகரியமாக, அறுசுவையோடு கிடைக்கிறதா என்று கேட்டால், கிடைக்கிறது என்று சொல்ல முடியாது. ஆனால் வீட்டிலே இருக்கிறவர்களுக்குக் கூட அறுசுவையோடு எப்போதும் கிடைப்பதில்லை. சுத்தமான உணவு, நன்றாக உண்ணக்கூடிய உணவுதான் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது என்பதைப் பல சிறைகளில் பார்த்திருக்கிறேன். அப்படிப் பார்க்கும்போது உணவு விஷயத்திலேகூட இன்னும் சில குறைகளை நீக்க முடியும். இதை மனத்தில் வைத்துக் கொண்டு, மாற்றுவதற்குக் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம்.

சிறைகளிலே கூட்டம் பெருத்துவிட்டது என்று சொல்கிறார்கள். இன்று நான் மகிழ்ச்சியுடன் சொல்லுகிறேன் கூட்டம் குறைந்திருக்கிறது, அதிகமாகவில்லை.

### அரசியல் கைதிகள்

தற்காலம் வெகு சிலரே அரசியல் கைதிகளாக இந்த ராஜ்யத்தில் இருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். ஆனால் யாரை அரசியல் கைதிகள் என்று கூறுவது என்பது ஒரு பிரச்சினை என்றே கூறவேண்டும்.



அரசியல் நோக்கத்தோடு சட்டத்தை மீறி அல்லது சட்டத்தின்கீழ் குற்றம் செய்தால், தண்டிக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகள். ஆனால் அரசியல்வாதிகளாக இருக்கலாம், குரூரமான குற்றம் - கொலைக் குற்றம் - இதுவும் எங்கள் அரசியல் இலட்சியம் என்றுகூடச் சொல்லலாம் – குரூரமான குற்றங்கள், மற்றும் மக்களுக்குப் பலவிதத்திலே ஹிம்சை மட்டுமல்லாமல், அவர்களை மிகவும் அதிகமாகத் துன்புறுத்தக்கூடிய வகையிலே, குற்றங்கள் செய்துவிட்டு, நாங்கள் அரசியல்வாதிகளாக இருக்கிறோம், ஆகவே நாங்கள் அரசியல் கைதிகள், எங்கள் தண்டனையைக் குறைத்துவிட வேண்டுமென்றால் அதை முற்றும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

நீண்டகால தண்டனை அடைந்த கைதிகளின் நிலைமை அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்படுகிறது. எவ்வளவு தூரம் ரெமிஷன் (தண்டனை காலக் குறைப்பு) கொடுக்க முடியுமோ, அல்லது விடுதலை செய்யக்கூடுமோ, அது அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு, விடுதலை அளிப்பதோ அல்லது ரெமிஷன் கொடுப்பதோ கவனிக்கப்பட்டு வருகின்றது.

### திருப்தியோடு வேலை

சிறைச் சாலைகளைத் தொழிற்சாலைகளாக ஆக்க வேண்டும் என்று சொல்லப்படுவதுண்டு. நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். சிறைக்குச் சென்றவர்களுக்குத் தகுதியான ஒரு வேலை கற்றுக்கொடுத்து, அவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்படவேண்டும் என்ற அடிப்படையான நோக்கத்துடன் அவர்களிடம் வேலை வாங்கி, அவர்கள் மூலம் உற்பத்தியையும் ஓரளவு

பெருக்குவது என்பதுதான் சிறை நிர்வாகத்தின் நோக்கமாகும். அந்த வகையிலே பல தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

இதையெல்லாம் நான் நேரில் சென்று பார்க்கும் போது எனக்கு ஒரு கவலை ஏற்படுவது உண்டு. சிறந்த வகையிலே வேலை செய்கிறார்கள், திருப்தி யோடு வேலை செய்கிறார்கள் என்பதைக் கூட நான் காண்கிறேன். நல்ல சாதனைகளைச் சாதித்துக் காட்டுகிறார்கள். ஆனால் இவர்கள் சிறைச்சாலையி லிருந்து வெளியே போகும்போது, இவ்வளவு ஆற்றல் உள்ளவர்கள்,பயிற்சி பெற்றிருக்கிறவர்கள் இவைகளை நன்கு பயன்படுத்த வேண்டுமே என்பதுதான் எனக்கு அவ்வப்போது கவலையைக் கொடுக்கிறது.

## மீண்டும் குற்றம்

சிறையிலிருந்து விடுதலையாகிறவர்களுக்கு உதவி செய்யும் சங்கம் இந்த வகையில் குறிப்பிடத்தக்க சேவை செய்து வருகிறது. அதோடு இந்தச் சங்கம் ஒரு ஆராய்ச்சி நிலையமாக இருக்க வேண்டும். சிறை யிலிருந்து வெளியே வந்தவர்களின் மனத்துக்கேற்ற படி, ஆற்றலுக்கு ஏற்றவாறு, அவர்களுக்குத் தகுதி யான தொழில் கிடைக்கக்கூடிய வகையிலே கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு இந்தச் சங்கம் செயல்படும் போது, அரசாங்கம் அதற்கு வேண்டிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கும்.

ஆனால் ஒரு முறை சிறைத் தண்டனை அடைந்தவர் கள் அடியோடு முற்றிலும் திருத்தப்பட்டு, எல்லோரும் சிறந்த வாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள் என்று சொல் வதற்கு இல்லை. மீண்டும் மீண்டும் குற்றம் செய்கிற வர்கள் இருக்கிறார்கள். அதற்குச் சிறை நிர்வாகம்



மட்டும் பொறுப்பு அல்ல. வேறு காரணங்களும் உண்டு என்பதையும் உணர வேண்டும்.

## முக்கிய நோக்கம்

குற்றம் செய்கிறவர்கள் மீது வழக்குத் தொடுத்து, தண்டனைக்கு உள்ளாக்கி சிறையிலே அவர்கள் வைக் கப்படுகிறார்கள் என்றால் அவர்களை முற்றிலும் திருத் துவது என்பது அல்ல. திருத்தம்தான் அடிப்படை யான நோக்கம்; இருந்தாலும் குற்றம் செய்கின்றவர் களை அதைத் தொடர்ந்து செய்ய வொட்டாமல் தடுப் பதுதான் முக்கியமான எண்ணம், முக்கியமான இலட்சி யம். ஆனால், அதோடு சேர்ந்து, அவர்களைத் திருத்த வேண்டுமென்பது ஒரு அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

ஆகையால்தான் தொழிற்சாலைகள் பல அமைத்து, நல்ல வேலை கற்றுக் கொடுத்து அவர்களுக்கே வாழ்க் கையிலே ஒரு நம்பிக்கை ஏற்படக் கூடிய வகையிலே இன்று சிறை நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது.

## சிறையில் நாடகம்

சிறைவாசிகளே சேர்ந்து ஒரு சமூக நாடகம் நடித் ததை நான் ஒரு முறை பார்த்து மிகவும் சந்தோஷப் பட்டேன். மற்றவர்கள் எல்லாம் சிறைக்குள்ளே அடைக்கப்பட்டு நடிக்கப்பட்ட நாடகம் அல்ல. அதிலே பலர் ஆயுள் தண்டனை அடைந்தவர்கள். பலர் பள்ளிக் கூடத்தையே பார்க்காதவர்கள். ஆனால், அவர்களு டைய நடிப்பு, அவர்களுடைய பேச்சு எல்லாம் நாட கத்தையே தொழிலாகக் கொண்டவர்கள், நல்ல தமிழ் இலக்கியம் தெரிந்தவர்கள் எவ்வாறு நடிப்பார்களோ அத்தகைய சிறந்த வகையிலே இருந்தது. அத்தகைய பயிற்சி அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது, பயிற்சி ஏற்

பட்டிருந்தது மாத்திரமல்ல. அத்தகைய ஆற்றல் அவர்களிடம் அடங்கியிருக்கிறது என்பதை அன்று நான் அவர்களிடம் கண்டேன். உள்ளே அடங்கியிருக்கும் ஆற்றலை—அவர்கள் சிறையிலிருக்கும்போதே கூட—நல்ல வகையிலே பயன்படுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக்கொண்டு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

## பத்திரிகைப் படிப்பு

புத்தகங்கள் வாசிக்கவும், பத்திரிகைகள் வாசிப்பதற்கும் தகுந்த வசதிகள் செய்யப்படுகின்றன. பத்திரிகைகள் வாசிப்பதிலே கட்சிப்பாகுபாடு இல்லாமல் பத்திரிகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்ற வகையிலே நான் உறுதியாகக் கூறமுடியும். சில பத்திரிகைகளை வாங்கி, 200 பேர்களை ஒரு 'யூனிட்' ஆகக் கொண்டு இலவசமாகத் தரப்படுகின்றன. மேலும், சொந்தச் செலவில் வாங்குகிறவர்களுக்கும் வசதி அளிக்கப்படுகிறது. இன்னும் பத்திரிகைகள் படிப்பதற்கு வசதிகள் அதிகம் வேண்டும் என்றால், அதையும் அரசாங்கம் கவனிக்கும். சொந்தச் செலவில் புத்தகங்கள் வாங்கிப் படிப்பதற்குத் தடையில்லை. ஆனால், பொதுவாக, புத்தகங்களை வாங்கி வைத்து, இலவசமாக அவைகளைப் படிப்பதற்கு வசதியளிப்பதிலே அரசாங்கம் மேலும் கவனம் செலுத்தும்.

பொதுவாக சிறை நிர்வாகத்திலே உள்ள குற்றங்களைப் போக்கி, சிறையில் வாழ்கின்றவர்களைச் சிறந்த வகையிலே திருத்துகின்ற முறையிலேதான் இன்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

# 23. இளமையில் குற்றம்

வயது வந்தவர்கள் மட்டுமல்ல சிறுவர்களும் தவறு செய்கிறார்கள். அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டியதும் நமக்குள்ள முக்கியமான பொறுப்பு.

சாதாரணமாக, தவறு செய்யும் குழந்தைகளையும், அனாதைகளாக இருக்கும் குழந்தைகளையும் சிறையில் வைத்தால் அவர்கள் கெட்டுத்தான் போவார்கள். அவர்களைத் திருத்தக்கூடிய வழி அதுவல்ல.

குற்றம் புரியும் குழந்தைகளுக்குச் சவுக்கடி கொடுக்கும் முறை முன்பு இருந்து வந்தது. அந்த முறையை எடுத்துவிடுவதற்காகச் சட்டத்தில் பின்பு திருத்தம் செய்யப்பட்டது.

## சிறந்த பொக்கிஷம்

குழந்தைகள் நாட்டின் சிறந்த பொக்கிஷம். அவர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை; சில சமயங்களில் அவர்களுடைய பெற்றோர்கள்கூட அதற்குக் காரணஸ்தர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும், அவர்கள் தவறு செய்வதை நாம் சட்டை செய்யாமல் இருந்துவிட்டால், பிறகு அந்த நிலைமை சமூகத்திற்குப் பேராபத்தாக முடியும் என்று அறிகிறோம். ஆகையால் குழந்தைகள் தவறு செய்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளங்குற்றவாளிகள் திருத்தச் சட்டம் இப்போது அமுலில் இருந்து வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒரு ஜில்லா இளங்குற்றவாளிகள் சீர்திருத்த அதிகாரி இருக்கிறார். குற்றவாளிகள் அதிகமாக உள்ள சில ஜில்லாக்களில் அதிகப்படியான ஜில்லா அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## சீர்திருத்தும் வேலை

குழந்தைகளும், இளங் குற்றவாளிகளும், சர்டிபைட் அல்லது பார்ஸ்டல் பள்ளிகளிலிருந்து விடுதலையானதும் அவர்களைச் சீர்திருத்தும் வேலையில் இவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அதோடு ஆலோசனை போர்டின் சிபார்சின் பேரில் விடுதலையான கைதிகளையும் இவர்கள் கவனித்துக் கொள்கின்றனர். அவசியமானவர்களுக்கு மட்டும் தண்டனை அனுபவிக்கும் காலத்திலேயே இவர்கள் சில பரிசீலனைகளும் நடத்துகின்றனர்.

தற்போது நமது ராஜ்யத்தில் நான்கு அரசாங்க சர்டிபைட் பள்ளிகளும், ஒன்பது தனிப்பட்டவர்கள் வசமுள்ள பள்ளிகளும் இருக்கின்றன. அரசாங்கத்தின் வசமுள்ள பள்ளிகளிலுள்ள இளங்குற்றவாளிகளுக்கு எட்டாவது வகுப்பு வரை கல்வி அளிப்பதோடு தொழில் கல்வியும் சொல்லித் தரப்படுகின்றது. அவர்கள் விடுதலையானதும் கௌரவமான வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு இவ்விதம் செய்யப்படுகிறது. அவர்கள் விடுதலை அடைந்து ஒரு வேலையில் அமரும் வரையிலும் சர்டிபைட் பள்ளியுடன் இணைக்கப்பட்டிருக்கும் கைதிகள் கிளப்பில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

சீர்திருத்த நிலையங்களிலிருந்து விடுதலையாகும் கைதிகளைக் கவனிப்பதற்கும் அவர்களுக்குத் தங்க வச



திகள் அளிப்பதற்குமாக அரசாங்கத்தார் பெண்களுக்கென்றும், ஆண்களுக்கென்றும் இரண்டு நிலையங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகளும், பெண்கள் மீட்பு இலாகாவும் ஒரு தனி அதிகாரியின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை, வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் இளங்குற்றவாளிகள் நீதி மன்றமும், அவர்களைப் பராமரிக்கும் விடுதிகளும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பின்னர் கோயம்புத்தூர், தஞ்சாவூர், செங்கற்பட்டு ஆகிய ஜில்லாக்களிலும் இதே மாதிரி நீதி மன்றங்கள் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்தது.

பாளையங்கோட்டையில் உள்ள பார்ஸ்டல் பள்ளியில் சுமார் 650 இளங் குற்றவாளிகள் தங்க இடமிருக்கிறது. இங்கேயே எட்டாவது வகுப்பு வரை ஆரம்பக் கல்வி அளிக்கப்படுகிறது. மேலும் நெசவு, தையல் வேலை, தச்சு வேலை, கொல்லு வேலை, கட்டிட வேலை, புத்தகம் கட்டுதல், விவசாயம், கையால் காகிதம் செய்தல் முதலிய தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன.

## நல்ல பிரஜைகள்

தவறு செய்யும் குழந்தைகள் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டால், அவர்கள் நல்ல பிரஜைகளாவார்கள். ''சேவா சமாஜம்—பாய்ஸ் ஹோம்'' என்பது போன்ற ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஸேவா சமாஜத்திற்கு ஒரு சமயம் சென்றிருந்தேன். அங்கே, அனாதைகளாக இருந்த சிறு குழந்தைகள் இரண்டு—மூன்று ஆண்டுகளாகப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் திருந்தியதோடு ஒரு தொழிலும் கற்றுக்கொண்டு சம்பாதிக்கவும் ஆரம்பித்திருக்

கிறார்கள். அவர்கள் சம்பாதனையைச் சேர்த்து வைத்திருந்தார்கள். அவர்களில் மூன்று நான்கு பேர்கள் அவ்வாறு பணம் சேர்த்து வைத்திருந்தார்கள்; அந்தப் பணமெல்லாம் சிறு சேமிப்புப் பத்திரங்களாக வழங்கப்பட்டன. நான்தான் வழங்கினேன். ஒரு பையனுக்கு 750 ரூபாய்க்கும் மற்றொரு பையனுக்கு 500 ரூபாய்க்கும் பாண்டுகள் வழங்கினேன். தவறு செய்யும் குழந்தைகளைக் கவனித்து வந்தால் அவ்வாறு அவர்களைச் சீர்திருத்த முடிகிறது. எல்லாக் குழந்தைகளும் அவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வது சமூகத்திற்கு மிகவும் நன்மை பயக்கும்.

## சூழ்நிலையில் மாற்றம்

குழந்தைகள் நம்முடைய அரிய செல்வம். அந்தக் குழந்தைகளைச் சரிவரப் பாதுகாப்பது நம்முடைய கடமையும், பொறுப்பும் நன்மையும் ஆகும் என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். அரசாங்கமும் இதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

குழந்தைகள் தவறுதலாக நடந்துகொள்ளுகிறார்கள். அதற்குக் காரணம், இருக்கிற சூழ்நிலை என்பதையும் நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். சில குழந்தைகள் திக்கற்றவர்களாக இருக்கிறார்கள். வேறு சில குழந்தைகள் சூழ்நிலை காரணமாக சிற்சில குற்றங்களை, தவறுகளைச் செய்கிறார்கள்.

குழந்தைகளைப் பராமரிப்பவர்கள் அவர்களுக்கேற்றவாறு தனியாகக் கவனம் செலுத்த வேண்டும். எல்லாக் குழந்தைகளும் ஒரே ஸ்தாபனத்தில் பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால், இப்போதைய கருத்து, திக்கற்ற குழந்தைகளைத் தனியாகவும், குற்றம் செய்து அதற்காகத் தண்டிக்கப்பட்ட



குழந்தைகளைத் தனியாகவும் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்பது. இவர்களுக்கு விசாரணை கூட தனித்தனியாக இருக்கவேண்டும் என்பது. இவைகளெல்லாம் பற்றி இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## மனோதத்துவ நிபுணர்

குழந்தைகளின் மனோநிலை கவனிக்கப்பட வேண்டும். இதை நன்றாக அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ஒரு சிறந்த மனோநிலை ஆசிரியருடைய சேவையைக் கூட இன்று அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. இம்மாதிரி ஸ்தாபனங்களை யெல்லாம் இந்த நிபுணர் பார்வையிட்டு, இந்த ஸ்தாபனங்களில் உள்ள மேற்பார்வையாளர்களுக்குச் சில பயிற்சிகளையும் அளிக்கிறார்.

குற்றம் செய்கின்றவர்களைக் கூட, மனோநிலைக்கு ஏற்றவாறு, சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பிரித்து வைத்துக்கொள்ளுவது நலம் என்ற கருத்தை நான் வரவேற்கிறேன். அதை எவ்வளவு தூரம் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் கவனம் செலுத்த முடியுமோ, அவ்வளவு தூரம் அதை அமுலுக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

## புகைபிடிக்கும் கேடு

குழந்தைகள் புகைபிடிப்பது தவறு. அதை எப்படித் தவிர்ப்பது என்பதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம். பெற்றோர்களே ருசித்துப் புகைபிடிப்பதால், அவர்கள் வீட்டுக் குழந்தைகளை எப்படிப் புகைபிடிக்காமல் தடுப்பது என்பதுதான் பிரச்சினை. புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கும் தகப்பனார் பீடி குடிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கிறார். சில இடங்களில் பெண்கள்கூட குடிக்கத்

தொடங்கி யிருக்கிறார்கள். அப்படி யிருக்கும்பொழுது சட்டம் போட்டுக் குழந்தைகளைத் தடுப்பதுதான் சிரமம். பெற்றோர்கள் ருசித்து, அனுபவித்துக் குடிக்கும் பொழுது, தவறு என்று தெரிந்தாலும் குழந்தைகள் குடிப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

இதற்காக நாம் சட்டம் இயற்றிவிட்டால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றுவதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் முக்கியமாகப் பெற்றோர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். எவ்வளவுதான் சட்டம் செய்தாலும், எவ்வளவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தினாலும், பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை, சொந்த நிலைமையை உணர்ந்து குழந்தைகள்மீது கண்காணிப்பு செலுத்தவில்லை என்றால், எந்தச் சட்டமும் போதுமான பலன் அளிக்காது.

## பிச்சையெடுக்கும் இச்சை

குழந்தைகள் பிச்சை எடுப்பது வருந்தத்தக்க நிலைமைதான். நான் வட நாட்டிலே அவ்வளவு கூர்ந்து கவனிக்கவில்லை. ஆனால், நம் எல்லோருக்கும் மிகுந்த வருத்தத்தை அளிக்கக் கூடியது, பிச்சைக்காரர்கள் நம்முடைய நாட்டிலிருந்து படையெடுத்து வட நாட்டிற்குப் போய் அங்கே ஸ்தாபனம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான். இது பற்றி நான் முன்பு ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறேன். அங்குள்ள பிச்சைக்காரர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு டில்லியில் ஒரு கூட்டுறவு சங்கம் ஸ்தாபித்துக் கொடுப்பதற்கு ஒருவர் ஏற்பாடு செய்தார். ஆனால், நம்முடைய நாட்டிலிருந்து அங்கு சென்று பிச்சை எடுப்பவர்கள், "உங்களுக்கு ஏன் இந்தத் தொந்தரவு? எங்களை விட்டுவிடுங்கள். நாங்



கள் எங்கள் தொழிலை நடத்திக்கொண்டு வருகிறோம், கூட்டுறவுச் சங்கம் எங்களுக்குச் சரிப்பட்டு வராது" என்று சொல்லி விட்டார்கள்.

பிச்சை எடுப்பதற்காக அபராதம் போடுகிறார்கள். ஆனால், பிச்சையெடுத்தே சிலர் பணம் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிச்சை எடுப்பது நல்ல பயன் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அவர்களுக்கு வேறு தொழில் அவசியமில்லை என்று சொல்லுகிறார்கள். சிலர் இந்தப் பிச்சை எடுக்கும் தொழிலை விடுவதற்குத் தயாராக இல்லை. இந்த நிலையை நாம் அகற்றத்தான் வேண்டும்.

## குழந்தைகளைப் பயன்படுத்துவதா?

பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் இருக்கிறது. சட்டம் அமுல் நடத்தப்படுகிறது. பிச்சைக்கார விடுதிகள் இருக்கின்றன. நகரசபைகளுக்கும் "ஆங்காங்கு பிச்சைக்காரர் விடுதிகள் ஏற்படுத்துங்கள், அதற்கு அரசாங்கம் வேண்டிய ஆதரவு அளிக்கும்'' என்று சொல்லி யிருக்கிறோம்.

இதற்கெல்லாம் பொதுஜன அபிப்பிராயம் திரட்டப்பட வேண்டும். பிச்சை எடுக்கும் நிலைமை மிக மோசமானதுதான் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், பிச்சை எடுப்பது இல்லாமையென்ற காரணத்தினால் மட்டும் அல்ல. பிச்சை எடுக்கவில்லை என்றால் சிலருக்கு வேறு வேலை கிடையாது. வேறு வேலை இல்லாமல், பிச்சை எடுப்பதால் நல்ல வருமானம் வருகிறது. ஆகவேதான், இவர்கள் இப்படி இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும்—குழந்தைகளைப் பிச்சை எடுப்பதற்கு உபயோகப்படுத்த, பயன்படுத்தப் பார்க்கிறார்களே அதைத் தடுக்க வேண்டும்.

குழந்தைகளை அதற்குப் பயன்படுத்தக் கூடாது. அதற்கு நாம் இடங் கொடுக்கக்கூடாது.

## தனிக் குற்றம்

மற்றொன்று, போதைப் பொருள்கள், லாகிரி வஸ்துக்கள் இவைகளைக் கையாளுபவர்கள் குழந்தைகளைக் கொண்டு காரியங்களைச் செய்யக் கூடாது. அது அவர்களைக் கெடுத்துவிடும். பெற்றோர்கள் அல்லது அதில் ஈடுபட்டுள்ளவர்கள் பக்கத்திலேயே இருப்பதால் இவர்களுக்கும், நாமும் குடிக்கலாம் என்ற எண்ணம் வரும். இவ்விஷயங்களில் பெற்றோர்கள் மிகக் கவனமாக இருக்கவேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ, சட்டம் விளங்கியோ, விளங்காமலோ, திருட்டுத்தனமாகவோ, வெளிப்படையாகவோ குழந்தைகளை ஈடுபடுத்தினால் அது ஒரு தனிக் குற்றம். தண்டனைக்கு உள்ளாவார்கள்.

மத மாற்றத்திற்குக் குழந்தைகள் உட்படுகிறார்கள், அதைத் தடுக்கவேண்டும் என்கிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டியதுதான். ஆனால் இப்பொழுதும், குழந்தைப் பிராயத்தில் செய்யப்படும் எந்தத் தவறும், கட்டாயத்தால் செய்யப்பட்டது என்று நடவடிக்கை எடுக்கலாம். அதற்குத் தனிச் சட்டம் தேவையில்லை. மேலும், இந்த விஷயங்களில் அந்தந்த மதப் பற்றுள்ளவர்கள், சமயப் பற்றுள்ளவர்கள் சேர்ந்து, அதற்கென்று ஸ்தாபனம் வைக்கலாம். அப்படியிருந்தால், ஒருசமயத்தில் பற்றுள்ள குழந்தைகளை மத மாற்றத்திலிருந்து தவிர்க்க முடியும். சிலருக்கு அக்கறை இருக்கிறது. மற்றவர்களுக்கு அவ்வளவு சிரத்தை இருப்பதில்லை. எல்லோரும் குழந்தைகளைச் சீராக வளர்க்க முன்வர வேண்டும் என்பதுதான் நம் ஆவல்.



## சீரிய பணி

திக்கற்றவர்கள், ஏழைக் குழந்தைகளைப் பராமரிக்கும் விஷயத்தில் தேவஸ்தானங்கள், மடங்கள் உதவி செய்ய வேண்டும் என்றால், அதற்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லை. ஏற்கெனவே சிறிது அவர்களும் செய்து வருகிறார்கள். ஆனால், அதை இன்னும் அதிக அக்கறையோடு செய்ய வேண்டும் என்றால், அந்தந்தப் பிராந்தியத்தில் உள்ளவர்கள் அதிக அக்கறை கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டால் அந்தப் பணி சீரிய முறையில் நடைபெறும்.

ARCH… LIBRARY
EGMORE, MADRAS
110451